# தமிழியல்

# JOURNAL OF TAMIL STUDIES

## January 2015

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

திருவள்ளுவர் ஆண்டு 2045 - 2046, ஜய, மார்கழி - தை

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
Tharamani, Chennai - 600 113. Tamil Nadu, India.
ISSN No. 0022-4855 Vol. No.87 Issue : January 2015

# INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

## Board of Governors

## JANUARY 2015


CHAIRMAN

**Thiru. K.C. VEERAMANI**

Hon'ble Minister for School Education, Tamil Official Language, Archeology and Tamil Culture, Govt. of Tamil Nadu

**VICE-CHAIRMEN**

**Dr. M. Rajaram, I.A.S**

Secretary to Government
Tamil Development and Information Department, Govt. of Tamil Nadu.

Vice-Chancellor
University of Madras, Chennai.

Vice-Chancellor
Annamalai University, Annamalai Nagar.

Vice- Chancellor
Madurai Kamaraj University, Madurai.

Vice-Chancellor
Tamil University, Thanjavur.

**MEMBERS**

**SECRETARY TO GOVERNMENT**
Finance Department, Govt. of Tamil Nadu.

**Dr. F. GROS**
Former Director, French Institute of Indology, Pondicherry (IATR-Representative).

**DIRECTOR**
Central Institute of Indian Languages, Mysore.

**MEMBER SECRETARY**

**Dr. G. Vijayaraghavan**
Director, International Institute of Tamil Studies, Chennai.

# தமிழியல்

# JOURNAL OF TAMIL STUDIES

## January 2015

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
திருவள்ளுவர் ஆண்டு 2045 - 2046, ஐய, மார்கழி - தை

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
Tharamani, Chennai - 600 113. Tamil Nadu, India.
www.ulakaththamizh.org.in/E-mail : iits@tn.nic.in Phone: 22542992, 22542781/ Fax: 22541436
ISSN No. 0022-4855 Vol. No. 87 Issue: January 2015

# BOARD OF EDITORS


**Dr. G.L. HART**
Dept. of South and South East Asian Studies, University of California, U.S.A.(Retd.)

**Dr. A. VELUPILLAI**
Former Professor of Tamil, University of Jaffna, Srilanka.

**Dr. S.N. KANDASAMY**
Former Professor of Tamil, Tamil University, Thanjavur.

**Dr. Pon. KOTHANDARAMAN**
Former Vice-Chancellor, University of Madras, Chennai.

**Dr. G. VIJAYARAGHAVAN**
Editor-in-Chief

**Dr. B. RAJA**
Associate Editor

Editorial Board
**Dr. P. SELVAKUMAR**
**Dr. A. THASARATHAN**
**Dr. M.J. RABI SINGH**
**Kalaimamani MARAIMALAIYAN**

## பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| | முதன்மை ஆசிரியர் உரை | | 1 |
| 01. | பார்த்தலோமேயு சீகன்பால்கு ஐயர் | மு. கிருஷ்ணமூர்த்தி | 3 |
| 02. | ஆபிரகாம் பண்டிதர் | கோ. கணேஷ் | 5 |
| 03. | Thiruvalluvar - A Political Genius | *M.Rajaram* | 7 |
| 04. | Ancient Tamil inscriptions found | | 17 |
| 05. | இந்திய மொழிக்குடும்ப ஆய்வு : மரபிலக்கண, மொழியியல் பார்வைகளில் | ப. மருதநாயகம் | 18 |
| 06. | Some historical notes on the founding of the International Association for Tamil Research | *Amudhan Adigal* | 40 |
| 07. | தர்மராசரதத்துத் திருமால் சிற்பம் | சா. பாலுசாமி | 46 |
| 08. | The Relevance of Classical Tamil Literature to Humanity in the Third Millennium | *N.Murugaiyan* | 67 |
| 09. | Archeology exhibition to showcase Tamils' past | | 77 |
| 10. | Challenges of bilingual education: Higher Tamil in Singapore | *Kala S Retna, Seetha Lakshmi, Vanithamani Saravanan* | 78 |
| 11. | Two Chola period inscriptions found | | 94 |
| 12. | Tamil Scholars from Overseas | | 95 |
| 13. | இந்தியாவில் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பித்தல் அணுகுமுறைகள் | கு. சிதம்பரம் | 96 |
| 14. | List of Translations of Tamil Works | | 110 |
| 15. | டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம் | இரா. கலைக்கோவன் | 111 |
| 16. | Index of The Journal of Tamil Studies | பி. கவிதா | 114 |
| 17. | உலகத் தமிழாராய்ச்சி நிறுவன முனைவர் பட்ட ஆய்வேடுகள் | இரா. பெருமாள் சாமி | 119 |
| 18. | நூல் மதிப்புரை | த. தென்னவன் | 123 |
| 19. | Regulations for submission of research Papers | | 126 |

## REVISED SUBSCRIPTION

| | Within India | Outside India |
|---|---|---|
| Life Membership | Rs. 6000.00 | U.S.$. 200 or Rs. 12000.00 |
| Institutional Membership | Rs. 8000.00 | U.S.$. 250 or Rs. 15000.00 |
| Annual | Rs. 400.00 | U.S.$. 24 or Rs. 1400.00 |
| Single Copy | Rs. 120.00 | U.S.$. 7 or Rs. 400.00 |

## திருத்தியமைக்கப்பட்ட சந்தா விவரம்

| | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆயுள் சந்தா உறுப்பினர் | ரூ. 6000.00 | U.S.$. 200 (அ) ரூ. 12000.00 |
| நிறுவனச்சந்தா உறுப்பினர் | ரூ. 8000.00 | U.S.$. 250 (அ) ரூ. 15000.00 |
| ஆண்டு சந்தா | ரூ. 400.00 | U.S.$. 24 (அ) ரூ. 1400.00 |
| ஒரு படி | ரூ. 120.00 | U.S.$. 7 (அ) ரூ. 400.00 |

# முதன்மை ஆசிரியர் உரை

பேரன்புடையீர்,

வணக்கம்.

தமிழர்களையும் தமிழ் ஆர்வலர்களையும் தமிழ் அறிஞர்களையும் ஒருங்கிணைத்து உலகளாவிய நிலையில் தமிழாய்வின் தரத்தையும் வளர்ச்சியையும் பங்களிப்பையும் மேம்படுத்தும் வகையில் தொடங்கப்பட்ட உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு வித்திட்டவர் அருட்திரு. தனிநாயகம் அடிகளார். அதை உருவாக்கியவர் தமிழ்நாட்டின் மேனாள் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆவார்.

மேற்குறிப்பிட்ட நோக்கங்களின் செயல்பாட்டிற்கு உறுதுணையாக Tamil Culture எனும் இருமொழி (தமிழ், ஆங்கிலம்) இதழ் அடிகளாரால் தொடங்கப்பட்டது. அதன்வாயிலாக ழான் பிலியோசா, கமில் சுவலபில், எம். ஆந்திரனோவ், எம்.பி. எமனோ, ஆர்னோ லேமன், கியூப்பர், ஜே. ஆர்.மார், எட்கர் கோல்ட்டன், சி.ஆர். பாக்சர், தாமஸ் பர்ரோ முதலிய மேனாட்டறிஞர்கள் தமிழியல் ஆய்வில் ஈடுபட்டனர். மேலும் தமிழியல் ஆய்வை உலகத் தரத்திற்கு எடுத்துச்சென்றனர்.

அத்தகைய தமிழ்ப்பணி செய்த Tamil Culture-இன் மறுஅவதாரமாகச் செயல்பட்டுவரும் Journal of Tamil Studies (தமிழியல்) எனும் இதழ் பரந்துபட்ட பல்துறைத் தமிழ் ஆய்வை வளப்படுத்தவும் விரிவுபடுத்தவும் **2015**-ஆம் ஆண்டு சனவரி முதல் முத்திங்கள் இதழாக வெளிவரும் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த இதழில் அறிமுகத்திற்கும் ஆய்வுக்கும் பயன்படும் வகையில் மேலைநாட்டுத் தமிழறிஞர்களின் வரிசையில் சீகன்பால்கு ஐயரையும் இந்தியத் தமிழறிஞர் வரிசையில் ஆபிரகாம் பண்டிதரையும் குறித்த வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கங்களுடன் அவர்களின் தமிழ்ப் பங்களிப்பையும் இடம்பெறச் செய்துள்ளோம். இத்தகைய அறிஞர்களின் வாழ்க்கையும் தமிழ்ப்பணியும் தொடர்ந்து காலவரிசையில் இடம்பெறும்.

*தமிழியல்* இதழ் 85இல் குறிப்பிட்டதற்கிணங்க உலகளாவிய நிலையில் இயங்கும் தமிழ் அமைப்புகளின் பட்டியலை அடுத்துத் தமிழ்த் தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளும் நிறுவனங்களையும் துறைதோறும் சிறந்து விளங்கும் தமிழ் அறிஞர்களையும் உலகிற்கு அறிமுகப்படுத்தும் வகையில் இரு அறிவிப்புகள் இடம்பெற்றுள்ளன.

மேற்குறித்த தமிழ்த் தொடர்பான நிறுவன வரிசையில் முதலாவதாக டாக்டர் இராசமாணிக்கனார் ஆய்வு மையம் குறித்த செய்தி இந்தஇதழில் இடம்பெற்றுள்ளது. மேலும், பழங்காலக் கல்வெட்டுக்கள் குறித்த நாளிதழ் செய்திகளும் ஆய்வுலகப் பார்வைக்காகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தியாவிலும் அயல்நாடுகளிலும் நிகழும் தமிழ்க் கற்பித்தல், தமிழ் ஆய்வுகள், கருத்தரங்குகள் குறித்த செய்திகளையும் *தமிழியலில்* இடம்பெறச் செய்யும் பகுதியும் தொடர்ந்து இடம்பெறும்.

மேலும், தொடரும் எனச் சென்ற இதழில் குறிப்பிட்ட

1. சங்க இலக்கிய மொழிபெயர்ப்புகள் குறித்த பட்டியல்
2. உலகளாவிய நிலையில் சிறந்து விளங்கும் தமிழறிஞர்களின் பட்டியல்
3. *தமிழியல்* இதழில் இதுவரை வெளிவந்த ஆய்வுக்கட்டுரைகளின் பட்டியல்
4. உலகத் தமிழாராய்ச்சி நிறுவன முனைவர்பட்ட ஆய்வேடுகளின் பட்டியல்.

ஆகியன இந்த இதழிலும் தொடரும்.

மேலும் இந்த இதழ்முதல், முத்திங்களாகத் *தமிழியல்* வெளிவர இருப்பதால் சந்தாத் தொகை சற்றுக் கூடுகிறது. எனவே சந்தாதாரர்கள் தங்களின் ஒத்துழைப்பை நல்கிட கேட்டுக்கொள்கிறேன்.

இந்த இதழ் உலகத்தரம் வாய்ந்த இதழ்களுக்கு இணையாகத் *தமிழியல்* (*Journal of Tamil Studies*) மேலும் உருவாவதற்குத் தங்களின் கருத்துகளையும் ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் பெரிதும் விரும்பும்...

கோ.விசயராகவன்

# மேலைநாட்டுத் தமிழறிஞர்கள் வரிசை

## 01. பார்த்தலோமேயு சீகன்பால்கு ஐயர் *(1682 -1719)*

*மு. கிருஷ்ணமூர்த்தி*



*சீகன்பால்கு ஐயர்*

பார்த்தலோமேயு சீகன்பால்கு ஐயர் செர்மன் நாட்டில் 'புல்ஸ் நித்ஸ்' என்னும் சிற்றூரில் பார்த்தலோமேயு, கேத்தரினா அவர்களுக்கு மகனாக 1682ஆம் ஆண்டு பிறந்தார். சீகன்பால்கு ஐயர் குழந்தையாக இருந்தபோதே பெற்றோரை இழந்தார். தனது மூத்த சகோதரியின் அரவணைப்பில் வளர்ந்தார். சீகன்பால்கு இளம்வயதிலேயே கல்வியிலும் இறை பக்தியிலும் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்.

### கல்வியும் பணியும்

சீகன்பால்கு 1694ஆம் ஆண்டு தம்முடைய பன்னிரண்டாம் வயதில் புகழ்மிக்க காமென்ஸ் பள்ளியில் சேர்ந்தார். தம் நண்பருடன் இணைந்து திருமறையை ஆய்ந்தார். பெர்லினில் உள்ள பிரடெரிக் வெர்டர் உயர்நிலைப் பள்ளியில் ஆயத்தக் கல்வியை முடித்தார். பிறகு பல்கலைக்கழகத்தில் சேர்ந்து பயின்றார். மெர்ஸ்பர்க்கிலும் எர்பட்டிலும் சிறிது காலம் ஆசிரியராகப் பணியாற்றினார். 'புல்ஸ்நித்ஸ்' என்ற நகரில் 1715ஆம் ஆண்டு மரியாடாரதியா என்ற அம்மையாரைத் திருமணம் செய்து கொண்டார்.

### சீகன்பால்கு இந்தியா வருகை

சீகன்பால்கு பெர்லினில் தங்கியிருந்தபோது, டென்மார்க் மன்னன் நான்காம் பிரடெரிக் ஆணைப்படி, வெளிநாடுகளில் கிறித்துவ சமயத்தைப் பரப்புவதற்கான பணியை மேற்கொண்டார். சீகன்பால்குவுடன் அவருடைய நண்பர் என்ரிக் புளுட்சோவும் அவருடன் வருவதாக ஒப்புக்கொண்டார். 1705 ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 29 ஆம் நாள் 'ஞான இளவரசி' என்ற கப்பலில் இருவரும் இந்தியாவுக்குப் புறப்பட்டனர். 1706 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 9 ஆம் நாள் தமிழ்நாட்டிலுள்ள தரங்கம்பாடியில் வந்து இறங்கினர்.

### தரங்கம்பாடியில் தமிழ்ப்பயிற்சி

தமிழ் மக்களிடையே சமயப்பணிபுரிவதற்கு, இருவருக்கும் தமிழ் மொழிப்பயிற்சி தேவைப்பட்டது. எல்லப்பன் என்ற 70 வயது ஆசிரியரை அணுகித் தமக்குத் தமிழ் கற்பிக்குமாறு கேட்டுக் கொண்டனர். ஐயரும் அவர் நண்பரும் மணலைப் பரப்பி விரலினால் எழுதித் தமிழ் எழுத்துக்களைக் கற்றுக் கொண்டனர். சீகன்பால்கு பனை ஓலைகளில் எழுதப்பட்டிருந்த பாடங்களைப் படிக்கத் தொடங்கினார். எட்டு மாதங்களில் தமிழில் எழுதவும், படிக்கவும், சொற்பொழிவு ஆற்றவும் திறமை பெற்றவராக விளங்கினார்.

### சீகன்பால்குவின் தமிழார்வம்

சீகன்பால்கு தமிழின் மீது கொண்ட ஆர்வத்தால் இரண்டு ஆண்டுகள் ஜெர்மன், இலத்தீன் நூல்களைப் படிக்காமல் தமிழையே படித்ததாகக் கூறுகின்றார். தமிழில் உள்ள சொற்களையும் சொற்றொடர்களையும் மனப்பாடம் செய்தார். தாம் முன் படித்தறியாத தமிழ் நூல்களைப் படித்தறிந்தார். அழகப்பர் என்பவர் போர்க்சுக்கீசு, டேனிஸ், ஜெர்மன், டச்சு ஆகிய மொழிகளை நன்கு அறிந்தவராகவும், மொழி பெயர்ப்பாளர்கவும் விளங்கக்கூடியவர். எனவே பன்மொழி அறிஞரின் துணைக்கொண்டு தமிழ்க் கையெழுத்துப் படிகளைப் படித்தார் சீகன்பால்கு. அதேபோன்று விவிலியத்தையும் தமிழ்மொழியில் முதன்முதலில் மொழிபெயர்த்தவரும் இவரே.

## தமிழ் வளர்ச்சிக்குச் சீகன்பால்குவின் பங்களிப்பு

சமயத்தைப் பரப்புவதற்காகத் தமிழகம் வந்த சீகன்பால்கு தமிழ்நாட்டு மக்கள் ஓலைச்சுவடிகளில் எழுதும் கடினத்தை உணர்ந்தார். எனவே சீகன்பால்கு தமிழ்நாட்டிற்கு அச்சு இயந்திரம் ஒன்றை வரவழைத்துத் தமிழில் அச்சிட வேண்டும் என்று எண்ணினார். இங்கிலாந்தில் உள்ள கிறித்துவ அறிவு விளக்கச் சங்கத்திற்கும் (Society of Promoting Christian Knowledge), ஜெர்மன் நாட்டிலுள்ள தமது நண்பர்களுக்கும் அச்சு இயந்திரம், அச்சு எழுத்துகள், காகிதம் ஆகியவற்றை அனுப்பி உதவுமாறு கடிதம் எழுதிக் கேட்டுக் கொண்டார். அவர்களும் அதனை ஏற்று அச்சு இயந்திரம், அச்சு எழுத்துகள், காகிதம் ஆகியவற்றைத் தரங்கம்பாடிக்கு அனுப்பிவைத்தனர். இவையனைத்தும் 1713ஆம் ஆண்டு ஜூன் திங்களில் தரங்கம்பாடி வந்து சேர்ந்தன.

இந்தியாவில் பொறையாற்றில் காகிதத் தொழிற்சாலையை ஆரம்பித்தார். சீகன்பால்கு தமிழ்நாட்டில் பாமர மக்கள் முதல் படித்தவர் வரை அனைவரும் படித்துப் பயன்பெறும் வகையில் முதன் முதலில் அச்சுப் புத்தகங்களை அச்சிட்டு வழங்கினார். இந்தியாவில் முதன் முதலில் அச்சேறிய மொழி தமிழ்மொழி, தமிழை அச்சு எந்திரத்தில் ஏற்றிய பெருமை சீகன்பால்குவையே சேரும். நீதிநெறி வெண்பா, கொன்றைவேந்தன், உலகநீதி ஆகிய தமிழ் நூல்களை இலத்தீன், ஜெர்மனி போன்ற மொழிகளில் மொழி பெயர்த்துள்ளார்.

## அகராதி தொகுத்தல்

சீகன்பால்கு ஐயர் அவர்கள் தமிழில் வழக்கற்ற சொற்களையும் வழக்கிலுள்ள சொற்களையும் தொகுத்து 20,000 சொற்கள் அடங்கிய *தமிழ்-இலத்தீன் அகராதியை* வெளியிட்டார். பின்பு வரலாறு, சமயம், தத்துவம், மொழியியல், மருத்துவம் தொடர்பான சொற்களையும் இந்த அகராதியில் சேர்த்தார். 17,000 சொற்களும், மரபுத் தொடர்களும் அடங்கிய செய்யுள்தமிழ் அகராதியும் தொகுத்து வெளியிட்டார்.

## இலக்கியப் படைப்புகள்

1708ஆம் ஆண்டு ஆகஸ்ட்டிலேயே சீகன்பால்கு பாதிரியார் *“தமிழ் நூற்றொகை”* என்ற நூலை (Bibliotheca Malabaria) எழுதினார். இப்பட்டியலில் இந்திய சமய, தத்துவ நூல்களுள் மூன்று அடங்கியுள்ளன. அவை ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு கண்டுபிடிக்கப் பெற்று அச்சிடப்பட்டன. அவை பின்வருமாறு:

01. தமிழர் கடவுள்களின் வரலாறு (சென்னை,1867).
02. தமிழர் சமயம் (ஆம்ஸ்டர்டாம்,1926).
03. சிறுகட்டுரைகள் (ஆம்ஸ்டர்டாம்,1930).

## தமிழ்மொழியின் சிறப்புக் குறித்துச் சீகன்பால்குவின் கருத்து

சீகன்பால்கு ஐயர், ‘நான் முதலில் தமிழ்மொழி தரங்குறைந்தது எனவும் தமிழருடைய வாழ்வு இழிவானது எனவும் கருதினேன். தமிழ்மொழியைக் கற்றேன். தமிழ் இலக்கியங்களை ஆராய்ந்தேன். தமிழரோடு கலந்து உரையாடினேன், உறவாடினேன். பின்னர் என் கருத்தை முற்றிலும் மாற்றிக் கொண்டேன். தமிழ் இலக்கண வரம்புடைய மிகப் பழமையான மொழி. “தமிழர்கள் புலமைமிக்கவர்கள்” என்று தம் கருத்தை ஆணித்தரமாகக் கூறினார்.

திருமண வாழ்க்கையின் பின்பு தம் துணைவியாரோடு தமிழ்நாட்டில் தரங்கம்பாடியில் பல சமயப்பணியோடு தமிழ்ப் பணியையும் சிறப்பாகச் செய்த ஐயர் அவர்கள் 1719 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 23 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார். அவரது உடல் தரங்கம்பாடி புதிய எருசலேம் ஆலயத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அன்று முதல் இன்று வரை தரங்கம்பாடி எருசலேம் ஆலயம் சீகன்பால்கு ஐயரின் நினைவுச் சின்னமாக விளங்குகிறது.

---

*தொகுப்பு: மு. கிருஷ்ணமூர்த்தி, முனைவர் பட்ட ஆய்வாளர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-600 113.*

## இந்தியத் தமிழறிஞர்கள் வரிசை

### 02. ஆபிரகாம் பண்டிதர் *(1859 - 1919)*

*கோ. கணேஷ்*


ஆபிரகாம் பண்டிதர்

தமிழ் இசை வரலாற்றெழுதியலில் மிக முக்கிய ஆளுமையாகத் திகழ்பவர் ஆபிரகாம் பண்டிதர். இவர் கி.பி. 1859இல் திருநெல்வேலி மாவட்டம் தென்காசியை அடுத்த சாம்பவர் வடகரை என்ற சிற்றூரில் முத்துச்சாமி - அன்னம்மாள் அம்மையார் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தவர். பண்டிதர் இசைத்துறை சார்ந்து மட்டுமல்லாமல் புகைப்படத்துறை, சித்த மருத்துவம், வேளாண்மை, அச்சுத்துறை எனப் பன்முகத் தளத்தில் செயல்பட்டவர்.

1874இல் பண்டிதர் திண்டுக்கல்லில் இருந்த நார்மல் ஆசிரியப் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்து பயிற்சி பெற்றார். அப்போது அப்பள்ளியின் தலைவராக இருந்த அருட்திரு. யார்க்(Rev. York) அவர்களின் உறவு பண்டிதரை வேறுதளத்திற்கு நகர்த்தியது. குறிப்பாக, யார்க் தம்முடைய மாதிரிப் பள்ளியிலே பண்டிதரை ஆசிரியராகப் பணிநியமனம் செய்தார். மேலும் புகைப்படக் கலையில் தமக்கிருந்த புலமை அனைத்தையும் பண்டிதருக்குக் கற்றுக்கொடுத்து, 1909இல் பண்டிதர் இலண்டனிலுள்ள அரசு கலைச் சங்கத்தின் அங்கத்தினராகத் (Member of the Royal Society of Arts, London) தேர்ந்தெடுக்கக் காரணமாக இருந்தார்.

இதற்கிடையே 1882இல் ஞானவடிவு பொன்னம்மாள் என்பவரை மணம் முடித்தார். இவரும் ஆசிரியப் பயிற்சி முடித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே இருவரும் அருட்திரு. பிளேக் அவர்களைச் சந்தித்துச் சீமாட்டி நேப்பியர் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினர். பிற்காலத்தில் பண்டிதரின் சித்த மருத்துவ ஆராய்ச்சியில் தம்மை முழுவதுமாக அர்ப்பணித்துக் கொண்டார். மேலும் பண்டிதர் பொருளாதார ரீதியாக வளம்பெறவும் அவர் பல துறைகளுக்குப் பயணப்படவும் துணைநின்றவர் அம்மையார். இவர் 1911இல் இயற்கை எய்தினார். பண்டிதர் பிறகு கோயில் பாக்கியம் அம்மாள் என்பவரைத் திருமணம் செய்து கொண்டார்.

**சித்த மருத்துவம்**

பண்டிதர் திண்டுக்கல்லில் இருந்து பழனி செல்லும் பாதையில் சித்தர்கள் பலரைச் சந்தித்துச் சித்த மருத்துவத்தில் பயிற்சி பெற்றார். அதில் முக்கியமானவர் கருணானந்த மகரிஷி என்பவர். அவரை 1877இல் சுருளிமலையில் சந்தித்து மூலிகைகளின் தன்மைகளைக் கேட்டறிந்து, அவை குறித்து மிக விரிவான ஆராய்ச்சியைப் பண்டிதர் செய்தார். அவ்வாராய்ச்சியின் மூலம் கண்டுபிடித்த மருந்துகளுக்குக் 'கருணானந்த சஞ்சீவி மருந்து' எனப் பெயரிட்டு 1890களில் விற்பனை செய்தார். அதன்மூலம் கிடைத்த வருவாயைக் கொண்டு 1899இல் தஞ்சையில் 100 ஏக்கர் நிலத்தை வாங்கினார். அதற்குச் சித்தரின் நினைவாகக் கருணானந்தபுரம் தோட்டம் என்றே பெயர் வைத்தார்.

**வேளாண்துறையும் ராவ்சாஹேப் பட்டமும்**

இந்தப் பின்புலத்தில் ஏற்கெனவே பண்டிதருக்கு காலனியக்காரர்களிடம் இருந்த தொடர்பு, அரசுடன் இணைந்து தம்முடைய நிலத்தில் புதுவிதமான

பயிர்வகைகளைப் பயிரிட வழிகோலியது. உதாரணமாக, புதுவகைக் கரும்பு, ஆஸ்திரேலியச் செந்நிறச் சோளம் போன்றவற்றைப் பயிரிட்டார். மேலும் புதுவகையான பல பயிர்வகைகளைப் பரிச்சார்த்த முறையில் பயிரிட்டார். அதனைக் கேள்வியுற்று 1908இல் சென்னை ஆளுநராக இருந்த சர் ஆந்தர் லாலி என்பவர் பண்டிதரின் தோட்டத்திற்குச் சென்று பண்டிதரின் பணிகளை வியந்து பாராட்டினார். அதன்பிறகே 1909இல் (ஐரோப்பியர்களுடன் மிக நெருக்கமாக இருப்பவர்களுக்கே வழங்கப்படும்) விருதுகள்: *'ராவ் சாஹேப்'* பட்டம் பண்டிதர் அவர்களுக்கும் வழங்கப்பட்டது. (1912இல் சென்னை ஆளுநருக்கு நன்றிகூறும் விதமாக லாலி அச்சுக்கூடம் என்ற பெயரில் அச்சுக்கூடம் ஒன்றை நிறுவினார்).

**இசை ஆராய்ச்சியும் அச்சுத்துறையும்**

திண்டுக்கல்லில் கந்தசாமிப்பிள்ளை என்பவர் அச்சுக்கூடம் ஒன்றை நடத்தி வந்தார். பண்டிதர் அவரோடு நட்புறவு கொண்டிருந்தார். இது பின்னாளில் அவர் சொந்தமாக மின் இயந்திரத்துடன் கூடிய அச்சுக்கூடத்தை நிறுவ வழிகோலியது. மேலும், பண்டிதர் கந்தசாமிப் பிள்ளையிடம் சோதிடம் கற்கும் வாய்ப்பையும் பெற்றார். அதன் மூலமாகச் சோதிடத்திற்கும் இசைக்குமான தொடர்பை ஆராயத்தொடங்கினார். அதற்காகத் தமிழ் இசை குறித்து அறியப் பலரிடமும் சென்று பல இசைக்கருவிகளைக் கற்றுக் கொண்டார்.

அதன் தொடக்கமாக 1907இல் *கருணாமிர்த சாகரத்திரட்டு* என்ற நூலை ஹோ அண்டு கம்பெனி வாயிலாக வெளியிட்டார். மேலும் மேலும் இசைத்துறை சார்ந்த ஆய்வையும் வாசிப்பையும் விரிவுபடுத்தினார். இவருடைய வாசிப்பில் ஏற்பட்ட சிக்கலை அல்லது ஐயத்தைப் போக்கிக் கொள்ள அத்துறை சார்ந்த புலமையாளர்களை ஓரிடத்தில் சந்திக்க வைக்க வேண்டும் என நினைத்தார். இதற்கு 1912 முதல் 1916 வரையிலான காலக்கட்டங்களில் தஞ்சையில் தம்முடைய தோட்டத்தில் (சொந்தச் செலவில்) ஏழு இசை மாநாடுகளை நடத்தினார். அம்மாநாட்டிற்கு ஒவ்வொரு துறையிலும் பாண்டித்தியம் பெற்ற வித்துவான்களையும் கலைஞர்களையும் அழைத்து விவாதித்தார்.

இந்தப் பின்னணியில் தனது லாலி அச்சுக்கூடத்தின் வழியாக 1917இல் *கருணாமிர்த சாகரம்* என்னும் 1200 பக்கங்கள் கொண்ட (முதல் பகுதி) நூலை வெளியிட்டார். (இரண்டாம் பகுதியை, 1919 பண்டிதரின் இறப்புக்குப் பின், அவர் எழுதி வைத்திருந்த மூன்று பாகங்களோடு நான்காம் பாகத்தை அவருடைய மகள் மரதகதவல்லி அவர்கள் எழுதி 1946இல் வெளியிட்டார்). இதன்மூலம் தமிழர்கள் தம் இசைப்பண்பாட்டை, அதன் அடையாளத்தை எவ்வாறு இழந்து நிற்கிறார்கள், அது எந்த வகையில் வேறுவொரு பண்பாட்டோடு, அவர்களுக்கான அடையாளமாக மாறிப்போனது என்பது பற்றியான மிக விரிவான ஆய்வுகளைத் தமிழ் ஆய்வுலகம் செய்ய வேண்டிய தேவையை இந்நூல் உணர்த்துகிறது.

இந்திய வரலாற்றெழுதியலில் எவ்வாறு தென்னிந்திய வரலாறு, குறிப்பாகத் தமிழ்ப் பண்பாட்டு வரலாறு மறைக்கப்பட்டு சமஸ்கிருத பண்பாடாகக் கட்டமைக்கப்பட்டதோ, அவ்வாறே தமிழ் இசை வரலாறு, இன்று கருநாடக இசையாகவும், வட இந்திய (ஹிந்துஸ்தானி) இசையாகவும் முன்மொழியப்படுகிறது.

---

*தொகுப்பு: கோ.கணேஷ், முனைவர்பட்ட ஆய்வாளர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை 600 113.*

# 03. Thiruvaḷḷuvar - A Political Genius

*M.Rajaram*

**Essence of Thirukkuṟaḷ:**

Human life comprises of three components namely personal life, family life and social life. Thiruvaḷḷuvar has defined these three components in his Thirukkuṟaḷ. The first component deals with 'Virtue' which explains various principles to be followed in the life of an individual. The component on 'Wealth' enumerates various aspects of social life. The component on 'Love' speaks on the nuances of love and married life between a man and wife, vis-a-vis the society they live in.

Thiruvaḷḷuvar describes in crystal-clear terms his political philosophy in the canto on 'Wealth'. Thirukkuṟaḷ, the rarest of the rare ancient literature possesses enormous wealth in it. Its vision is beyond the boundaries of race, language, religion, etc and suits all lands, times and ages. Simply, Thirukkuṟaḷ deals with the art of living.

The chief traits Thiruvaḷḷuvar prescribes for the rulers are those to be possessed by people at large. Those bestowed with head and heart should wield the reign of the nation, the ideal democracy.

**Four pillars of Democracy**

The Executive, Legislature, Judiciary and the Media are the four pillars on which the current democratic structure is built.

The qualifications prescribed by Thiruvaḷḷuvar for ministers, envoys and spies are invariably required for the officials holding various positions in the present executive set up. The jurisprudence evolved by Thiruvaḷḷuvar in olden days is relevant in the present context also.

Though Thiruvaḷḷuvar has not provided a separate chapter for media, he has broadly enunciated a few guidelines to be followed by the media.

The following couplets under the chapter "Seeking the help of the Great", stand exemplary.

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்" (குறள் 448)
Iṭippāṟai illāta ēmarā maṉṉaṉ
Keṭuppār ilāṉum keṭum.

---

***Dr. M. Rajaram** is currently working as a Secretary to Government, Tamil Development and Information Department, Government of Tamil Nadu. He is an exceptional IAS with a Post Graduate Degree in English Literature, Education and Law. In addition, he holds a Doctorate Degree. His efficiency in Civil administration has brought him many prestigious awards from the Government notably the 'Best Collector Award' for service to the disabled in Tanjore district. He has brought out the beautiful work of English translation of Thirukkuṟaḷ for which Dr.Abdul Kalam, Former President of India, has paid a very well-deserved tribute.*

A guard-less sovereign with none to caution
Even without foes will come to ruin.

(The King without men to rebuke and guard him will perish even without enemies to destroy him.)

"இடிக்கும் துணையாரை ஆள்வாரை யாரே
கெடுக்கும் தகைமை யவர்" (குறள் 447)

iṭikkum tuṇaiyārai āḷvārai yārē
keṭukkum takaimai yavar.

No enemy can bring any ruin to him
Who has friends to rebuke him.

(No enemy can destroy a man who has friends to censure him when he errs.)

In a democracy, whenever the state falters it is seers of wisdom and social gentry and the media that raise voice of criticism. Thiruvaḷḷuvar insists that great men and scholars should take up the above responsibility.

Having clarified the duties and responsibilities of the four pillars in democracy, Thiruvaḷḷuvar has evolved the political principles that are applicable for all ages.

**Country**

Thiruvaḷḷuvar prescribes basic features for a nation in several couplets. In the chapter titled, "Country", he highlights various features of a good country in the following couplets.

"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு" (குறள் 731)

taḷḷā viḷaiyuḷum takkārum tālvilāc
celvarum cērvatu nāṭu.

That alone is a country which has unfailing yields
Men of virtue and nobles of great riches.

(An ideal country should possess farmers with unfailing harvests, virtuous scholars and wealthy men.)

Not only that, his definition of a good country extends as follow.

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு" (குறள் 734)

uṟupaciyum ōvāp piṇiyum ceṟupakaiyum
cērātu iyalvatu nādu.

Flourishes the country which is free
From hunger, plague and enmity.

(A country, which is free from excessive hunger, epidemics and dreaded enemies, prospers.)

Thiruvaḷḷuvar does not stop with defining the features of a good country. He also says that countries fall despite immense wealth in the absence of good governance. He says,

"ஆங்குஅமைவு எய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்துஅமைவு இல்லாத நாடு" (குறள் 740)
āṅkuamaivu eytiyak kaṇṇum payamiṉṟē
vēntuamaivu illāta nāṭu.
If a land lacks love between king and subjects
All its blessings are worthless.

(All the above gifts of a country are quite useless if there is no harmony between the king and the subjects.)

In the above couplet Thiruvaḷḷuvar candidly advocates the principles of democracy.

Thiruvaḷḷuvar strongly condemns tyrannical rule. There will be no freedom of thought and speech. People feel suffocated. Though the country is full of wealth, the people are scared and long for peace.

A ruler should be free from vices. He should shun the guidance of vile and bad company or else he will lose the kingship.

Thiruvaḷḷuvar alerts the ruler saying:

"அல்லல்பட்டு ஆற்றாது அழுதகண்ணீர் அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை" (குறள் 555)
allalpaṭṭu āṟṟātu alutakaṉ ṉiralṉṟē
celvattait tēykkum paṭai.
The unbearable tears shed by the oppressed
Are files to wear out the wealth amassed.

(The unbearable tears of the oppressed are weapons that destroy the wealth of a king.)

**Just Rule**

The principles enunciated by Thiruvaḷḷuvar in the component on 'Wealth' are nothing but a political philosophy. The couplets in which these directions are enshrined are not limited to one nation or to one era.

Be it a monarchy or a democracy the political principles of Thirukkuṟaḷ are equally applicable.

Thiruvaḷḷuvar pronounces the essential qualities of a leader or king in his couplets.

A leader or a king should be easily accessible to the common people to voice their grievances and demands. He should avoid harsh words.

Thiruvaḷḷuvar speaks of the qualities of a leader as below:

"காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்" (குறள் 386)

kāṭcikku eḷiyaṉ kaṭuñcollaṉ allaṉēl
mīkkūṟum maṉṉaṉ nilam.

"The world extols the land of the ruler
With easy access and words sweeter."

(The world praises and obeys the king who is soft-spoken and generous in giving.)

First of all, peace should prevail in a country and a suitable economic policy should be evolved so as to earn, accumulate, protect and evenly distribute the wealth among all. Maintenance of law and order and economic development should go hand in hand. This could be accomplished only in good governance.

The ideology is revealed by Thiruaḷḷuvar in his couplets.

"குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு" (குறள் 544)

kuṭitaḻī'ik kōlōccum mānila maṉṉaṉ
aṭitaḻī'i niṟkum ulaku.

"The world is at the feet of the benevolent ruler
Who reigns with love for people's welfare."

(The world respects the king who rules justly for the welfare of the people.)

"அறன்இழுக்காது அல்லவை நீக்கி மறன்இழுக்கா
மானம் உடையது அரசு" (குறள் 384)

aṟaṉ iḻukkātu allavai nīkki, maṟaṉiḻukkā
māṉam uṭaiyatu aracu.

Who fails not in virtue, avoids evils and is bold,
Is a king honourable and dignified.

(A noble king avoids vices; he is a man of virtue, boldness and dignity.)

The era of Thiruvaḷḷuvar had been a monarchical age. The social life of people revolved around the king. Justice and the Law of the Nation were spelt out from the pronouncements of the king. Thiruvaḷḷuvar clarifies the same as below:

"அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல்" (குறள் 543)

antaṇar nūṟkum aṟattiṟkum ātiyāy
niṉṟatu maṉṉavaṉ kōl.

For virtue and the wise men's texts
The king's sceptre is the basis.

(The king's just rule provides the basis for Holy Scriptures and right conduct.)

The ideals of Thiruvaḷḷuvar are apt to the present day democracy also.

The third pillar in a democracy is Judiciary. The role of the judiciary is not limited to the settling of disputes of individuals and communities but also rendering justice on various issues. It plays a vital role in settling the disputes among states. The role and functions of the judiciary are well defined in Thirukkuṟaḷ, as follows:

"ஓர்ந்து கண்ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய்வஃதே முறை" (குறள் 541)

Ôrntu kaṉṉōṭātu iṟaipurintu yārmāṭṭum
Tērntuceyvahtē muṟai.

Enquiring, favouring no one, being impartial
Consulting and rendering justice is just rule.

(Just rule is to probe, favour none, be unbiased, deliberate and render justice.)

In certain complex matters, judges deliver their verdicts after deep deliberations. This view is lucidly expressed in Thirukkuṟaḷ.

While appointing persons in certain key posts, the norms to be adopted are also highlighted by Thiruvaḷḷuvar. This is the supreme example of good governance.

"நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப் படும்" (குறள் 511)

Naṉmaiyum tīmaiyum nāṭi nalampurinta
taṉmaiyāṉ āḷap paṭum.

Choose and use those who comprehend
Good and bad, and love to do good

(One should choose and employ men who can weigh good and bad, and love to do only positive things.)

To decide the fitness of candidates for important assignments, one can learn a lot from Thirukkuṟaḷ, as amply brought out in the following couplet.

"குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்" (குறள் 504)

kuṇamnāṭik kuṟṟamum nāṭi avaṟṟuḷ
mikaināṭi mikka koḷal.

Analyse good and bad qualities
Strike a balance and choose.

(The ruler should weigh the merits and demerits of the people and judge them accordingly by merit.)

**Government**

A Government should be sovereign and governance should be carried out by wise counsels. Thiruvaḷḷuvar suggests various measures to prevent crimes. Various ways to prevent crimes should be formulated.

Acting with deliberation, assessing strength, choosing time, assessing the place, delivering justice, evaluating and employing men effectively are a few essential criteria that are insisted by Thirualḷuvar for a good administrator.

Thiruvaḷḷuvar also emphasizes on good security and financial management, assessing the power of enemies and the necessity of company of the wise counsels. Apart from these, Thiruvaḷḷuvar also delves deep into various aspects of the state such as ministry, power of speech, purity, firmness in action, reading mental psychology, knowing the Assembly, fearlessness, etc.

Thiruvaḷḷuvar also speaks on the need of a mighty and dedicated army and amity with the neighbouring countries.

Thiruvaḷḷuvar prescribes noble birth and perfection as qualities of good governance. He detests and abhors poverty and meanness and upholds farming and health as marks of good governance. These are the norms on which the present day democratic system also rests.

In ancient days, the entire life of people completely depended on the ruler. In as much as he guarded the people, there were peace and amity in the country. The people regarded the just king as god.

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்" (குறள் 388)

muṟai ceytu kāppāṟṟum maṉṉavaṉ makkaṭku
iṟaiyeṉṟu vaikkap paṭum.

People regard the king as God
For just rule and guard.

(If a king administers justice and protects his subjects, he will be regarded as god.)

Similarly, Thiruvaḷḷuvar says that in a country where the ruler is just, there will be seasonal rains and good harvest. Thiruvaḷḷuvar also enumerates various qualities that a good ruler should possess in the following couplets:

"படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு" (குறள் 381)

paṭai, kuṭi, kūḻ, amaiccu, naṭpu, araṇ āṟum
uṭaiyāṉ aracaruḷ ēṟu.

Army, subjects, wealth, ministers, all ;s, forts
Who has these six is a lion among mo:archs.

(An ideal king shall possess army, people, wealth, council of ministers, friends and forts.)

Be it a democracy or monarchy, the essential features required of a government has been very lucidly given by Thiruvaḷḷuvar. Defence, Home, Finance, Human Resources Development, Parliamentary Affairs and External Affairs, welfare and prosperity of its citizens are considered to be very important portfolios.

Efficiency in governance depends on its several resources, most importantly, human resources. This is very aptly described in the following couplet:

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்" (குறள் 517)

itaṉai itaṉāl ivaṉmuṭikkum eṉṟāyntu
ataṉai avaṉkaṇ viṭal.

This deed, by these means, if he can perform
Test him; if convinced, assign it to him.

(Only after evaluating the task, the means and the person to do it, the task should be assigned to him.)

**Financial Management**

Thiruvaḷḷuvar explains the ways and means to a budget. He also teaches how to prepare a budget. The following couplet amply illustrates this:

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு" (குறள் 385)

iyaṟṟalum īṭṭalum kāttalum kātta
vakuttalum vallatu aracu.

Acquiring, gaining, saving and sharing treasure-
Efficiency in these marks an able ruler.

(Acquiring, storing, protecting and distributing wealth are the duties of an able king)

Though Thirukkuṟaḷ was authored during monarchy, it is well applicable even in democratic set-up. Good governance relies on the methods of distribution of funds to the appropriate welfare schemes.

**Diplomacy**

The executive wing of administration refers to the council of ministers. Likewise, ambassadors and spies are also part and parcel of the administration. Thiruvaḷḷuvar has defined three important characteristics for ambassadors as under:

"அன்பு அறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுஉரைப்பார்க்கு
இன்றி யமையாத மூன்று" (குறள் 682)

aṉpu aṟivu ārāynta colvaṉṉai tūtu'uraippārkku
iṉṟi yamaiyāta mūṉṟu.

Kindness, intelligence and astute eloquence
These three are an envoy's essential traits.

(Kindness, intelligence and power of expression are the three essential qualities of an ambassador.)

It is very well applicable to the ambassadors of the present day.

**Army**

Thiruvaḷḷuvar elaborates on the importance of army in two chapters, namely Greatness of Army and Military Might.

"மறம்மானம், மாண்ட வழிச்செலவு, தேற்றம்
எனநான்கே ஏமம் படைக்கு" (குறள் 766)

maṟammāṉam, māṇṭa vaḻiccelavu, tēṟṟam
eṉanāṉkē ēmam paṭaikku.

Valour, honour, tradition and loyalty
Are the defence of an army.

(Valour, honour, glorious tradition and loyalty are the safeguards of a powerful army.)

In the history of the world, no one could forget the Vietnam War. The imperialistic U.S. troops attacked the weaker nation Vietnam, but failed. Though Vietnam, not mighty, there were four valid reasons for braving the American troops. Similarly, Libya also braved the aggressive forces of Italy in the Second World War. Both the weaker nations did not lose the battle. Consequently, the U.S. was compelled to withdraw their troops. Even in recent times the U.S had invaded Iraq and Afghan, suppressed Palestine but failed to find any remedy; it confronted Cuba but is gaining wisdom for a compromise.

Likewise, Italy led by Mussolini had to give up the greedy invasion of Libya. The essential qualities for an army have been elaborately dealt with in Thirukkuraḷ. It will suffice if a country displays its military powers to frighten any country that throws a challenge against it. It is like a warning signal to problem creators.

The aforesaid instances are evidenced by the predictions of Thiruvaḷḷuvar:

"சிறைநலனும் சீரும் இலர்எனினும் மாந்தர்
உறைநிலத்தோடு ஒட்டல் அரிது" (குறள் 499)

ciṟainalaṉum cīrum ilareṉiṉum māntar
uṟainilattōṭu oṭṭal aritu.

It's hard to attack enemies in their place
Tho' they lack fort and force.

A few years ago, the Indian Government conducted a nuclear test in Pokhran in the state of Rajasthan. It sent a warning signal to Pakistan, which was providing shelter to the extremists.

The team led by Dr. Abdul Kalam conducted the secret nuclear test. All the great powers of the world were taken aback. The news about the nuclear test sent shocking waves across the continents including super powers like the U.S.A. Even the bigger nations started recognizing India as a big force and resorted to soft-pedalling. Thiruvaḷḷuvar describes the might of a real military force as follows:

"ஒலித்தக்கால் என்ஆம் உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும்" (குறள் 763)

olittakkāl eṉām uvari elippakai
nākam uyirppak keṭum.

A hostile pack of rats may make sea-like noises
But they vanish when a cobra hisses.

(A pack of rats disappears before a hissing cobra. Likewise, a weak army vanishes before a brave army.)

**Thiruvaḷḷuvar for all ages**

Thiruvaḷḷuvar insists on the essential ethical values for good governance. Thiruvaḷḷuvar's political ideologies do not stop with governance, politics, ministry, envoy, spy, and army but also cover the rights and duties of citizens, etc. Many advanced countries have demonstrated to the world that by sheer hard work, perseverance and smartness, they could reach greater heights.

*"ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்*
*நீள்வினையால் நீளும் குடி" (குறள் 1022)*

āviṉaiyum āṉṟa aṟivum eṉairaṇṭiṉ
nīḷviṉṉiyāl nīḷum kuṭi.

One's lineage grows by one's ceaseless acts
Based on effort and profound genius.

(Untiring effort and ripe wisdom are the two basic needs to promote one's family.)

Thiruvaḷḷuvar speaks out almost all aspects of ethics, statecraft, citizenship, etc. in myriad forms.

Some significant aspects those are unique to Thirukkuṟaḷ, which are rare to be found in other ancient or modern literature, epics or treatise on ethics, are purity of action and magnanimity to adversaries:

*"கடிந்த கடிந்துஒரார் செய்தார்க்கு அவைதாம்*
*முடிந்தாலும் பீழை தரும்" ( குறள் 658)*

kaṭinta kaṭintuorār ceytārkku avaitām
Muṭintālum piḻai tarum.

Those daring to do deeds forbidden
May gain but meet with affliction.

(Righteousness and justice are essential ingredients even in efforts and activities towards noble causes. Fair means are important in seeking gains. Ends cannot justify means.)

*"வலியார்க்கு மாறுஏற்றல் ஓம்புக ஓம்பா*
*மெலியார்மேல் மே(வு)க பகை." (குறள் 861)*

valiyārkku māṟuēṟṟal ōmpuka ōmpā
meliyārmēl mē(vu)ka pakai.

Avoid conflict with enemies more powerful
Cherish enmity with the less powerful.

"நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும்
பண்புஉள பாடுஅறிவார் மாட்டு" (குறள் 995)

nakaiyuḷḷum iṉṉātu ikaḻcci pakaiyuḷḷum
paṇpuuḷa pāṭuaṟivār māṭṭu.

Even in jest, words of contempt hurt
Even to foes, the kind are polite.

"பகைநட்பாக் கொண்டுஒழுகும் பண்புடையாளன்
தகைமைக்கண் தங்கிற்று உலகு" (குறள் 874)

pakainaṭpāk koṇṭuoḻukum paṇpuṭaiyāḷaṉ
takaimaikkaṇ taṅkiṟṟu ulaku.

The world abides by the greatness of rulers
Who turn their foes into allies.

(The object and purpose of being invincible in defence preparedness, is primarily to convert even adversaries to friendship to maintain peace, and not to pride glory, gaining victory in wars.)

Thiruvaḷḷuvar's vision is a world sans deceit, sabotage, conflicts and wars; peace to prevail in virtues and prosperity. It is not the perception of Thiruaḷḷuvar to glorify wars.

Thiruvaḷḷuvar's philosophy on politics is relevant today, even after 20 centuries. His words of wisdom have universal appeal and enjoy a world-wide recognition. No doubt, Thirukkuraḷ will stay forever in the minds of people so long as men can think and eyes can see and will give life to all.

## Bibliography

1. Dr.M.Rajaram, *Changing Faces of School Inspection.*
2. ____... *Manora (English & Tamil).*
3. ____... *HRD in Educational Administration (கல்வி மேலாண்மையில் மனித வள மேம்பாடு).*
4. ____... *Towards Quality in Educational Administration.*
5. ____... *Who will Bell the Cat?*
6. ____... *Elemental Warriors.*
7. ____... *Korea-Uzhaippum Uyarvum (கொரியா-உழைப்பும் உயர்வும்).*
8. ____... *Food for Thought.*
9. ____... *Passport for Success-Examination Tips.*
10. ____... *Blossoms in English.*
11. ____... *The Yellow Line .*
12. ____... *Towards Better English.*
13. ____... *Kalvi Poongavil Chinthanai Pookkal (கல்விப் பூங்காவில் சிந்தனைப் பூக்கள்).*
14. ____... *Pasumai Chinthanaigal (பசுமைச் சிந்தனைகள்).*
15. ____... *Bosses - The Good, the Bad and the Ugly.*

## 04. Ancient Tamil inscriptions found



**A PIECE OF HISTORY:** Ninth century Tamil inscriptions with consonants found in Pudukkudi village in Thanjavur district. Photo: M. SRINATH

Special Correspondent

THANJAVUR: Nearly 15 ancient Tamil inscriptions with consonants inscribed on stone during since the ninth century have been found at Pudukkudi, a village situated on the border of Thanjavur and Tiruchi districts.

They were recovered during the renovation of an old Siva temple in the village.

Kudavayil Balasubramanian, historian, archaeologist and epigraphist of Thanjavur, who verified the inscriptions, told The Hindu that the inscriptions began in the ninth century and continued till the Mutharaiyar, Chola and Vijayanagara dynasties.

Some of the inscriptions were in the form of verse, and consonants had dots, a special striking feature.

The name of the village was mentioned as Nangur in the inscription of Aditya Karikalan made during 960 A.D.

It mentions that a Mutharaiyar had donated 240 goats for lighting a lamp.

The other inscriptions speak about the donations made for the idols of Amara Vidangka Devar, Uma Risha- bandikar and Ganapthy and also to the temple employees. An inscription belonging to the 16th century mentions the name of the village as 'Meecengili Nattu Pudukkudi.'

---

*Source: The Hindu, 28th October 2008.*

# 05. இந்திய மொழிக்குடும்ப ஆய்வு : மரபிலக்கண, மொழியியல் பார்வைகளில்

ப.மருதநாயகம்

I

மலையாள மொழி பற்றிய எல்லிசின் (F.W.Ellis) ஆய்வேட்டை ஆய்வுக்குறிப்புகளுடன் பதிப்பித்த ஏ.சி. பர்னெல் (A.C.Burnell) எல்லிசை ஒப்பீட்டு மொழியியலின் தந்தை என்று அழைத்தல் தகும் என்பார். ஐரோப்பாவில் ஒப்பீட்டு மொழியியல் பாப் (Bopp) என்பார் வெளியிட்ட Conjugations System எனும் நூலோடு தொடக்கம் பெற்றதென்றும், 1816-இல் இறந்த எல்லிஸ் அதனைப் பார்த்திருக்க வாய்ப்பில்லையென்றும், எனவே இத்துறையில் எல்லிஸ் முன்னோடியாகக் கருதத்தக்கவர் என்றும் குறிப்பிடுவார்.

The above dissertation (on Malayalam by Ellis) is of remarkable historical interest, for (taken with the essay on Telugu) it proves that before 1816 Mr Ellis had already foreseen the possibility of comparative philology, not only as regards the so-called Aryan tongues, but also in respect of the Dravidian . . . He must, then, in future, be considered one of the originators of one of the most remarkable advances in science in this century. His unfortunate end-he was poisoned by accident - prevented his doing much, for he was only forty when he died, but he cannot be robbed of his due fame by the success of others more lucky than he was. (P. 156)

ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தின் பாட்லியன் நூலகத்தில் போப் அடிகளாரால் வைக்கப்பட்டுள்ள எல்லிசின் கையெழுத்துப்பிரதி முதல் பக்கத்தில் அவரது கீழ்க்கண்ட திட்டத்தைக் குறிப்பிடுகிறது:

| | | |
|---|---|---|
| Part the First | : | On the Nations by whom the Tamil language is spoken |
| Part the Second | : | On the Tamil language |
| Part the Third | : | On the Tamil Literature |
| Part the Fourth | : | On the connection of Things Tamil with other languages. |

அவர் தமிழ்மொழி, இனம், இலக்கியம், பண்பாடு ஆகியவை பற்றி விரிவாகவே எழுத முனைந்திருந்தார் என்பதை இக்குறிப்பு வெளிப்படுத்தும். ஆனால் இச்சிறு ஏட்டில் அவர் கையெழுத்தில் திருக்குறளின் நான்கு அதிகாரங்களின் மொழிபெயர்ப்பும்,

*Prof. P. Marudhanayagam - Having earlier served as Professor and Head , Dept. of English, Pondicherry University and as Director, Pondicherry Institute of Linguistics and Culture, served as a Consultant, Dept. of Translation, Central Institute of Classical Tamil, Chennai. His specialization being comparative literature and literary theory. He has written 20 books in English, which include critical articles on Tamil, English, American and Canadian literature. Email ID: pmarudanayagam@yahoo.com*

(1) An Essay on the Hebrew Syntax

(2) An Account of Pradaba Roothran Royer who reigned in the City of Orungal

(3) A Document in Canarese translated into English

(4) Facsimile of the Copper Grant belonging to the Jew of Cochin

எனும் தலைப்புகளைக் கொண்ட ஆங்கிலக் கட்டுரைகள் மட்டும் இடம் பெறுகின்றன. இவையே அவர் நான்கு தென்னிந்திய மொழிகளிலும் எபிரேயம், சமஸ்கிருதம் ஆகியவற்றிலும் அரிய புலமை பெற்றிருந்தார் என்பதை நிலை நாட்டும்.

தொடக்கத்திலேயே அவர் சொல்லும் இரண்டு கருத்துகள் அன்னார் தமிழ்மொழி, இலக்கியம் ஆகிய இரண்டையும் ஆழ்ந்து நோக்கத் தொடங்கிவிட்டார் என்பதைத் தெளிவுபடுத்தும்.

The Tamil is basically connected with that family of languages of which the Hebrew, probably the most ancient and the Arabic certainly the most polished... The resemblance in terms includes some of most frequent occurrence and which in all languages are expressed by words of native derivation - 'appen' and 'ammen' or without the termination 'ab' and 'am' are the same as Hebrew 'ab', Chaldaic 'ab' and the Arabic 'abu', the Hebrew 'am' and the Arabic 'amu'......

Among the various and excellent works in which the Tamil language abound to a degree excelled by no Asiatic and by few European languages none are more remarkable to us than what may be described as treating on the (nature) of human existence.... the various natural forms and conditions of this life.

*(தமிழானது அடிப்படையில் எபிரேயம், அரேபியம் ஆகிய மொழிகளின் குடும்பத்தோடு நெருங்கிய தொடர்புடையது. அவற்றுள் உறவுப்பெயர்களில் ஒற்றுமையைக் காணலாம். அப்பன், அம்மன்; எபிரேயம்: அப், அம்; அரேபியம்: அபு, அம்மு. மனிதவாழ்வைப்பற்றிப் பேசுகின்ற தமிழ் இலக்கியங்கள் தரத்திலும் அளவிலும் பாராட்டிற்குரியவை; அவற்றை ஒத்தவை ஆசிய மொழி எதிலும் இல்லை; ஐரோப்பிய மொழிகளில் மிகச்சிலவே ஒப்பிடத்தக்கன.)*

கீழ்க்கண்ட தலைப்பை முதல் பக்கத்தில் கொண்ட அச்சேறிய நூலொன்றும் பாட்லியன் நூலகத்தில் கிடைக்கிறது:

Three Treatises on Mirasi Right
by the late
Francis W. Ellis
Collector of Madras, A.D. 1817
Blackburne
Resident at Tanjore 1804
Sir Thomas Munro
Governor of Madras 1824

Printed by D.R.L.C. Connor, at the Christian
Knowledge Society's Press, Church St. Vepery, 1852.

தென்னிந்தியச் சமுதாய வரலாற்றை எழுத முயல்வார்க்கும் இந்நூல் பெரிதும் பயன்படும். மூன்று கட்டுரைகளில் எல்லிசின் கட்டுரையே நீண்டதும் அரிய ஆய்வுக்குறிப்புகள் கொண்டதுமாகும். மிராசி உரிமை பற்றிய சட்ட நுணுக்கங்களை ஆராய்வதோடு அவரது கட்டுரை சில சட்டங்களை ஆங்கிலத்திலும் தென்னிந்திய மொழிகளிலும் கூறும்போது ஏற்படும் இடர்ப்பாடுகளையும் தெளிவுபடுத்துகிறது. சட்ட மொழியாகத் தமிழையும் தெலுங்கையும் எவ்வாறு கையாள வேண்டுமென்பதையும் அவை சட்டமொழிகளாகப் பயன்படுத்தப்பெற வல்லவை என்பதையும் எல்லிஸ் விளக்குகிறார்.

தெலுங்கு மொழி எழுத்துக்களைத் தட்டச்சு செய்வதற்காக எளிதாக்கும் வண்ணம் எவ்வாறு மாற்றியமைக்கலாம் என்று ஒரு கட்டுரையில் விளக்குவார்.

To give a just idea of the difficulties generally thought to be in the way of imitating the Tellinga Characters with types and clearly to point out the easy method of obviating them, it will in the first place be necessary to take a cursory review of the peculiarities of the Tellinga alphabet.

எல்லிசின் தெலுங்கு மொழி இலக்கணம் பற்றிய கட்டுரையும் அலெக்ஸாண்டர் கேம்ப்பெல் (Alexander Campbell) என்பார் எழுதிய தெலுங்குமொழி இலக்கணம் பற்றிய ஆய்வேடும் தெலுங்குமொழி சமஸ்கிருதத்தினின்றும் பெறப்பட்டது அன்று என்பதை நிறுவுதற்குப் போதுமான சான்றாதாரங்களைத் தந்துள்ளன. கேம்ப்பெல் தமது ஆய்வில் தெலுங்கு மொழியின் அடிப்படைச் சொற்கள் (Core Vocabulary) சமஸ்கிருதத்தினின்றும் பெறப்பட்டவை அல்ல என்பதைச் சுட்டிக் காட்டுகிறார். உடல் உறுப்புகள், உணவு வகைகள், மிகவும் பயன்படுத்தப்பெறும் பாத்திரங்கள், உடைகள், வீட்டின் பகுதிகள், உறவுப் பெயர்கள் ஆகிய யாவும் தெலுங்கு மொழி வடமொழிச் சார்புடையது அன்று என்பதை எடுத்துக்காட்டும். கோல்புரூக் (Colebrooke), கேரி (Carey) ஆகிய இரண்டு மேலை அறிஞர்கள் தெலுங்கு வடமொழிச் சார்புடையது என்று வாதிட்டிருந்ததை அவரால் உறுதியாக மறுக்கமுடிந்தது. எல்லிசின் கட்டுரை அதற்கும் ஒருபடி மேலே சென்று தமிழிலும் கன்னடத்திலும் உள்ள அடிப்படைச் சொற்களும் வடமொழிச் சொற்களிலிருந்து வேறுபட்டவை என்பதையும், இம்மூன்று தென்னிந்திய மொழிகளும் ஒற்றுமைக் கூறுகள் மிகுந்தவை என்பதையும் நிலைநாட்டியது. எல்லிசின் இச்சாதனையைப் பாராட்டும் டிராட்மன் (Trautmann),

It would be difficult to overstate the difficulty and importance of this achievement: for the Dravidian languages are shot through with Sanskrit loans from two millennia of exposure to Sanskrit and it is hard to see that this is a later accretion and not the groundwork of those languages. The critical methodological problem of the new

linguistic science that was being constructed at Madras at the same time as it was being established in Europe, by Bopp and Rask, was to find a way to discriminate cognates from loan words, the former being the clues to the genealogical relations of languages to one another that the new science attempted to trace. (Trautmann 193).

(திராவிட மொழிகளில் சமஸ்கிருதத்தினின்றும் இரண்டாயிரம் ஆண்டுகளாகக் கடன் பெற்ற சொற்கள் மிகுந்திருப்பதால், அவை அதனின்றும் வேறுபட்ட குடும்பத்தைச் சார்ந்தவை என்பதை நிறுவ ஆழ்ந்த ஆய்வு தேவைப்படுகிறது. சென்னையில் கையாளப்பட்ட மொழியியல் ஆய்வு, ஐரோப்பாவில் கையாளப்பட்டதைப் போன்றே ஒருமொழியின் அடிப்படைச் சொற்களைக் கடன்பெற்ற சொற்களிலிருந்து வேறுபடுத்த முனைந்தது.)

ராபர்ட் கால்டுவெல் தமது Comparative Grammar of the Dravidian Languages எனும் பெரும் பெயர்க்குரிய நூலில் எல்லிஸ், ஸ்டீவன்சன் (Stevenson), ஹாக்சன் (Hodgson) போன்றோர் செய்த ஆய்வுபற்றி மேலெழுந்தவாரியாகக் குறிப்பிட்டு மேற்செல்லுகின்றார். எல்லிசின் தலையாய பங்களிப்புப் பற்றி உரிய முறையில் பேசவில்லை. இதனைக் கண்டிக்கும் டிராட்மன்,

Caldwell hardly does justice to the accomplishment of his predecessors, especially to the very accomplished Francis Whyte Ellis. It was Ellis and his association in Madras, in fact, who first proposed the ideas of a Dravidian language family on a very sound basis, forty years prior to Caldwell and in the same year (1816) as Bopp's famous pamphlet which launched the comparative philosophy of Indo - European. The great (and deserved) success of Caldwell's book has had the effect of throwing Ellis's earlier work into the shade. But there are other reasons for the limited historical appreciation of Ellis's scholarship as well: he died young and his papers were scattered after his death. Some of them, it is said, were used in the kitchen by the cook of a company grandee to kindle fires and singe chickens with (Trautmann 188)

என்றெழுதுவார். கால்டுவெல்லிற்கு நாற்பது ஆண்டுகளுக்கு முன்னமேயே தென்னிந்திய மொழிக்குடும்பம் சமஸ்கிருதத்தை அடித்தளமாகக் கொண்டது அன்று என்று எல்லிஸ் நிறுவியிருந்தாலும் கால்டுவெல்லின் இத்துறை வெற்றி குறைத்து மதிப்பிடக் கூடியது அன்று. எல்லிஸ் இளம்வயதில் இறந்ததும் அவருடைய கையெழுத்துப்பிரதிகள் பல கிடைக்காமல் போனதும் அவரது மதிநுட்பமும் கல்வியாற்றலும் உரிய புகழ் பெறாமல் போனதற்குக் காரணங்களாகும் என்பார் டிராட்மென்.

திராவிட மொழிக்குடும்பம் பற்றிய கோட்பாடு எவ்வாறு உருப்பெற்றது என்ற வரலாற்றையும் டிராட்மென் மீட்டுருவாக்கம் செய்துள்ளார். இங்கிலாந்திலிருந்து இந்தியாவிற்கு வந்த இளம் இந்திய ஆட்சிப்பணி அதிகாரிகளுக்குத் தென்னிந்திய மொழிகளைக் கற்றுத்தரச் சென்னையில் தொடங்கப்பெற்ற The College of Fort St George எல்லிசின் வழிகாட்டுதலில் இந்திய மொழிகளை மொழியியல் அணுகுமுறையில ஆராய்ந்து தென்னிந்திய மொழிகள் நான்கும் வேறு குடும்பத்தைச் சார்ந்தவை என்ற முடிவிற்கு வந்தது. தக்க ஆதாரங்களுடன் தம்முடிவை எல்லிஸ் எடுத்துரைத்தார்:

Ellis convincingly argued that the four languages were not 'derivations from the Sanskrit: that the latter, however it may contribute to their polish, is not necessary for their existence; and that they form a distinct family of languages with which the Sanskrit has, in later times especially, intermixed, but with which it has no radical connection (Ellis V)

*தென்னிந்தியா முழுவதும் பரவியிருந்த தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கு மொழிகளையும் அவற்றின் வட்டார வழக்குகளையும் நுட்பமாக ஆராய்ந்த எல்லிஸ் அவற்றிற்குள்ள உறவு சொல்லளவிலும் இலக்கண அளவிலும் ஆழமானது என்பதை 1800 - இல் அறிவித்தார்.*

These dialects are so intimately connected that to obtain a perfect grammatical knowledge of one is to obtain a knowledge of all, a few partial deviations of phrase and idiom excepted, and this is so much the case that in translating Malabar into Gentoo (ie. Tamil into Telugu), or the reverse, the position of a single word in a thousand need not be changed. (P.112)

*தமிழே அவற்றுள் தலையாயதென்றும் பிற கிளைமொழிகளெல்லாம் அதனை மூலமாகக் கொண்டவையென்றும் கூறிய எல்லிஸ் தமிழ்மொழி, இலக்கியம் ஆகிய இரண்டாலும் கவரப்பட்டுத் தமிழைச் செம்மொழித் தகுதி உடையது என்ற முடிவிற்கு 1813-ஆம் ஆண்டிலேயே வந்துவிட்டார் என்பதை டிராட்மென் சொல்லக் காணலாம். ஆட்சிப்பணி அதிகாரிகளுக்காக நிறுவப்பட்ட கல்லூரியில் ஆங்கிலேயர்களுக்குக் கற்பிக்கப்பட்ட மொழிகள் பாடத்திட்டத்தில் இரு கூறுகளாகப் பிரிக்கப்பட்டன. சமஸ்கிருதம், உயர்தமிழ் (பிவீரீலீ ஜிணீனீவீறீ), அரேபியம், பெர்சியன் ஆகியவை ஒரு தொகுதியாகவும் தெலுங்கு, இந்துஸ்தானி போன்ற நவீன மொழிகள் இன்னொரு தொகுதியாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. இது பற்றி டிராட்மன்,*

The wording here is cryptic, but the idea seems to be that Tamil is grouped with Sanskrit, Arabic, and Persian and one studies the grammar, prosody and rhetoric of these four as a key to the literatures of other languages such as Telugu and Hindustani. These four, we might say (although the report does not use the word), were treated as Classical literatures that set the pattern for later literatures. (P.154)

*எல்லிஸ் 1816-லேயே சமஸ்கிருதத்திலிருந்து கிளைத்த மொழிகள் என்று எண்ணப்படக் கூடாதவை எவையென்ற பட்டியலையும் தந்துள்ளார்.*

High and low Tamil; Telugu grammatical and vulgar; Kannada, ancient and modern; Malayalam which...... is also divided into a higher and lower register, the higher one containing many Sanskrit terms and forms; and Tuluva of the Kanara Country on the west coast of the peninsula. Besides these there are a few local dialects such as Kodagu (a variation of Tuluva and spoken in Coorg district). Sinhalese, Marathi and Oriya, which though not of the same stock, borrow many of their words and idioms from these tongues .... the language of the mountaineers of Rajmahal

which abounds in terms common to the Tamil and Telugu. (P.166)

எல்லிஸ் தந்துள்ள பட்டியல் இன்றைய மொழிநூல் வல்லாரால் எந்த மாற்றமும் இன்றி ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்பதைச் சொல்லவேண்டியதில்லை. ராஜ்மஹால் மலைவாழ்வோர் பேசும் மொழியாகிய மால்ட்டோ (Malto) தென்னிந்திய மொழிக்குடும்பத்தைச் சார்ந்தது என்று எல்லிஸ் அடையாளம் கண்டுள்ளது பெருவியப்புக்குரியது என்று டிராட்மன் கருத்தறிவிப்பார்.

தமது திருக்குறளின் ஆங்கில மொழிபெயர்ப்பு நூலில் தமிழ் மொழியின் சிறப்புக்கூறுகளைச்சுட்டிச் செல்லும் எல்லிஸ், "பொதுவாக இந்திய மொழிகளிலும், சிறப்பாகத் தென்னிந்திய மொழிகளிலும் காணப்பெறும் நெடுங்கணக்கு எழுத்துமுறை சிங்களம், பர்மியம், ஜாவா மொழிகளின் நெடுங்கணக்கும் எழுத்து முறையும் தமிழிலிருந்தே பெறப்பட்டன என்பதை நிறுவும்" என்பார். அவரது கூற்றின் உண்மை இப்பொழுது மொழியியல் அறிஞர்களின் ஆய்வுகளில் தெளிவாகி வருகிறது.

கால்டுவெல் எழுதிய திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் எனும் நூல் இந்திய மொழிகளின் வரலாற்றில் பெரும் புரட்சிக்குக் காரணமானதை யாவரும் அறிவர். திராவிட மொழிக்குடும்பத்தைத் தெளிவாக அடையாளம் காணும் இவ்வறிஞர் கூறியுள்ள சிலகருத்துகள் இன்றைய மொழிநூல் வல்லுநர்களால் மேலும் ஆழமாக ஆராயத்தக்கவை. திராவிட மொழிக்குடும்பமானது இந்தோ-ஐரோப்பிய மொழிக்குடும்பத்திற்கும் சிதிய மொழிகுடும்பத்திற்கும் ஓர் இணைப்புப்பாலமாக இருந்திருக்க வேண்டுமென்றும் அவை ஒன்றிலிருந்து ஒன்று பிரிந்த நிலைக்கும் முந்தைய காலத்தைச் சேர்ந்த மொழியோடு திராவிட மொழிக்குடும்பம் தொடர்பு கொண்டிருந்ததென்றும் அறிவிக்கும் கால்டுவெல்,

(திராவிட மொழிகளில் உள்ள சிலசொற்களும் வேர்களும் மாந்தனின் முதல்மொழியில் இருந்திருக்கக்கூடிய வடிவங்களிலேயே இன்றும் உள்ளனவாகக் கருத இடமுண்டு)

The Dravidian family is perhaps the one language family which is nearest to the putative mother tongue of man.

என்பார். இன்றைய மொழியியல் வல்லுநர்களான Ilyich-Svitych, Dolgopolsky, Vaclav Blazek, Collin P. Masica, Stephen Hillyer Levitt, Greenberg போன்றோர் இந்தோ - ஐரோப்பிய, ஊரல் - அல்டேயிக், ஜப்பானிய, கொரிய மொழிக்குடும்பங்கள் எல்லாம் திராவிட மொழிக்குடும்பத்திலிருந்தே கிளைத்தன என்பது அவர்களது முடிவு என்றும் குறிப்பிட்டுள்ளது நம் கவனத்திற்குரியது.

தமிழிலுள்ள சுட்டுப்பெயர்களும் அவற்றை ஒட்டிய வினைச்சொற்களும் அழகானவை, சீரொழுங்குடையவை என்று எடுத்துக்காட்டும் கால்டுவெல் அவற்றை ஒத்த அமைப்பையோ அதற்கு அடுத்த நிலையில் வைக்கக் கூடியதையோ உலகில் வேறெந்த மொழியிலும் காணமுடியாது என்பார்.

I need not call attention to the beautiful and philosophical regularity of this quadruple set of remote, proximate, and intermediate demonstratives and interrogatives. In no other language or family of languages in the world shall we find its equal or even its second.

தொல்காப்பியச் சொல்லதிகாரத்தில் வரும் உயர்திணை, அஃறிணைப் பெயர்ப் பட்டியல்களே இத்தகைய பாராட்டுக்குரியன.

அவன் இவன் உவன் என வரூஉம் பெயரும்
அவள் இவள் உவள் என வரூஉம் பெயரும்
அவர் இவர் உவர் என வரூஉம் பெயரும்
யான் யாம் நாம் என வரூஉம் பெயரும்
யாவன் யாவள் யாவர் என்னும்
ஆவயின் மூன்றொடு அப்பதினைந்தும்
பால் அறிவந்த உயர்திணைப் பெயரே.
அது இது உது என வரூஉம் பெயரும்
அவைமுதலாகிய ஆய்தப்பெயரும்
அவை இவை உவை என வரூஉம் பெயரும்
அவைமுதலாகிய வகரப் பெயரும்
யாது யா யாவை என்னும் பெயரும்
ஆவயின் மூன்றொடு அப்பதினைந்தும்
பால் அறிவந்த அஃறிணைப் பெயரே.

கால்டுவெல்லின் மொழியியல் அறிவும் அழகுணர்வும் தமிழ்ச்சுட்டுப் பெயர்களின் சீரமைப்பைக் கண்டுகொள்ள அவருக்குத் துணைபுரிந்தன. இவற்றை இரண்டு கவிதைகளில் நம்மாழ்வார் நயம்படப் பயன்படுத்திக் கொள்கிறார்.

இவையும் அவையும் உவையும்
இவரும் அவரும் உவரும்
எவையும் எவரும் தன்னுளே
ஆகியும் ஆக்கியும் காக்கும்
அவையுள் தனிமுதல் எம்மான்
கண்ணபிரான், என் அமுதம்
சுவையான்; திருவின் மணாளன்
என்னுடையச் சூழல் உளானே (2987)
நாம் அவன் இவன் உவன் அவள் இவள் உவள் எவள்
தாம் அவர் இவர் உவர் அது இது உது எது
வீம் அவை இவை உவை எவை நலம் தீங்கு அவை
ஆம் அவை ஆயவை ஆய்நின்ற அவரே. (2902)

மொழியியல் வல்லுநரான ஏ.கே. இராமானுஜன் இரண்டாம் பாடலால் ஈர்க்கப்பட்டுத் தமது நம்மாழ்வாரின் திருவாய்மொழி ஆங்கில மொழிபெயர்ப்புத் தொகுதியில் அதனையே முதல் பாடலாக வைக்கிறார். அதுமட்டுமன்று. தமிழ் இலக்கண அமைப்பின் சிறப்புக்கூறுகள் சங்கச் சான்றோர் காலத்திலேயே அறியப்பட்டிருந்தன என்பதற்கும் ஏராளமான சான்றுகள் உண்டு.

இச்சுட்டுப்பெயர் சீர்மை அறிந்து இந்திய மொழிகளிலேயே முதல் பக்திப்பாடல் என்று எண்ணப்பெறும் பரிபாடலில் திருமாலைப் பற்றிய நான்காம் பரிபாடலின் ஆசிரியர்,

நின் வெம்மையும் விளக்கமும் ஞாயிற்றுள;
நின் வருதலும் ஒடுக்கமும் மருத்தினுள; ....
அதனால் இவ்வும் உவ்வும் அவ்வும் பிறவும்
ஏமமார்ந்த நிற்பிரிந்து (25-35)

என்று இறைவனைப் பரவுவார். இறைவனிடம் தோன்றி அவனையே அடைகின்ற எல்லாப் பொருள்களையும் நீண்ட பட்டியல் ஒன்றில் கூறமுயலாமல் "இவ்வும் உவ்வும் அவ்வும் பிறவும்" என்று அவற்றை அடக்கியிருப்பது பாராட்டுக்குரிய மொழியியல் உணர்வல்லவா?

## II

இந்தோ - ஐரோப்பிய மொழிகளின் குடும்பத்தை முதன்முதலில் அடையாளம் கண்டவரென்றும், ஒப்பீட்டு மொழியியலுக்கு வித்திட்டவர் என்றும் போற்றப்பெறுபவர் சர் வில்லியம் ஜோன்ஸ் (1746 -1794) என்னும் ஆங்கில அறிஞராவர். புகழ் பெற்ற அவரது 'Philologer Passage' எனும் கூற்று சமஸ்கிருதத்திற்கும் பல இந்தோ- ஐரோப்பிய மொழிகளுக்குமுள்ள நெருக்கமான உறவை நிறுவியதாகக் கருதுவர். இதை அவருக்குப் பின்வந்த வரலாற்று மொழியியல் விற்பன்னர் பலரும் ஏற்றுக்கொண்டனர். அவர் எழுதிய பெர்சிய மொழி இலக்கணமும் கிரேக்கம், பெர்சியன், அரேபியம் ஆகிய மொழிகளிலிருந்து அவர் செய்த மொழிபெயர்ப்புகளும் அவர் கீழைக்கல்வி உலகில் அருஞ்சாதனை படைத்தவர் என்பதற்குத்தக்க சான்றுகளாகும். ஆயினும் அவருக்குக் கிடைத்த பெருமை அளவுக்கு அதிகமானது என்று இன்றைய மொழியியல் வல்லுநர்கள் கூறத்தொடங்கியுள்ளனர். அன்னார் (1) ஜோன்சிற்கு வெகு காலத்திற்கு முன்னமேயே இந்தோ- ஐரோப்பிய மொழிகளுக்கிடையேயுள்ள தொடர்புகள் கண்டறியப் பட்டுவிட்டன என்றும் (2) ஜோன்சிற்கு முன்னமேயே சமஸ்கிருதம், கிரேக்கம், லத்தின் ஆகிய மூன்றிற்குமுள்ள உறவு பேசப்பட்டு விட்டது என்றும் (3) அவர் கொண்ட ஒப்பீட்டு மொழியியல் ஆய்வு அவருக்குச் சொந்தமானது அன்று என்றும் (4) அவரது சமஸ்கிருதம் பற்றிய கூற்று அவரது நோக்கத்தைப் புறக்கணித்த விளக்கம் பெற்றுவருகிறதென்றும் வாதிடுவர்.

மொழிகளை அவற்றிற்காகவே ஆராயவேண்டிய அளவிற்கு அவை இன்றியமையாதவை அல்ல என்பது ஜோன்சின் கருத்தாகும். மொழியியல்

ஆய்வை மொழியியலுக்காகவே அவர் மேற்கொள்ளவில்லை. ஆசியாவில் வாழ்ந்த மக்களின் இனம், மொழி, சமயம், கலைகள், அறிவியல்கள் ஆகிய யாவற்றையும் ஒட்டுமொத்தமாகப்பார்த்து மாந்த இனங்களின் வரலாற்றை எழுதுவதையே அவர் முதல் நோக்கமாகக்கொண்டிருந்தார். அவர் நிகழ்த்திய உரைகளில் இந்தியா, அரேபியா, டார்ட்டரி, பெர்சியா, சீனா ஆகிய ஆசிய நாடுகளுக்குள்ள பொதுவான மூலத்தைக் கண்டறிவதே அவர் முயற்சியென்று பலமுறை அவர் குறிப்பிடுகிறார்.

அவரது சமஸ்கிருதம் பற்றிய கூற்று எச்சூழலில் இடம் பெறுகிறது என்பதைப்பார்த்தோமானால் அவர் எவ்வளவு தவறான முடிவுகளுக்கு வந்திருக்கிறார் என்பது தெளிவாகும்.

*அவரது முழுக்கூற்றும் வருமாறு:*

இந்துஸ்தானி (இந்தி) மொழியில் காணப்படும் ஒவ்வொரு ஆறு சொற்களுள் ஐந்து சொற்கள் சமஸ்கிருதத்திலிருந்து பெறப்பட்டவை. ஆனால் இந்துஸ்தானியின் அடித்தளமானது, குறிப்பாக, அதன் வினைபற்றிய இலக்கணம் சமஸ்கிருதத்தினின்றும் உருதுவினின்றும் வேறுபட்டது. இவ்வேறுபாடு, அரேபியத்திற்கும் பெர்சியனுக்குமுள்ள வேறுபாட்டையும், கிரேக்கத்திற்கும் ஜெர்மன் மொழிக்குமுள்ள வேறுபாட்டையும் ஒத்தது. ஒரு நாட்டை இன்னொரு நாடு கைப்பற்றும்போது, தோல்வியுற்ற நாட்டு மொழியில் அடிப்படை மாற்றம் ஏதும் செய்யாது பல பொருள்களுக்கும் செயல்களுக்குமான சொற்களைத் தம் மொழியிலிருந்து புகுத்துவதே வழக்கமாகும். சமஸ்கிருதத்திற்கும் இந்துஸ்தானிக்கும் உள்ள உறவு இத்தகையதே. இந்துஸ்தானியானது டார்ட்டேரியன் (துருக்கியும் பிற மத்திய ஆசிய நாடுகளும்) இனத்தையோ, சால்டியன் (செமிதிக்) இனத்தையோ மூலமாகக் கொண்டிருந்திருக்கவேண்டும். வட இந்தியாவில் பழங்காலத்தில் வழக்கிலிருந்த இத்தகைய இந்துஸ்தானி மொழியில் சமஸ்கிருதச் சொற்கள் திணிக்கப்பட்டன.

சமஸ்கிருதத்தின் பழமை எத்தகையதாயினும் அதன் கட்டமைப்பு வியப்புக்குரியது. அது கிரேக்கத்தினும் முழுமையானது; லத்தினைக் காட்டிலும் விரிந்த பரப்புடையது; அவ்விரண்டு மொழிகளைக் காட்டிலும் அதிகச் சீர்திருத்தம் பெற்றது. ஆயினும் அவற்றோடு இலக்கணக் கூறுகளில் வினைச் சொற்களின் வேர்களில் மிக்க ஒற்றுமை உடையது. அவை மூன்றும் ஒரே மூல மொழியிலிருந்து தோன்றியிருக்க வேண்டும். அம்மூலமொழி இப்பொழுது அழிந்து விட்டது. காதிக் (நிஷீமீலீவீநீ) மொழியும், கெல்டிக் (சிமீறீமீவீநீளீ) மொழியும் சமஸ்கிருதம் போன்ற பிறப்பைக் கொண்டவையே. பழம் பெர்சியனும் இக்குடும்பத்தைச் சேர்ந்ததே.

ஜோன்ஸ் செய்த பெருந்தவறு இவ்வாறு அவர் ஏராளமான மொழிகளை ஒரு குடும்பத்தில் அடக்கியமையேயாகும். இன்னொரு இடத்தில் அவர் கூறும் முடிவுகள் இத்தவறுகளை நன்கு புலப்படுத்தும்.

இந்துக்களைப் பற்றிய இக்கருத்துக்களிலிருந்து பின்வரும் முடிவிற்கு வரலாம்: அவர்கள் பழம் பெர்சியர்களோடும், எதியோப்பியர்களோடும், எகிப்தியர்களோடும், பினீசியர்களோடும், கிரேக்கர்களோடும், டஸ்கர்களோடும்,

சிதியர்களோடும், காத் (Goths) இனத்தாரோடும், கெல்டிக் மக்களோடும், சீனர்களோடும், ஜப்பானியர்களோடும் பெருவியர்(Peruvious)களோடும் நீண்ட நெடுங்காலத்திற்குமுன்னே நெருக்கமான உறவு கொண்டிருந்தார்கள். இந்துக்கள் இந்த நாடுகளில் ஏதாவது ஒன்றின் காலனி ஆதிக்கத்தில் இருந்திருக்கலாம்; அல்லது இந்த நாடுகளில் ஏதாவது ஒன்று அவர்களுடைய ஆதிக்கத்தில் இருந்திருக்கலாம். அவர்கள் யாவரும் ஒரு மத்திய நாட்டிலிருந்து வேறுநாடுகளுக்குப் பரவிச் சென்றிருக்கலாம். அதனை ஆராய்வதே எனது உரைகளின் முதல் நோக்கமாகும்.

இந்து சமயத்திற்கும் பிற சில சமயங்களுக்கும் உள்ள மேலெழுந்தவாரியான ஒற்றுமைகளைச் சுட்டிக்காட்டி அச்சமயங்கள் வழக்கத்திலிருந்த நாட்டு மொழிகளையெல்லாம் இந்தோ-ஐரோப்பிய மொழிக்குடும்பத்திற்குள் ஜோன்ஸ் தள்ளுவது அதிர்ச்சியளிக்கும் ஆய்வாகும். தென் அமெரிக்காவில் ஒரு குழுவினர் தாங்கள் கதிரவனின் வழியில் வந்தவர்கள் என்று சொல்லிக் கொண்டிருந்ததால் தென் அமெரிக்காவில் வாழ்ந்தவர்களும் இந்துக்களே என்பது அவரது முடிவு. மெக்சிகோவிலும், பெரு(Peru)விலும் வழங்கும் தொன்மங்கள் சில எகிப்திலும் இந்தியாவிலும் வழங்கும் தொன்மங்களை ஒத்திருத்தலால் இந்துக்களில் சிலரே மெக்சிகோவிற்கும் பெருவிற்கும் சென்று குடியேறியிருக்க வேண்டும் என்று அவர் தரும் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. சமயம், சிற்பம், கட்டிடக்கலை ஆகியவற்றுள் ஏதாவது ஒன்றில் ஒரு சிறு ஒற்றுமை காணப்படுமானால், அந்நாட்டு மக்களையும் மொழிகளையும் இனங்களையும் ஒரே குடும்பத்தில் சேர்க்க அவர் தயங்கவில்லை. எதியோப்பியாவும் இந்துஸ்தானமும் கூட ஓரினத்து மக்கள் வாழ்ந்த இடங்களே என்பார் அவர். எதியோப்பிய மொழிகள் செமிதிக் மொழிக்குடும்பத்தைச் சார்ந்தவை என்பதையும், இந்தோ-ஐரோப்பியக் குடும்ப மொழிகளிலிருந்து அவை வேறுபட்டவை என்பதையும் அவர் கண்டு கொள்ளவில்லை. டார்ட்டார் இனத்தைப்பற்றிய உரையில் இந்திய மொழிகளுக்கும் அரேபிய மொழிகளுக்கும் நெருங்கிய உறவுண்டு என்று முடிவுகட்டுகிறார்.

மொழி ஒற்றுமைகளை அடிப்படையாக வைத்து எடுக்கும் முடிவுகளிலும் அவர் தவறு செய்கிறார் என்பது இன்றைய மொழியியல் வல்லுநர்களின் கருத்து. இந்தோ-ஐரோப்பிய மொழிக்குடும்பத்தின் இரானியக்கிளையைச் சேர்ந்த பஹ்லவி மொழியை ஒரு சில சொற்களின் ஒற்றுமை கருதி, செமிதிக் இனத்தைச் சேர்ந்தது என்று குறிப்பிடுவார். இலக்கியம், சமயம் ஆகிய துறைகளிலிருந்து ஒரு சில சான்றுகளைக் கொடுத்து, ஓர் உரையில் சீனர்களும் இந்துக்களும் தொன்மையில் ஓரின மக்களே ("originally the same people") என்று சொல்லவும் அவர் தயங்கவில்லை. ஜப்பானியர்களுக்கும்

சீனர்களுக்கும் இப்பொழுது மொழிநிலையிலும், பிறவாழ்க்கைக் கூறுகளிலும் வேறுபாடுகள் இருப்பினும் அவர்களும் தொடக்கத்தில் ஓரினத்தவரே என்பதும் அவர் முடிவு. இறுதியாக, அரேபியர்களும், டார்டார் (ஜிணீக்ஷீமீணீக்ஷீ) களும் வெவ்வேறினத்தைச் சார்ந்தவர்கள் என்றும் இந்துக்கள், சீனர்கள், ஜப்பானியர்கள் ஆகிய மூன்று நாட்டினரும் ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்களென்றும் தாம் தக்க ஆதாரங்களோடு நிறுவிவிட்டதாக அறிவிப்பார்.

ஆசிய நாடுகளின் மலைவாழ்மக்கள், தீவுகளில் வாழ்ந்தோர், எல்லைப்புறத்துப் பழங்குடிமக்கள் ஆகியோர் பற்றிய உரையிலும் இன்றைய மேலை மொழியியல் கல்வியாளர்கள் ஏற்றுக் கொள்ளாத முடிவுகளுக்கு ஜோன்ஸ் வந்துள்ளார். எதியோப்பியர்களும், -முதலாம் எகிப்தியர்களும் தொல்பழங்காலத்தில் இந்துக்களின் வழிவந்தவர்களேயென்றும் பஹ்லவியோடு பிற இரானிய மொழிகள் யாவும் செமிதிக் குடும்பத்தைச் சார்ந்தவையென்றும் திபேத்திய மொழி சமஸ்கிருதத்தின் வழி வந்ததேயென்றும் இவ்வுரை அறிவிக்கும்.

ஆசிய நாடுகளைப் பற்றிய ஒன்பதாவது உரையில், ஒப்பியல் மொழி ஆய்விற்குத்தக்க இடம் அளிக்காமல் விவிலியம் மாந்த இனத்தோற்றம் பற்றிக் கூறுவதை அடிப்படையாகக் கொண்டு, நோவா (Noah) வின் மூன்று மகன்களால் பெருகிய இனங்களுக்குள்ள உறவுகளை ஜோன்ஸ் ஏற்றுக்கொள்வார். பத்தாவது உரை, மோசஸ் தொன்மத்தை ஆதாரமாகக் காட்டி எகிப்தியர்கள், இந்தியர்கள், காத் (Goth) இனத்தார், பினீசியர்கள், கெல்ட் இனத்தார், கிரேக்கர்கள், லாத்தியர்கள் (Latians), சீனர்கள், பெருவியர்கள், மெக்சிகோவினர் ஆகிய யாவரும் ஒரு தொடக்கத்தைக் கொண்டவர்களே என்று நிறுவமுயலும்.

ஜோன்ஸ் தம் உரைகளில் தந்துள்ள தரவுகள் பற்றி ரோச்சர் (Rocher) சொல்வது குறிப்பிடற்குரியது:

இந்தோ - ஐரோப்பிய மொழிகள் என்று பின்னரால் அறியப்பட்டவைகளுக்கும் சமஸ்கிருதத்திற்கும் ஒரு பொதுமூலம் உண்டென்ற முடிவிற்கு வர ஜோன்ஸ் மொழியியல் கூறுகளைப் பயன்படுத்துகிறார். ஆனால் இந்தோ - ஐரோப்பிய மொழிகளைப் பேசாத நாட்டினர்க்கும் இந்துக்களுக்கும் உள்ள ஒற்றுமைகளையும் உறவையும் (immemorial affinity) நிறுவமுனையும்போது மொழியியல் அல்லாத துறைகளிலிருந்து தரவுகளைத் தருகிறார். இவ்விருவகையான தரவுகளுக்கும் உள்ள வேறுபாட்டினைக் கண்டுகொள்ளாது நெருக்கமான உறவு பற்றிய முடிவுகளுக்கு வருகிறார். இந்துக்களுக்கும் எகிப்தியர், பினீசியர், சீனர், ஜப்பானியர், பெருவியர் போன்ற வேறு பல நாட்டினர்க்கும் ஒரே பொதுமூலம் எனும் முடிவிற்குவர அவர் கையாளும் அணுகுமுறை பாப் (Bopp) போன்ற கல்வியாளர்கள் வளர்த்த அணுகுமுறையிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகும்.

ஜோன்ஸ் காலத்தில் வாழ்ந்த ஹால்ஹெட் (Nathaniel Brassey Halhed) இந்தோ-ஐரோப்பிய மொழிக்குடும்பம் பற்றித் தெரிவித்துள்ள ஆய்வுமுடிவுகளிலிருந்து ஜோன்சின் முடிவுகள் வேறுபடக் காணலாம்.

வங்கமொழி இலக்கண நூல் எழுதிய ஹால்ஹெட் சமஸ்கிருதம், கிரேக்கம், லத்தீன் போன்றவை ஒரே குடும்பத்தைச் சார்ந்தவை என்றும் அக்குடும்பத்தின் மூலமொழி சமஸ்கிருதமாக இருக்கலாம் என்றும் கருத்தறிவித்திருந்தார். ஆனால் இவை ஒரு குடும்பத்தைச் சார்ந்தவை யென்பதையும் சமஸ்கிருதம் ஒரு தொன்மையான மொழியென்பதையும் ஏற்றுக்கொண்ட ஜோன்ஸ் அக்குடும்பத்தின் தாய்மொழி சமஸ்கிருதம் என்பதை ஏற்றுக்கொள்ளவில்லை. வேர்ச்சொற்களை வைத்துப் பார்க்கும்போது, இந்துஸ்தானியும் பிறவட இந்திய மொழிகளும் சமஸ்கிருதத்திலிருந்து தோன்றியவையேயென்றும் இலக்கணக் கூறுகளில் அவற்றிற்கும் சமஸ்கிருதத்திற்கும் பல வேறுபாடுகள் இருப்பது உண்மையாயினும் இத்தகைய முடிவிற்கே தாம் வருவதாகவும் ஹால்ஹெட் கூறினார். ஆனால் ஜோன்ஸ் இந்தி மொழியிலுள்ள ஆறு சொற்களில் ஐந்து சொற்கள் சமஸ்கிருதச் சொற்களாக இருந்தாலும் இலக்கணக்கூறுகள் பல வேறுபடுவதால் இந்தி சமஸ்கிருதத்திலிருந்து தோன்றியிருக்க முடியாதென்றும் சமஸ்கிருதம் இந்தியாவிற்குள் நுழைவதற்கு முன்னமேயே இந்திய மொழிகளில் ஒன்றாக இந்தி இருந்திருக்கவேண்டும் என்றும் பின்னால் சமஸ்கிருதச் சொற்கள் இந்தியில் நுழைந்திருக்கவேண்டும் என்றும் உறுதியாக நம்பினார்.

இந்தோ- ஐரோப்பிய மொழிக்குடும்பத்தைப் பற்றிப் பேசிய ஜோன்ஸ், ஹால்ஹெட் போன்றோர் தென்னிந்திய மொழிகளாகிய தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம் பற்றி அறிந்திருக்கவில்லை. சமஸ்கிருதத்திற்கும் பிற வடஇந்திய மொழிகளுக்கும் உள்ள உறவையும் சொல்லொற்றுமைகளை மட்டும் கணக்கில் கொண்டு அவற்றிற்குள்ள இலக்கணக் கூறுகளிலுள்ள பெருத்த வேறுபாடுகளுக்குக் காரணம் இன்னதெனக் கண்டறிய முனையவில்லை. பிறப்புறவை (genetic relationship) முடிவு செய்தற்கு சொல்லொற்றுமையை விட இலக்கணக் கூறுகள் இன்றியமையாதவை என்பதை அவர்கள் உணரவில்லை. இன்றைய மொழிநூல் வல்லார் பிறப்புறவு பற்றிய ஆய்விற்கு அடிப்படைச் சொற்கள் (basic vocabulary) (உடல் உறுப்புகள், இயற்கைப் பொருள்கள், உறவுப்பெயர்கள், உள்ளவுணர்வுகள், மாந்த இனம் முழுமைக்கும் பொதுவான சில கருத்துகள் ஆகியவற்றைக் குறிக்கும் சொற்கள்), இலக்கணக்கூறுகள் (morphological aspects), பேச்சொலி ஒற்றுமைகள் (sound correspondences) ஆகிய யாவற்றிலிருந்தும் தரவுகள் பெறப்படவேண்டுமென்பதை வலியுறுத்துவர். இந்தி சமஸ்கிருதத்திலிருந்து பிறக்கவில்லையென்ற முடிவிற்கு வந்த ஜோன்ஸ் தென்னிந்திய மொழிகளில் அக்கறை காட்டியிருந்தால், அது இலக்கணக்கூறுகள் பலவற்றைத் தமிழிலிருந்து பெற்றதைக் கண்டறிந்திருப்பார். தமிழ் பற்றி அறியாததால் அவர் இந்தியானது டார்ட்டேரியன் இனத்தையோ, சால்டியன் இனத்தையோ மூலமாகக் கொண்டிருக்க வேண்டும் என்ற முடிவிற்கு வந்தார். சமஸ்கிருதத்திலிருந்து பிற வட இந்திய மொழிகள் தோன்றின என்ற முடிவிற்கு வந்த ஹால்ஹெட் போன்றோர் வெறும் சொல்லொற்றுமைகளையே அடிப்படைத் தரவுகளாகக் கொண்டனர் என்பது நாம் அறியவேண்டிய செய்தியாகும்.

## III

சட்டநம்பி அடிகளார் தமது ஆதிமொழி எனும் ஆய்வு நூலில் தெரிவிக்கும் கருத்துகள் பொருள் பொதிந்தவை. அவர்,

எழுத்தியல் ( அட்சர நிரூபணம்),

புணரியல் (சந்தி நிரூபணம்)

சொல்லியல் (பத விபவஸ்தா நிரூபணம்)

பாலியல் (லிங்க நிரூபணம்)

எண் இயல் (வசன நிரூபணம்)

வேற்றுமை இயல் (விபக்தி நிரூபணம்)

அடிச்சொல் இயல் (தாது நிரூபணம்)

தமிழ்-சமஸ்கிருத ஒற்றுமை வேற்றுமைகள்

எனும் தலைப்புகளில் தமிழ், வடமொழி இலக்கணங்களை ஒப்பிட்டுப் பல அரிய செய்திகளைத் தருகிறார். பிராகிருதம் சமஸ்கிருத மயமாக்கப்படாத தனக்கே உரிய முந்து எழுத்து வடிவங்களைத் தக்க வைத்துக் கொண்டிருப்பதால் சமஸ்கிருதத்தை விட அது காலத்தால் முந்தையது என்பது பெறப்படும் (ப.25).

சமஸ்கிருத மொழியில் உள்ள கனைத்த கனத்த ஒலிப்புகளும் ரு, ளு, ஷ முதலிய சிறப்பெழுத்துகளும் க்த, ஷ்ண முதலிய இனமல்லாக் கூட்டெழுத்துகளும் பிராகிருதத்தில் இல்லை. தமிழில் உள்ளது போல ஒருமை பன்மை என்னும் இரண்டே எண்களும், ங்க, ந்த, ட்ட முதலிய இனச்சார்புள்ள வேற்றுநிலை, உடனிலை மெய்ம்மயக்கங்களும் பிராகிருத மொழியில் உள்ளன. இதிலிருந்து தமிழுக்குப் பின்னும் சமஸ்கிருதத்துக்கு முன்னும் பிராகிருதம் தோன்றியிருக்க வேண்டும் என்பது புலனாகிறது (ப.27).

உயிர் எழுத்துகள் தம்முள்ளும், உயிரெழுத்துகள் மெய்யெழுத்துகளோடும் மெய்யெழுத்துகள் தம்முள்ளும் சேரும்பொழுது உண்டாகும் புணரியல் பாங்குகள் தமிழ், சமஸ்கிருதம் ஆகிய இரு மொழிகளில் மிகவும் வேறுபடுகின்றன. உயிரீற்றுப்புணர்ச்சி விதிகளை ஆராயும்போது தமிழ் இலக்கணம் சமஸ்கிருத இலக்கணப் பாங்கைப் பின்பற்றவில்லை என்பதை அறியலாம். ஏனைய உலகமொழிகளில் இல்லாத சொற்புணர்ச்சி (சந்தி) இலக்கணம் தமிழிலும் சமஸ்கிருதத்திலும் மட்டும் காணப்படுகின்றன. தமிழிலக்கணத்தில் மிகப் பழங்காலத்தில் புணர்ச்சித் திரிபுகள் இல்லாதிருந்து நாளடைவில் தோன்றியிருக்கும். சமஸ்கிருதம் வளர்ந்த காலத்தில் பெரிதும் பேசப்பட்ட புணர்ச்சி இலக்கணம் சமஸ்கிருதம் கற்ற தமிழ்ப்புலவர்கள் வாயிலாகப் பரவியிருக்கும் (ப.35).

வடமொழியில் எல்லாச் சொற்களும் தாதுக்கள் எனும் சொல்லடியில் தோன்றினாலும் இந்த வடிவத்தில் வினைச்சொற்கள் ஆவதில்லை. அவற்றோடு

முன்னொட்டுகள், பின்னொட்டுகள் சேர்ந்தால்தான் அவை வினை வடிவம் பெறும். தமிழில் வினை வடிவங்கள் இயல்பாக, தனித்து வழங்குபவை. தமிழில் வினைச்சொற்களுக்கு முன்னொட்டு பின்னொட்டுப் போன்றவை அறவே தேவையில்லை. எனவே இவற்றை உற்றுநோக்கும்போது தமிழ், சமஸ்கிருதம் எனும் இரண்டு மொழிகளுக்கும் இடையே உள்ள வலுவான பெரிய வேறுபாடு தெளிவாகத் தெரிகிறது (ப.69).

சமஸ்கிருதப் பெயர்ச் சொற்களில் சர்வநாமம் எனும் ஒரு பிரிவு உள்ளது. சுட்டு, வினா, தன்மை முன்னிலை படர்க்கை (மூவிடப் பெயர்) போன்ற பொதுப்பெயர்கள் இப்பிரிவில் அடங்கும். இவற்றைச் சர்வ நாமம் எனும் பொதுப்பிரிவில் அடக்காமல் தனித்தனியாக வகைப்படுத்திக் காட்டுவது தமிழ் இலக்கணத்தின் தனிப்பாங்காக உள்ளது. (ப.73).

தொல்காப்பியர் சொற்கள் என்பவை முதன்மையாக பெயர், வினை என இருவகைப்படும் என்பதை வலியுறுத்தும் நோக்கில் "சொற்கள் பெயரும் வினையுமாய் இரண்டே" எனக் கூறினார். அடுத்த நூற்பாவில் பழைய இலக்கணப் பாங்கையொட்டி இடைச்சொல்லும் உரிச்சொல்லும் அத்துணை முதன்மை பெறத்தக்கன அல்ல எனும் பாங்கில் சேர்க்கப்பட்டுள்ளன என உய்த்துணர முடிகிறது.

மொழிவளர்ச்சியின் விளைவாக அனைத்துப் பண்பு பண்பிப்பெயர்களும் பெருகியதால் இன்னின்ன சொற்கள் உரிச்சொற்களுள் அடங்கும் என வகைப்படுத்தியிருக்க வேண்டும். இது மொழி வளர்ச்சிப்பாங்கில் தவிர்க்க முடியாமல் ஏற்படுத்தப்பட்ட வகைப்பாடு எனலாம். மேலும் முன்னோர் செய்த உரிச்சொல் வகைப்பாட்டை மரபுநெறி மாறாமல் காக்கவேண்டிய கட்டாயத்தாலும் உரிச்சொல்வகைமை சேர்க்கப்பட்டது எனலாம் (ப.83).

"சமஸ்கிருதத்தில் உள்ள பால்வேறுபாடுகள் குழப்பமும் பிழைபாடும் கொண்டவை என்பதைச் சமஸ்கிருதத்தில் மாபெரும் புலவராகவும் சமஸ்கிருதத்திற்கு அதிகாரிகளாகவும் உள்ள சமஸ்கிருதப்பெரும் பண்டிதர்கள் அறியாமல் இருக்கிறார்கள்" என்று அடிகளார் வருந்திக் கூறுவார்.

பதஞ்சலி முனிவர் உலகப் பொருள்கள் அனைத்தும் ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் எனும் மூன்றே பிரிவில் அடங்கும் எனக் கூறுகிறார். "எல்லாப் பொருள்களுக்கும் தோற்றம், நிலைப்பு, அழிவு (மறைப்பு) எனும் மூன்று நிலைகள் உள்ளன. தோற்றம் ஆண் பாலையும், அழிவு பெண்பாலையும், அஃறிணை ஒன்றன்பால் நிலைப்புத் தன்மையையும் காட்டுகின்றன. சத்துவம், இராஜசம், தாமசம் (Satva, Rajas, Thama) எனும் முக்குணங்கள் எல்லாப் பொருள்களிலும் உள்ளன. இந்த மூன்று குணங்களே உலகப்பொருள்கள் அனைத்திலும் மூன்று பால்வேறுபாடுகளாகக் காணப்படுகின்றன". சத்துவம், இராக்கதம், தாமசம் எனும் முக்குணங்களுக்கும் அஃறிணைப் பொருள்களுக்கும் உலக வழக்கில் தொடர்பு காணப்படாத நிலையில் பால்வேறுபாடுகளைக்

குணவேறுபாடுகளோடு பொருத்திக் காட்டுவது ஏன்? (பக்.101-103) என்று அடிகளார் கேட்கும் வினாவிற்கு வடநூலார் விடை சொல்ல இயலாது.

தமிழிலுள்ள உயர்திணை அஃறிணைப் பிரிவுகள் வடமொழியில் இல்லை. இவை காலங்கடந்து தமிழில் சேர்க்கப்பட்டவை என்று கூறுவதை ஏற்கமுடியாது. உயர்திணை முன்பு வகுக்கப்பட்ட பின்னரே உயர்திணை அல்லாதது எனும் அஃறிணை காரணம் கருதிப் பெயரிடப்பட்டுள்ளது. தமிழிலுள்ள வேறுபாடு தொடக்கக் காலத்திலேயே உண்டாயிருக்க வேண்டும். இதுவே உத்திக்கும் பொருந்தியுள்ளது (ப.107).

சமஸ்கிருதத்தில் எண்ணிக்கையை வசனம் என்றும் பிறப்புவழி ஆண்பெண் வேறுபாட்டை லிங்கம் என்றும் வேறுபடுத்திக் காட்டியிருக்கிறார்கள். ஆனால் தமிழில் இந்த இருவகைக்கும் வேறுபாடு காட்டாமல் பொதுவாகப் பால் எனப் பெயரிட்டது ஏன்? இவற்றுக்குக் காரணம் என்னவெனில் வடமொழி இலக்கணப்பாங்கு ஏற்படுவதற்கு முன்பே மிகுதொன்மைக் காலத்தில் தமிழிலக்கண வகைப்பாடுகள் தோன்றிவிட்டனவாதலால் அவற்றை மாற்றமின்றித் தமிழிலக்கண வல்லுநர் பின்பற்றி வந்திருக்கிறார்கள் என்பதேயாகும். இதிலிருந்து தமிழிலக்கணம் சமஸ்கிருத இலக்கணத்திற்குக் காலத்தால் முந்தையது எனத் தெளிவாகத் தெரிகிறது (ப.109).

சமஸ்கிருதத்தில் ஒருமை, இருமை, பன்மை எனும் மூன்று எண்வகைப்பாடு ஒரு காலத்தில் இருந்தது. ஆனால் நாட்பட நாட்பட சமஸ்கிருத வல்லுநர்பலரும் கருத்து மாற்றம் பெற்று இருமை எனும் எண்வகைப்பாடு தேவையில்லை என நீக்கிவிட்டனர் (ப.111).

தமிழில் எண்மயக்கம் அணிநயம் காரணமாக செய்யுள்களில் இடம்பெறுவது உண்டு.

எனைத்துணைய ராயினும் என்னாம்
தினைத்துணையும் தேரான் பிறனில் புகல் (குறள்)

சீற்றத்தின் விளைவாக எனைத்துணையர் எனும் பலர்பால் சுட்டிய உயர்வுச்சொல் தேரான் என ஆண்பால் ஒருமை சுட்டிய தாழ்வுச் சொல்லாயிற்று. சமஸ்கிருதத்தில் இத்தகைய வேறுபாட்டு அணிநயங்கள் இல்லை. (ப.112) அதில் முதலாம் வேற்றுமை (எழுவாய் வேற்றுமை) முதலாக ஏழாம் வேற்றுமை ஈறாக ஏழுவேற்றுமைகள் உள்ளன. இவற்றில் முதல்வேற்றுமையை விளிவேற்றுமை (எட்டாம் வேற்றுமை)யாக விரிப்பதும் உண்டு. எனினும் இதனை எட்டாம் வேற்றுமையாகக் கருதுவதில்லை. ஒவ்வொரு வேற்றுமையிலும் ஒருமை, இருமை, பன்மை எனும் மூன்று எண்களைக் காட்டுவது இயல்பு. இதனால் சமஸ்கிருதத்திலுள்ள வேற்றுமைகளின் விரிவு (3 X 7 =21) 21 ஆகிறது. தமிழில் விளிவேற்றுமையைத் தனியாகச் சேர்த்து எட்டாக்கியுள்ளனர்.

வடமொழியில் வடிவ வேறுபாடுகளின் அடிப்படையில் 7 வேற்றுமைகள் வகைப்படுத்தப்பட்டன. இவை பொருள் வேறுபாட்டின் அடிப்படையில் அமைந்தவை அல்ல. *(பக்.19-116)*

தமிழில் உள்ள நிலம், பழம் முதலிய அஃறிணைச் சொற்களில் உள்ள 'அம்' ஈறு வடமொழியில் உள்ள வனம், பலம் ( அஃறிணைச் சொற்கள் போல் உள்ளன. இந்த ஒப்புமையைக் கூர்ந்து ( ாக்கினால் இந்த 'அம்' ஈறு தமிழிலிருந்து சமஸ்கிருதத்திற்குச் சென்றிருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது. ஏனெனில் நிலம், பழம் எனும் தமிழ்ச் சொற்கள் பகாப்பதங்களாக உள்ளன. வடமொழியில் முதல் வேற்றுமை ஒருமை குறித்ததாக உள்ளது. முதல் வேற்றுமைக்குரிய உருபு சேராத நிலையில் இயல்பாக உள்ள பெயர்ச்சொற்களுக்கு உன்னிப்பாகச் சில உருபுகளைச் சேர்த்து அவை பெயர்ச்சொல் இறுதியில் சேர்ந்து, கெட்டுப்போனதாக (மறைந்து போனதாக)க் கூறுகின்றார். வாரி (தண்ணீர்), மது (தேன்) இவை எத்தகைய செயற்கை ஈறுகளும் சேர்க்க வேண்டாத இயல்பான தனிச்சொற்கள். இயல்பாகவே ஒருமைகுறித்து நின்றன. இவை போன்றே வனம், பலம் போன்றவையும் வேறு ஈறு தேவைப்படாதவை. இவற்றில் அம் என்பதை ஈறாகப் பிரித்துக்காட்டி வன, பல என்பவற்றை அடிச்சொற்களாகக் காட்டியிருக்கிறார்கள் எனக் கருதவேண்டியுள்ளது. *(ப.21)*

தமிழ், பிராகிருதம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளின் இலக்கணங்களை நுட்பமானஆய்விற்கு உட்படுத்தும் அடிகளார், தமிழ் முதலிலும், பிராகிருதம் அடுத்தும், அதற்கடுத்தே சமஸ்கிருதமும் தோன்றியிருக்க வேண்டும் என்ற தமது முடிவிற்கு அரண் செய்யும் சான்றுகள் பல தருவதைக் காணலாம். தமது நூலின் தொடக்கத்திலேயே, மாந்த இனத்திற்கு ஒரு முதல் ஆதிமொழி மிகப் பழங்காலத்தில் தோன்றி அம்முதல் தாய்மொழியிலிருந்து பிரிந்து அவை வெவ்வேறு மொழிகளாய் ஆகியிருக்க வேண்டுமா, அல்லது உலகின் பல்வேறு இடங்களில் பல்வேறு மொழிகள் ஒரே காலத்தில் தோன்றியிருக்க வேண்டுமா எனும் இருவேறுபட்ட கோட்பாடுகளைச் சுட்டிக்காட்டுகிறார். வடநூலார் வீசிதரங்க நியாயம் என்றழைக்கும் நீரலைப்பரவல் கொள்கையின்படி ஓர் அலை தோன்றிக் கடற்கரையைத் தொடுவதற்கு முன்னமேயே அடுத்தடுத்து அலைகள் தொடர்ந்துவந்து அலையடுக்குகள் உருவெடுப்பதுபோல் முதலில் தோன்றிய ஒரு மொழியின் விளைவாகவே பலமொழிகள் பிறக்கின்றன என்பது ஒரு சாரார் கொள்கை. 'கதம்ப மூல நியாயம்' என்று கூறப்படும் கடம்பமரக் கொள்கையின்படி, கடம்பமரத்தின் எல்லாப்பகுதிகளிலும் ஒருசேர மொட்டுகள் அரும்பி அவை ஒருசேர மலர்வதைப்போல, உலகில் மாந்தர்கள் பல இடங்களில் தோன்றிப் பலமொழிகளை உருவாக்கியிருக்க வேண்டும் என்பது இன்னொரு சாரார் கொள்கை.

இக்கொள்கைகளை இன்றைய மொழிநூலார் ஆராயவேண்டும் என்று கூறும் அடிகளார் இன்று உலகில் உள்ள எல்லாமொழிகளும் ஒரு மூலமொழியில் ஒடுங்கும் என்ற கருத்தையே உடையவர் என்பதை அவரது நூலைப்படிப்பார் உணரலாம்.

மொழிக் கண்டுபிடிப்பு என்பது ஒரு வியப்புக்குரிய பெரும்புரட்சி என்பதாலும், பன்முகத் தாக்கம் கொண்டது என்பதாலும் அது ஒரு முறையே

நிகழ்ந்திருக்க வேண்டும் என்பார் ஹோரி ஹோயர் (Horry Hoijer) எனும் மொழியியல் வல்லுநர்.

The invention of language was so far-reaching, so revolutionary that it must have occurred just once.

அமெரிக்க ஏல் பல்கலைக்கழகத்து மொழியியல் பேராசிரியராகிய சுவதேஷ் (Swadesh) என்பார் மொழியின உறவுகளை ஆராய்வதற்கு lexicostatic glottochronology என்ற முறையை எடுத்துக்கொண்டார். அடிப்படையான நூறு பொருள்களுக்கு இரண்டு அல்லது மேற்பட்ட மொழிகளில் வழங்கும் சொற்களின் ஒப்புமையைக் கண்டறிந்து அவற்றின் பிறப்புப் பற்றிய முடிவிற்கு வருவதே இம்முறையாகும். யான், நீ, இது, அது, பார், கேள், வாய், பல், கல், மண், மலை, மீன் போன்றவற்றிற்கான வெவ்வேறு மொழிச் சொற்களை எடுத்துக்கொண்டு அவற்றுள் 86 விழுக்காடு ஒற்றுமை இருக்குமானால் அவை 1000 ஆண்டுகட்குமுன் ஒரு மொழியாக இருந்திருக்க வேண்டுமென்றும், 74 விழுக்காடு ஒப்புமை இருந்தால் அவை 2000 ஆண்டுகளுக்குமுன் ஒன்றாய் இருந்திருக்க வேண்டும் என்றும் முடிவு செய்யலாம் என்பது அவர் முடிவு. அன்னார் வேர்ச்சொல் அமைப்புமுறை ஒற்றுமை, அகரவரிசை ஒற்றுமை (குறிப்பாக, மெய் ஒற்றுமை), இலக்கண ஒற்றுமை ஆகியவற்றின் அடிப்படையில் இந்தோ-ஐரோப்பியம், செமித்திக், ஊரல்-அல்டேயிக் ஆகிய மூன்று பன்மை மொழியினங்களும் ஒரு முன்மொழியிலிருந்து கிளைத்திருக்கலாம் என்ற கருத்தை முன் வைத்தார்.

இதுபோன்ற இன்றைய மொழியியலாரின் ஆய்வுகள் சட்டம்பி அடிகளார் கூறும் கருத்தை வலுப்படுத்தும் முறையில் அமைந்துள்ளன.

## IV

சுனிதி குமார் சாட்டர்ஜி தமது வங்க மொழியின் தோற்றமும் வளர்ச்சியும் எனும் நூலில் சமஸ்கிருதத்தில் காணப்படும் திராவிட மொழிக் கூறுகளை, இந்தோ-ஆரிய மொழிக்குடும்பத்தில், திராவிட மொழிக்குடும்பம் ஏற்படுத்திய தாக்கங்களாகக் கருதுகிறார். இவற்றை (1) phonetic (2) morphological (3) syntactical (4) Glossic எனும் தலைப்புகளின் கீழ்ப்பட்டியலிடுகிறார்.

I (i) The insertion of the palatal and labial semivowels in connection with front and back vowels respectively and of <n>, which is characteristic of Dravidian

(ii) The change of the Indo-Iranian spirant < Z (zh)> to the stop <j(jh)>

(iii) The occurrence of cerebrals, <?, ?, ?, ?, ? > are peculiarly Dravidian sounds, not found in any Indo-European speech other than Vedic and Sanskrit

(iv) Insertion of short vowels by anaptyxis in consonant groups. (eg. kilesa, sineha, harisa, ratana, sumiraÏa, paraÏa, baramhaÏa)

(v) Change of <c, j> to <ts, dz>

(vi) Change of <s> to <h>

(vii) The voicing of intervocal unvoiced stops

(viii) The retention of a final vowel

II (i) The gradual disuse of prepositions

(ii) The absence of the dative-accusative case with the affix (<ko, ke, ku> in Indo-
Aryan and
<ku> in Dravidian) for neuter nouns

(iii) An adjectival treatment of certain cases

(iv) Absence of affixes in the comparison of the adjective

(v) The use of conjunctives and participles with an adverbial function, giving rise to what is
known as the compound verb

(vi) An almost complete disuse of Old Indo Aryan moods and tenses reducing the verb-system of Aryan to an indicative present form (and in some cases an indicative future), a past participle forming the past, a present participle , a conjunctive, and some verbal nouns, and a passive indicative present.

The Dravidian tenses developed out of participles; there is a gradually increasing employment of the participle forms in the development of Aryan.

The Indo-Aryan, like Dravidian, forms passives by means of compound verb constructions, in which the roots meaning to go, to fall, to suffer, to eat etc. are auxiliaries.

(vii) As in Dravidian, Onomatopoetic formations are to be found in a large number in Aryan.

(viii) Presence of 'echo words'. A word is repeated partially (partially in the sense that a new syllable, the nature of which is generally fixed, is substituted for the initial one of the word in question, and the new word so formed, unmeaning by itself, echoes the sense and sound of the original word), and in this way the idea of 'et cetera', 'and things similar to or associated with that', is expressed.

The Dravidian languages substitute the syllable <ki-, gi-> for the initial one of the original word.

| | |
|---|---|
| Tamil | : <kudirai-kidirai> |
| Kannada | : <kudire-gidire> |
| Telugu | : <gurramu-girramu> |
| Bengali | : <ghora-?ora> |
| Maithili | : <ghora-tora> |
| Hindustani | : <ghoÙa-uÙa |
| Marathi | : <ghoÙa-biÙa> |
| Sinhalese | : <aswaya-baswaya> |

III (i) Syntax is regarded as being of greater importance in linguistics, as an inherited peculiarity, than phonetics or morphology, which are easily acquired or modified. It is in syntax that Indian Dravidiandom and Aryandom are one. The syntactical arrangement of an ordinary Sanskrit sentence. As a rule, first comes the subject with its attributes, second the object with its enlargements, third the extension of the predicate, and lastly the verb.

As in Tamil, so in Classical Sanskrit there is the usual predominance of gerunds and the clauses formed by them, of the relative participles which take the place of relative clauses, and of the Oratio recta instead of the Oratio obliqua.

ii) The omission of the copula is preferred by both Indo Aryan and Dravidian.

Bengali : <e-?a amadera baÙ- >
Kannada : idu namma mane
Tamil : இது நம்ம வீடு

iii) Use of a conjunctive meaning ‘ having said’ in the sense of ‘as because’, recapitulating and introducing a conditional clause.

Bengali : <baliya>
E.Hindi : <bol-ke>
Marathi : <mha?un>
Sinhalese : <kiya>
Tamil : <enîu>
Kannada : <endu>
Telugu : <eni>

iv) Employment of the infinitive for the polite imperative :

W.Hindi : <yah kam karna >
Kannada : <i kelasa maduvadu>
Tamil : <இந்த வேலையைச் செய்>

மிக்ஷி ஆரியம் இந்தியாவிற்கு வந்த நாட்களிலிருந்து திராவிட மொழிகளிலிருந்து பல சொற்களைக் கடனாகப் பெற்றிருக்கிறது. கி.பி. எட்டாம் நூற்றாண்டிலேயே குமாரிளர் என்பார் பெரிசியன், கிரேக்கம் ஆகியவற்றோடு திராவிடமும் வடமொழிக்குச் சொற்களைத்தந்தது என்று குறிப்பிடுவார். இந்தியாவிற்கு வெளியிலிருக்கும் பிராஹ்வியினர் திராவிடமொழி பேசுபவர் ஆவார். ஈரானில் திராவிட மொழிபேசும் வேறு பலர் இருந்திருக்கலாம். அவர்களோடும் ஆரியர்கள் தொடர்பு கொண்டிருந்திருக்கலாம்.

இந்தோ ஆரியமொழிக்குடும்பம் எவ்வளவு சொற்களைத் திராவிட மொழிகளிலிருந்து பெற்றதென்பதைக் கால்டுவெல், குண்டர்ட், கிட்டல் (kittel) போன்றவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

திராவிட மொழிகளுக்கும் இந்தோ - ஆரிய மொழிகளுக்கும் சொற்களின் அளவில் மட்டுமல்லாமல் இலக்கணக் கூறுகள் யாவற்றிலும் இத்தகைய ஒற்றுமைகள் இருப்பதை வங்க மொழியியல் அறிஞர் சுனிதிகுமார் சாட்டர்ஜி சுட்டிக்காட்டியுள்ளார். இவையெல்லாம் அவருடைய கண்டு பிடிப்புகள் அல்ல. அவரே குறித்துள்ளபடி, இவற்றைப் பல மேலை, இந்தியக் கல்வியாளர்கள் அவருக்கு முன் அறிந்து கூறியுள்ளார்கள். அவர்தமது நூலின் முன்னுரையில் திராவிடமொழிபேசுவாரே ஒரு காலத்தில் இந்தியா முழுவதும் வாழ்ந்தனர் என்று குறிப்பிடுகின்றார். “It is regarded as certain that Dravidian speakers were at one time spread over the whole of Northern India as well, from Baluchistan to Bengal. தமிழ்ச்சொற்கள் இருக்கு வேதத்து ஆரிய மொழியிலேயே காணப்படுகின்றன என்பதற்கும் சாட்டர்ஜி சான்றுகள் தருகிறார்.

அணு, அரணி, கபி, கலை, காலம், நீலம், நீஹர (மேகம் - பனி) புஷ்கர(தாமரை), புஷ்பம் (பூ), பூசை, பழம், பிளம், பீஜம் (விதை), மயில், இரவு, உருவம், சாயி (மாலை).

பிராமணங்களிலும் ஏராளமான தமிழ்ச் சொற்கள் இடம் பெறுவதையும் ஏற்றுக்கொள்கிறார். இவற்றுள் வெறும் பொருள்களைக் குறிக்கும் சொற்கள் மட்டுமல்லாமல் அறிவுத் துறைகளுக்கும், கருத்தாக்கங்களுக்கும் அடிப்படையான சொற்களும் காணப்படுவது நோக்கற்பாலது.

V

யாப்பிலக்கணத்திலும் வடமொழி திராவிட மொழிகளிலிருந்து கடன்பெற்றிருப்பதை வடமொழிப் பேராசிரியர்கள் சான்றுகளோடு நிறுவியுள்ளனர். தார்வாட் பல்கலைக்கழகத்தில் வடமொழிப் பேராசிரியராகப் பணியாற்றிய கே.கிருஷ்ணமூர்த்தி தமது காளிதாசனைப் பற்றிய நூலில் ‘ஆர்யா’ எனும் யாப்பு எவ்வாறு திராவிட மொழிகளிலிருந்து பெறப்பட்டு வடமொழியில் தனது செல்வாக்கை நிலைநாட்டியது என்பதைக் குறிப்பிடுவார். அனந்த நாராயணா தமது “Sanskrit and Dravidian : A Case of Prosodical Convergence” எனும் கட்டுரையில்

“Certain features of versification which are peculiarly Dravidian may be found utilized in Sanskrit poetry”

எனும் தமது முடிவிற்கு அரண்செய்யும் வகையில் லீலாசுகர் எழுதிய ஸ்ரீகிருஷ்ணகர்ணாமிருதம் எனும் கவிதையிலிருந்து எடுத்துக் காட்டுகள் தருவார்.

வேதக்கவிதைகளில் கையாளப்படும் யாப்பினின்றும் வேறுபட்ட யாப்பைக்கையாளும் வடமொழிச் செவ்விலக்கியக் கவிதைகள் திராவிட யாப்பைக் கையாளுகின்றன.

The Vedic metres are syllable - governed and consist of three, four, or five lines in a verse. The metres of Classical Sanskrit are either syllable - governed or matra- governed, each line being further divisible into various gaĺas, ‘groups of matras’ or consisting of different combinations of gaĺas (which are: ya, ma, ta, ra, ja, bha, na, sa). The gaĺas themselves comprise various combinations of laghu ‘short’ and guru ‘long’ (=light and heavy syllables). The vÜitta type of classical Sanskrit seems to be continuing the Vedic metres with the superimposition of matras, while the Jati type was taken from the Dravidian Prosodical system which is only matra - governed.

தமிழ் யாப்பிலக்கணத்து மாத்திரை எனும் அளவு முதலில் வடமொழியிலிருந்து வந்தது என்று தவறாகக் கருதப்பட்டதையும் பின்னர் அச்சொல்லும் பொருளும் தமிழிலிருந்தே வடமொழிக்குச் சென்றிருக்க வேண்டும் என்று நிறுவப்பட்டதையும் மொழியியல் அறிஞர்கள் அறிவர்.

கவிதையில் எதுகை, மோனைப் பயன்பாடுகளுக்கும் வடமொழி திராவிடத்திற்குக் கடன்பட்டிருப்பதையும் அனந்த நாராயணா தமது கட்டுரையில் தெளிவுபடுத்துகிறார்.

Deliberate rhyming is late in Sanskrit poetry and even in Prakrit it cannot be said to be regular. This might suggest the influence of native (=Dravidian) languages on Sanskrit which did not employ this feature in early stages.

மோனையானது வடமொழியில் வைதர்ப்ப நடையினின்றும் வேறுபட்ட கௌட நடையிலேயே காணப்படுகிறது. இது தென்னிந்தியராகிய தண்டின் என்பவரால் பரவலாக்கப்பட்ட நடையாகும். பிற்காலத்து வடமொழிக் காப்பியங்களில் கௌட நடையே பெரிதும் ஆளப்படுகிறது என்பதை அனந்த நாராயணா எடுத்துரைப்பார்.

லீலாசுகரின் கர்ணாமிருதம் வடமொழித் தன்னுணர்ச்சிப் பாக்களிலேயே தலைசிறந்ததென்றும் ஜெயதேவரின் கீத கோவிந்தத்தை விட சொல்லாட்சி, கருத்தாழம், இசையின்பம் ஆகியவற்றில் எல்லாம் பல படிநிலைகள் உயர்ந்ததென்றும் கூறும் அனந்தநாராயணா அடிக்கு முதலில் வரும் எதுகைகளையும் இடையிடையே வரும் மோனைகளையும் வடமொழியானது தமிழ், தெலுங்கு மொழிக் கவிதைகளிலிருந்து பெற்றிருக்கவேண்டும் என்று முடிவுகட்டுவார்.

## VI

பரோ(Burrow) தமது சமஸ்கிருத மொழி (The Sanskrit Language) எனும் நூலில்,

சமஸ்கிருதத்திற்குக் கடனளித்த அயல்மொழிக் குடும்பங்களில் தலைமை இடம்பெறுவது திராவிடமொழிக்குடும்பமே. வேதகாலத்திற்குப்பிறகு பல சொற்கள் கடன்பெறப்பட்டது தெளிவாகத் தெரியினும் இருக்கு வேதத்திலேயே சில சொற்கள் காணப்படுவது நோக்கற்பாலது.

என்றெழுதுவார். எமனோ, பரோ, குவிபர் ஆகிய மொழிநூல் வல்லுநர்களுக்குப் பின்னால் வந்த பல மேலை அறிஞர்கள் வெறும் சொல்நிலையில் மட்டுமல்லாமல் வேத மொழியானது தமிழ்த் தொடரிலக்கணத்தின் தாக்கத்திற்கும் ஆளானது என்பதைக் கண்டு அறிவித்துள்ளார்கள்.

Considering only the most reliable works, those of experts such as Emeneau, Burrow, and Kuiper and of a younger generation, Southworth, Colin Masica, or even McAlpin, we know that the Dravidian influence is perceptible from the most ancient strata of the Veda, not only in phonology and vocabulary but also in the structure of phrases and that it may go back to the Indo - Iranian.

என்பது பிரான்சுவா குரோ (Francois Gros) எனும் பிரெஞ்சு அறிஞரின் கூற்று.

இருக்கு வேதத்தில் தொடங்கிப் பல நூறாண்டுகள் தமிழ் வடமொழியில் எல்லா நிலைகளிலும் தனது தாக்கத்தை நிகழ்த்தியிருக்கிறது என்று

இவ்வறிஞர்கள் எல்லாரும் சான்றுகளோடு நிறுவியிருப்பதால், சட்டம்பி அடிகளார் குறிப்பிடுவது போல் இந்தியத்துணைக்கண்டம் முழுவதும் ஒரு காலத்தில் பரவியிருந்த தமிழிலிருந்து பிராகிருதமும் பிராகிருதத்திலிருந்து சமஸ்கிருதமும் கிளைத்திருக்க வேண்டும் என்று முடிவுகட்டலாம். இந்திய மொழிக்குடும்பம் ஒன்றேயென்றும் அதன் முதன்மொழி தமிழேயென்றும் உறுதியாகச் சொல்லலாம். அவ்வாறின்றி, இந்திய மொழிகளில் சமஸ்கிருதம் மட்டும் கிரேக்க, லத்தீன் மொழிக்குடும்பத்தைச்சார்ந்திருந்து இந்தியத் துணைக்கண்டத்துள் நுழைந்திருக்குமானால் தமிழ்மொழிக்குடும்பத் தாக்கம் அதன் அடித்தளத்தையே தகர்த்துப் பேரளவில் உருமாற்றம் செய்திருக்க வேண்டும்.

இந்திய மொழிகளின் மரபிலக்கணங்களையும் இன்றைய மொழியியல் கோட்பாடுகளையும் அறிந்தவர்கள் நடுநிலை உணர்வோடு நமக்குக் கிடைக்கும் தரவுகள் யாவற்றையும் எடையிட்டுப்பார்ப்பார்களானால் இத்தகைய முடிவிற்கு வருவதைத் தவிர வேறுவழியில்லை.

**மேற்கோள் நூல்கள்**

Burnell, A.C. On the Aindra School of Sanskrit Grammarians. Mangalore: Basel Mission

Book of Tract Depository, 1985.

Caldwell, R. A Comparative Grammar of the Dravidians. London (1856), 1913.

Chatterji, Suniti Kumar, The Origin and Development of the Bengali Language, London:

George Allen and Unwin, 1970.

Ellis, F.W., A Dissertation on the Malayalam Language, edited by Puthusseri Ramachandran, Thiruvananthapuram: Dravidian Linguistics Association,2005.

Ellis, F.W., The Ellis Manuscript, edited by P. Marudanayagam, Chennai: Kavya Publishers, 2010.

Ellis, F.W., Memorandum on Tamil Prosody, edited P. Marudanayagam, Chennai: Kavya Publishers, 2012.

Francois Gros, Selected Writings on Tamil Literature, Pondicherry.

Jones, Sir William, Third Anniversary Discourse, On the Hindus, Asiatic Researches, Kolkatta.

Trautman, Thomas R, Languages and Nations, California, 2006.

Burrow, T. The Sanskrit Language, Delhi: Motilal Banarsidass Publishers, 2001.

Compbell, Lyle, "Why Sir William Jones got it all Wrong, or Jones' Role in how to Establish

Langugage Families", University of Canterbury, New Zealand.

Ananthanarayana, H.S. "Sanskrit and Dravidian: A case of Prosodical Convergence" in International Journal of Dravidian Linguistics, Vol.XXXV No 1 January 2006.

பேரா. மதிவாணன் பதிப்பிக்கவிருக்கும் சட்டம்பி அடிகளாரின் ஆதி மொழி.

## 06. Some historical notes on the founding of the International Association for Tamil Research

*Amudhan Adigal*

The International Association for Tamil Research (IATR) was founded on 07-01-1964 at New Delhi, during the 26th International Congress of Orientalists. It is a pity that this Association, started with the sole aim of promoting researches in the field of Tamil language and culture could not be founded in the Tamil soil, though various attempts were made to do so.

THE SEED SOWN

The seed for this was already sown in 1950's. During the world tour undertaken in 1949-51, Dr. Xavier S. Thaninayagam found that the scarcity and paucity of English books on Tamil was the main cause why western Indologists were not interested in Tamil studies. So, he founded the quarterly journal *TAMIL CULTURE* in 1952 which attracted the western Indologists towards and inspired them to show interest in Tamil Studies. As a result, many of them like Jean Filliozat, Mortymer Wheeler, Von Fuehrer Heimendorf, M.B. Emeneau, Albertine Gaur, J.R. Marr, C.J. Diehl, Edgar C. Knowlton, V.A. Makarenko, Kamil Zvelebil and M. Andronov started contributing articles to Tamil Culture. The founding of the Tamil Culture Society at Colombo in 1952 and of the Academy of Tamil Culture at Chennai in 1954 were supportive of this venture. The Academy of Tamil Culture took upon the responsibility of publishing the journal *Tamil Culture* from 1954 onwards.

GETTING MADRAS GOVERNMENT INTERESTED

In a letter to the Government of Madras on 27-10-1961, Prof. T.P. Meenakshisundaram, Head of the Department of Tamil in Annamalai University and Prof. Xavier S. Thaninayagam, an ex-alumnus of Annamalai University and Head of the Department of Indian Studies in the University of Malaya, suggested an annual conference of university heads of departments of Tamil be convened every year by the Government so that common problems of courses, methods of teaching and items of research might be discussed.[1] In the mean time, Mr. C. Subramaniam, who, as the Minister of Education in the state of Madras and the Chairman of Tamil Research

*Dr. Amudhan Adigal is currently working as a Director, Thaninayaga Adigal Tamilology Institute, Secretary of Tamil Literature Society, founded by Thaninayaga Adigal in 1948 and also serves as the Vice President of Thamizhagap Pulavar Kuzhu, founded by Muthamizhk Kaavalar K.A.P Visvanatham. Amudhan Adigal holds a Doctorate in Tamil literature from Bharathidasan Unuversity, Tiruchi and a Master's degree in Journalism from Marquette University, Milwaukee, Wis. USA. He is fluent in Tamil, English, Latin and Italian and has a working knowledge of French and Portughese. E-mail:amudhantls1943@gmail.com.*

and Development Council, evinced keen interest in this project, was transferred to Delhi as a Minister of the Central Government of India.

INTEREST IN MALAYA

At this juncture, Thaninayagam explored the possibilities of Malayan sponsorship of a conference of Tamil Studies. The National Education (Indian Schools) Development Council (NEDC) of Malaya, under the leadership of Mr. V. Manickavasagam and Mr. V. Selvanayagam, was most enthusiastic about the holding of such a conference in Malaya. NEDC came forward to be a co-sponsor of such a conference and help with funds should the University of Malaya took the initiative in the matter.[2]

ATTEMPTING ONCE AGAIN

At the meeting of the Tamil Research and Development Council in August, 1963, under the chairmanship of Mr. M. Baktavatsalam, the then Chief Minister and Minister for Education, Prof. Thaninayagam developed his earlier suggestion further and proposed that an international meeting of Tamil scholars might be convened under the auspices of the Tamil Research and Development Council, immediately following the XXVI International Congress of Orientalists to be held in New Delhi in January 1964.[3] Thaninayagam was convinced that it was proper that such a conference must be organised by Tamilnadu and in Tamilnadu.

The correspondence, carried on between Thaninayagam and A.S. Gnanasambandan, who represented the Government of Madras in this project, proves the sincere efforts made by the Government in organizing the WORLD TAMIL CONFERENCE in Tamilnadu.[4] Details were planned and Gnanasambandan went to the extent of informing Thaninayagam of the dates of holding sessions in Madras, Annamalai Nagar and Madurai and the subjects on which papers would be presented in the Conference.

IATR BORN AT NEW DELHI

But "the plan of a First conference in Madras could not materialise for a great many reasons"[5] This failure did not discourage Thaninayagam nor did he give up the idea of organizing the Conference. He planned to make the XXVI meeting of Orientalists in New Delhi the occasion of forming an Association of Tamilologists. During the Orientalists' Congress, Thaninayagam and Prof. V.I. Subramoniam, a close friend of his from Annamalai University days and the then Head of the Department of Tamil in the University of Kerala, issued the following notice[6] through the Congress Secretariat :

---

XXVI INTERNATIONAL CONGRESS OF ORIENTALISTS
Indology (Modern Indian Languages and Linguistics) Section
SPECIAL MEETING OF SCHOLARS IN THE FIELD OF TAMIL STUDIES
There will be a special meeting of scholars interested in different fields of Tamil Studies on Tuesday, 7th January, 1964, at 12 noon in Committee Room F ( 1st Floor ).
Sgd. Xavier S. Thaninayagam Sgd. V.I.Subramoniam

---

Though many Tamil scholars from Tamilnadu attended the Orientalists' Congress at Delhi, initially they were not, according to Prof. V.I.Subramoniam[7], willing to cooperate with Thaninayagam in convening the preparatory meeting. This prompted Subramoniam and Thaninayagam to sign the note of invitation to the meeting. However almost all the scholars from Tamilnadu, then assembled at Delhi for the Congress, attended the meeting and helped to form the IATR on January 7, 1964.

The following were present at the inaugural meeting :

Prof. T.P. Meenakshisundaram, Annamalai University; Prof. J. FILLIOZAT, College de France, Paris & Institut Francais d'Indologie, Pondichery; Prof. M.VARADARAJAN, University of Madras; Prof. Thomas BURROW, Oxford University, Prof. F.B.J. KUIPER, University of Leiden; Prof. A.C. CHETTIAR, University of Madras; Prof. K. KANAPATHI PILLAI, University of Ceylon; Prof. V.I. SUBRAMONIAM, University of Kerala; Prof. M.A. DORAI RANGASAMY, University of Madras; Prof. XAVIER S. THANINAYAGAM, University of Malaya; Dr. KAMIL ZVELEBIL, St. Charles University, Prague, Czechoslovakia; K.P. RATNAM, University of Malaya; K. ARUMUGAM, University of Delhi; S. Shankar Raj, University of Madras; CHARLES T. FEUYVESI, University of Madras and Harvard; HAROLD S. POWERS, University of Pennsylvania; Dr. R.E. ASHER, S.O.A.S., University of London; A.K. RAMANUJAN, University of Chicago; Miss VAUDEVILLE, EFEO Paris; Dr. K. MAHADEVA SASTRI, S.V. University, Tirupati; M.R. JAMBUNATHAN, Bombay; R. SHANMUGAM, University of Delhi; SAALAI ILANTHIRAYAN, University of Delhi; ILAM. KANAKASOUNDARAI, University of Delhi; Rev. Fr. S. RAJAMANICKAM, St. Xavier's College, Palayamkottai; R. PARTHASARATHY, University of Delhi.

Prof. T.P. Meenakshisundaram was proposed to the Chair. Prof X.S. Thaninayagam explained the reason for convening a meeting of those interested in Tamil Studies and proposed the formation of an International Association of Tamil Research which proposal was seconded by Dr. Kamil Zvelebil. A suggestion was made by Dr. Shankara Raj Naidu, Reader in Hindi, University of Madras, that the Association might call itself 'International Association of Dravidian Research' and might include all Dravidian Languages and Literatures. The Convenors explained that while a separate body for such a purpose might be useful, the meeting was called for the express purpose of promoting Tamil Studies and the invitation had been issued only to those interested in Tamil Studies.[8]

Prof. Jean Filliozat, Prof. Thomas Burrow, Prof. F.B.J. Kuiper, Prof. T.P. Meenakshisundaram and Dr. Kamil Zvelebil spoke on the possible activities of the Association and the fields of research open to Tamilologists. Prof. X.S. Thaninayagam explained that a proposal to hold an International Conference of Tamil Studies

immediately following the Delhi Conference had not materialised but that such a conference could be an objective of the Association. It was also proposed that exchange of research information should be made through the quarterly journal, *Tamil Culture*, or through a newsletter.[9]

ELECTION OF OFFICEBEARERS

The Meeting then proceeded to the election of office bearers. Prof. T.P. Meenakshisundaram proposed and the meeting unanimously voted that Prof. Jean Filliozat be the President of the Association. The following were unanimously elected as Vice-Presidents and Secretaries:

Vice Presidents : Prof. Thomas Burrow (Oxford)
Prof. M.B. Emeneau (Berkeley)
Prof. F.B.J. Kuiper (Leiden)
Prof. T.P. Meenakshisundaram (Madurai)
Prof. M. Varadarajan (Madras)

Secretaries : Prof. Xavier S. Thaninayagam (Kuala Lumpur)
Prof. Kamil Zvelebil (Prague)

The meeting terminated with a vote of thanks to the chair proposed by Prof. V.I. Subramoniam. Since Prof. M.B. Emeneau was not present at the Delhi Conference, the Governing Body subsequently nominated him as a Vice-President of the Association. Mr. Subbiah was nominated as Treasurer prior to the holding of the Kuala Lumpur Conference .

Mr. H.W. Thambiah of Sri Lanka was nominated as a Vice-President at the closing session of the Kuala Lumpur Conference.[10]

MAIN ACTIVITIES

The main activities of IATR have so far been the convening of the International Conferences in various countries of the world and the publication of the Proceedings of the Conferences. It is worth remembering that the First Conference at Kuala Lumpur witnessed the publication of many scholarly works like the Literary Theories in Tamil and Referrence Guide to Tamil Studies as well as the re-publication of the Tamil-Portuguese Dictionary of Antam de Proenca (1679). It is sad to note that, while the Proceedings of all the Conferences have so far been published (with the exception of Thanjavur Conference in 1995), the publication of research works by the IATR has been abandoned in spite of the promises made at the Kuala Lumpuy Conference, most probably due to lack of funds. One can understand the financial constraints of the IATR as it has no funds of its own but has to depend on the generosity of Governments and philanthropists for funds to meet the expenses of the Conferences.

EXPLODING THE MYTH

What has the IATR achieved so far? It has, mainly through the International Conferences of Tamil studies, contributed to " explode the myth that research in Tamil language and literature was possible only to those whose mother tongue was Tamil. Tamil studies have broken through their narrow confines and grown in various ways. Instead of being confined to language and literature, research is being undertaken in the history, religion, philosophy, sociology, archeology, culture, fine arts and linguistics of the Tamil people. As a result of this, so much of new light has been shed on the greatness of Tamil language and culture". [11]

GRATEFULLY REMEMBERING THE FOUNDER

As long as Thaninayagam was alive ( he died on 01-08-1980, just a few months before the convening of the Madurai Conference ), he remained the live wire of the IATR and carried on its activities almost singlehandedly. His deep knowledge of Tamil language and culture as well as his proficiency in various classical and modern languages of Europe, in addition to his close contacts with many international scholars of Tamil enabled him to be the fittest person for this noble task. Thaninayagam's residence served as the *de facto office* of IATR. He was, as Prof. V.I. Subramoniam would insist, blessed with the divine gift of attracting scholars of various fields to the arena of Tamil studies and convincing them of the greatness of Tamil[12]. It is good to remember at this juncture that the Birth Centenary of Thaninayaga Adigal (1913-2013 ) was celebrated in various countries and in various towns in India and in his native country, Sri Lanka. Now it is but proper and fitting that we gratefully remember the incomparable services of this great, gentle and noble Tamil scholar who, besides being the main person behind the founding of IATR and the catalyst behind the organization of the first five Conferences, was the Roving Ambassador of Tamil in the international arena.

**Footnotes**

1. Thaninayagam X.S. ( Ed.) *Proceedings of the First International Conference Seminar of Tamil Studies,* Kuala Lumpur, 1969. p. 874
2. Ibid. pp.875-876
3. Ibid. p. 876
4. Ibid. p. 876-880
5. Ibid. p. 878
6. Va. Ai. Subramaniam, *Va. Ai. Subramaniam Katturaigal* ( Tamil ), Puthaanatham, 2007. p. 158-159
7. Thaninayagam, op. cit. pp. 879-880
8. Ibid. p. 880

9. Ibid. p. 880
10. Vidyaanandan,Su. (Ed.) , *Naangaavadhu Anaithulagath Thamizhaaraaichi Maanaadu* (Tamil), Colombo, 1977. p. xx
11. Subramaniam Va Ai., Preface to Amudhan Adigal, Thaninayaga Adigalaar, (Tamil), International Institute of Tamil Studies. Chennai, 1993. p. xxiii.
12. Ibid.

### *Bibliography*


**AMUDHAN ADIGAL** *Thaninayagm Adigalaar,* Ulaga Thamizh Aaraaichi Niruvanam, Chennai, 1993.

**BORGES Charles J. and Helmut Feldmann,** *Goa and Portugal : Their cultural links,* Concept Publishing Company, New Delhi, 1997.

**RAJAMANICKAM S. ( Ed. )** *Vanakkam,* Thamizh Ilakkiyak kazhagam, Thoothukkudi, 1963.

..............................**( Ed. )** *Adiyaar Varalaaru,* Thamizh Ilakkiyak Kazhagam, Thoothukkudi, 1967.

**THANINAYAGA ADIGAL X.S.** *Onre Ulagam, 3rd ed.* Thamizh Peraayam, Chennai, 2012.

................................... *Thamizh Thoodhu, 5th ed.* Thavathiru Thaninayagam Adigal Thamizh Manram, Delft, 2001.

................................... *(Ed.) Antao de Proença's Tamil-Portuguese Dictionary A.D.1679,* University of Malaya, 1966.

........................................ *et al. (Ed.) Proceedings of the First International Tamil Conference-Seminar, 2 vol.,* University of Malaya, Kuala Lumpur, 1968.

**VAIDHIYANATHAN S., THANINAYAGAM X.S. et al. (Ed.)** *Proceedings of the Fourth International Tamil conference-Seminar, 2 vol.,* International Association for Tamil Research, Sri Lankan Branch, Colombo, 1977.


### அறிவிப்பு

தமிழ்த் தொடர்பான ஆய்வுநிறுவனங்களைத் தமிழாய்வுலகிற்கு வெளிப்படுத்துகிற வகையில் தமிழியலில் செய்திகள் இடம்பெறவுள்ளன. எனவே, தமிழ்த் தொடர்பான ஆய்வு நிறுவனங்கள் தங்களின் பணிகுறித்த செயல்பாடுகளை அனுப்பி உதவிட கேட்டுக்கொள்கிறோம்.

ஆசிரியர் குழு
தமிழியல்

# 07. தர்மராாசரதத்துத் திருமால் சிற்பம்

*சா.பாலுசாமி*

## ஆய்வுச்சுருக்கம்

தர்மராசரதத்தின் கீழ்த்தளத்துத் தென்மேற்கு மூலையில் இரண்டு கரங்களுடன் வடிக்கப்பெற்றுள்ள உருவம் அரசர், நரசிம்மவர்மர், இராஜசிம்மன் என்று பலவாறு விளக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலும் குறிப்பாகப் பல்லவரிடமும் தென்கிழக்கு ஆசியநாடுகளிலும் வளர்ந்த அரச-இறை ஒப்புமைக் கருத்தோட்டங்களைக் கருத்தில் கொண்டு நோக்கும்போது அவ்வுருவம், அரச உருவ அமைதியில் அமைக்கப்பெற்ற திருமால் வடிவம் என்று கருதமுடிகிறது.

## கீழ்த்தளச் சிற்பங்கள்

'பஞ்சபாண்டவர் ரதங்கள்' என்றும் 'ஐந்து ரதங்கள்' என்றும் அழைக்கப்பெறும் ஒற்றைக் கற்றளிகளுள், மேற்குநோக்கி அமைந்துள்ள நான்கில் தென்கோடியில் அமைந்துள்ள தர்மராச ரதம் எனும் அத்யந்தகாமப் பல்லவீச்சுர கிரகம் தனித்தன்மைகள் பல கொண்ட ஒப்பற்ற படைப்பாகும்.



தர்மராஜ ரதம்

மூன்று தளங்களுடன் அமைந் துள்ள இத்தளி, சிவனுக்காக எடுக்கப் பட்ட கோயிலாகும்.

ஏனைய நான்கினையும் விட உயரத்தில் மிகுந்த இத்தளி ஓரளவு பீமரதத்தினை ஒத்ததாகும். இதன் கீழ்த்தளத்தில் கருவறை அமைக்கும் முயற்சி மேற்கொள்ளப்படாமல் உள்ளது. இத்தளத்தின் பக்கங்களில் அமைக்கப்பட்டுள்ள தூண்களைக் காணும்போது இதில் கருவறையைச் சுற்றிவர ஒரு பிரகாரம் அமைக்கும் முயற்சி இருந்திருப்பதை அறியமுடிகிறது. அவ்வகையில் இது பீமரதம் போலவே போலிசந்தார அமைப்பில் உருவாக்கப்பட்டது என்பதை உணரமுடிகிறது.

இதன் மூன்று தளங்களிலும் எழில் பொங்கும் சிற்பங்கள் வடிக்கப்பெற்றுள்ளன. அடித்தளத்தின் சுவர்களில் இடையிடையே தூண்கள் அமைய இரு ஓரங்களிலும் எழிலார்ந்த சிற்பங்கள் ஆள் உயரத்துடன் வடிக்கப் பெற்றுள்ளன.

---

*முனைவர் சா. பாலுசாமி அவர்கள் பாரதி புத்திரன் என்ற புனைப் பெயரைக் கொண்டவர். சென்னைக் கிறித்துவக் கல்லூரியின் தமிழ்த் துறையில் 1988 முதல் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி வருபவர். சென்னைக் கிறித்துவக் கல்லூரியின் ஆய்வு மேம்பாட்டுத் துறையின் இணை முதன்மையராக விளங்கியவர். சென்னைப் பல்கலைக்கழகத்தில் 'நாயக்கர் கால கலைக் கோட்பாடுகள்' எனும் தலைப்பில் முனைவர் பட்டமும் 'இராமலிங்க வள்ளலாரின் மனிதநேயம்' எனும் தலைப்பில் ஆய்வியல் நிறைஞர் பட்டமும் பெற்றவர். அர்ச்சுணன் தபசு, மாமல்லபுரம் புலிக்குகையும் கிருஷ்ணமண்டபமும் , தம்பி நான் ஏது செய்வேனடா, நாயக்கர் கால கலைக் கோட்பாடுகள், கொல்லி மலை மக்கள் பாடல்கள் போன்ற நூல்களை எழுதியவர்.*
*E-mail: nayakarts@gmail.com.*

மேற்குப்புறம் வலக்கோடியில் சிவபெருமான் சமபங்கமாக நிற்கிறார். பின்னிருகைகளும் தளர்ச்சியுடன் தொங்கும் நிலையில் உள்ளன. பின் வலதுகரம் பாம்பினைப்பற்றியிருக்க, இடதுகரம் ஏதோ ஒரு பொருளைக் கொண்டுள்ளது.

முன்வலதுகரம், கட்டைவிரலை வளைந்து தொடும் சுட்டு விரலும் கொண்டு, ஏனைய மூன்று விரல்கள் மடித்திருக்க முத்திரை ஒன்றினைப் பாவிக்கிறது.

இவ்வுருவத்தின் பின்கைகள் தாழ்நிலையில் வடிக்கப்பெற்றிருப்பதன் காரணம் விளங்கவில்லை. மேற்புறம் காட்டுதற்கியலா வண்ணம் பாறையில் ஏதேனும் சிதைவு நேர்ந்தமை காரணமாக இருந்திருக்கலாம். அத்துடன் இவ்வுருவத்தின் கண்களும் உதடுகளின் அமைப்பும் கன்னமும் ஏனையவற்றிலிருந்து சிறிது மாறுபட்டுள்ளதாகவும் தோன்றுகிறது.

இடது கோடியில் உள்ள சிவபெருமான் சமபங்கத்தில் நின்று வலது முன்கையில் அபய முத்திரை காட்டுகிறார். இடது கரத்தினைத் தொடைமீது வைத்துள்ள அவரது பின்வலதுகரத்தில் அக்கமாலையும் இடதுகரத்தில் மானும் காட்சியளிக்கின்றன. இடையருகில் பாம்பு காட்டப்பட்டுள்ளது.

வடக்குச் சுவரின் வலதுகோடியில் நான்முகன் நான்கு கரங்களுடன் காட்சியளிக்கிறார். பின்வலது கரத்தில் அக்கமாலையும் இடது கரத்தில் மலரும் கொண்டுள்ள அவரது வலது முன்கரம் அபய முத்திரை காட்ட, இடது கரம் தொடைமீது வைக்கப்பட்டுள்ளது.

இடது கோடியில் அரியரன் சமபங்கமாக நிற்கிறார். பின்கரங்களில் மழுவும் சங்கும் காட்டப்பட்டுள்ளன. முன்வலது கரம் அபய முத்திரை காட்ட, இடதுகரம் தொடைமீது வைக்கப்பட்டுள்ளது.

கிழக்குச் சுவரின் வலது கோடியில் நின்றகோலத்தில் அர்த்தநாரியாகச் சிவன் காட்சியளிக்கிறார்.

பின்கரங்களில் மழுவும் மலரும் காணப்படுகின்றன. முன் வலதுகரம் அபயமுத்திரை காட்ட, இடது கரம் லம்ப ஹஸ்தமாக அமைந்துள்ளது.

இடதுகோடியில் சுப்பிரமணியர் நான்கு கரங்களுடன் காட்சியளிக்கிறார். பின்னிரு கரங்களும் அக்கமாலையையும் மலரையும் ஏந்தியுள்ளன. வலதுகரம் அபய முத்திரை காட்ட இடதுகரம் தொடைமீது அமைந்துள்ளது.

தென்புறச்சுவரின் வலக்கோடியில் நான்கு கரங்களுடன் சிவபெருமான் நிற்கிறார். வலது பின்கரத்தில் மழுவும் இடதுகரத்தில் அக்கமாலையும் காணப்படுகின்றன. வலதுமுன்கரம் அபய முத்திரை காட்ட, இடதுகரம் தொடைமீது வைக்கப்பட்டுள்ளது.


(ஜயபாட்டிற்குரிய சிற்பம்)

## ஒரு சிற்பம்

இச்சுவரின் இடது கோடியில் இரண்டு கரங்களுடன் சமபங்க நிலையில் ஓர் உருவம் உள்ளது. இடக்கரம் தொடைமீது

வைக்கப்பட்டிருக்க, கீழே தொங்கும் வலக்கரம் முத்திரையொன்றைக் காட்டுகிறது.

இவ்வுருவத்தின் தலையில் உயரமான கிரீடமகுடம் விளங்குகிறது. அம்மகுடம் அடிப்பகுதியில் ஓரளவே பெரிதாக உள்ளதால், ஏறக்குறைய சமமான அளவுடன் மேற்சென்று உச்சியில் தட்டையாக முடிந்துள்ளது. நீண்ட செவிகளில் குண்டலங்கள் காணப்படுகின்றன. சற்றுப்பெரிய உருண்டை மணிகளாலான மாலை கழுத்தினை அணிசெய்கிறது. மார்பின் குறுக்கே திரண்ட முப்புரிநூல் திகழ்கிறது. வயிற்றின் மீது உதரபந்தம் காணப்படுகிறது. திரண்டமடிப்புடன் காணப்படும் இடையாடையின் முனைகள் கால்களின் இருபக்கங்களிலும் தொங்குகின்றன.

அகன்ற மார்புடனும் திரண்ட தோள்களுடனும் கம்பீரமாகக் காணப்படும் இவ்வுருவத்தின் கைகளில் கங்கணங்கள் காணப்படுகின்றன. இடதுகரம் தொடைமீதுள்ளது. வலதுகரம் உள்ளங்கை வெளிப்புறம் தெரியும் வண்ணம் வைக்கப்பட்டு, பெருவிரலினைச் சுட்டு விரல் வளைந்து தொட்டு நிற்க, நடுவிரலும் மோதிர விரலும் உள்நோக்கி வளைக்கப்பட்டுள்ளன. இயல்பான நிலையில் சுண்டுவிரலும் சிறிது மடிந்துள்ளது. இது கடக முத்திரையாகும்.

அருள்ததும்பும் விழிகளுடன் நிற்கும் இவ்வுருவம் யார் என்பது குறித்து அறிஞர்களிடம் பல்வேறு கருத்தோட்டங்கள் நிலவுகின்றன.

அறிஞர் கூ.ரா.சீனிவாசன் இது முதலாம் நரசிம்மனுடைய உருவம் எனக் குறிப்பிட்டுள்ளார்.[1]

இச்சிற்பத்தை மல்லையிலுள்ள பிற அரச சிற்பங்களுடன் சிறப்பாக ஒப்பிட்டு விளக்கி, இது பல்லவ அரசர் ஒருவரைப் படம் பிடிக்கிறதென்று மு.நளினியும் இரா.கலைக்கோவனும் தங்கள் நூலில் குறிப்பிட்டுள்ளனர். அதேவேளையில் நூலின் பின் கொடுத்துள்ள இச்சிற்பப் புகைப்படத்தின்கீழ்ப் பல்லவப் பேரரசர் (இராஜசிம்மர்) என்று அரசர் பெயரைக் குறிப்பிட்டுள்ளனர்.[2]

இரா.நாகசாமியும் தம் புகழ்மிகு *மாமல்லை* எனும் நூலில் 'இதையே நரசிம்மனின் உருவம் என்று பலர் குறிப்பர்' எனக் குறிப்பிட்டுள்ளார்.[3]

டாக்டர் லாக்வுட் இது 'நரசிம்மனாகும்' என்று கருத்துரைத்துள்ளார்.[4]

இவ்வாறு அறிஞர்கள் பலரும் இதனைப் பல்லவ அரசர் என்று குறிப்பிட்ட போதும் சில ஐயங்கள் எழுவது தவிர்க்கவியலாததாக உள்ளது.

அத்யந்த காமத்தின் இரண்டாம் தளத்தில் சிவன், கண்ணன், வழிபடும் அடியவர்கள் சிற்பங்களே காணப்படுகின்றன.

மூன்றாம் தளத்திலும் கதிரவன், சந்திரன், அடியவர், வாயிற்காவலர், சோமாஸ்கந்தர், தட்சிணாமூர்த்தி ஆகியோரது உருவங்களே வடிக்கப்பெற்றுள்ளன.

ஆகவே அவ்விருதளங்களிலும் அரச உருவை அமைக்கும் நோக்கம் சிற்பிகளுக்கில்லை என்பது தெளிவு. அதுபோன்றே கீழ்த்தளத்தில் சுப்பிரமணியரையும் நான்முகனையும் தவிர்த்து, சிவனே பல்வேறு வடிவங்களில் முதன்மை பெறுவதைக் காணமுடிகிறது. சக்திக்குத் தனிச் சிற்பம் இக்கோயிலில் வடிக்கப்பெறவில்லை. ஆனால் மாதொரு பாதியன் உருவம் அதனை ஓரளவு ஈடுசெய்வதாகக் கருதவியலும்.

திருமால், கருடாந்திகராகவும் சோமஸ்கந்தர் தொகுப்பில் சிவனது பின்புறமும் அரியரனாகவும் மட்டுமே இடம்பெற்றுள்ளார். முதல் தளத்திலும் இரண்டாம் தளத்திலும் சிவனுடன் இணைந்த அரியர கோலத்தில் திருமால் காணப்படுகிறார்.

மும்மூர்த்திகளுள் ஒருவரான நான்முகனுக்கும் பெரும் முதன்மை தந்து கீழ்த்தளத்தில் வடக்குச் சுவரில் தனியுருவம் வடிக்கப் பெற்றிருக்கும்போது, சுப்பிரமணியருக்கு முதன்மை தந்து தனியுருவம் கிழக்குச் சுவரில் செதுக்கப்பட்டிருக்கும்போது, முதன்மைத் தெய்வங்களுள் ஒருவரான திருமாலுக்குத் தனியுருவம் ஏதும் அத்யந்தகாமத்தில் வடிக்கப்பெறவில்லை என்பது இடர்ப்பாட்டினைத் தருகிறது.

சிவன், திருமால், நான்முகன், துர்க்கை, முருகன் ஆகியோர் தனிப்பெரும் தெய்வங்களாகப் பல்லவர் காலத்தில் உயர்ந்ததையும் அவர்களுள் திருமால் பெற்றிருந்த சிறப்பிடத்தையும் மகிடாசுரமர்த்தினி குடைவரை, வராகர் குடைவரை, ஆதிவராகர் குடைவரை, கடற்கரைக் கோயில் போன்ற இடங்களில் காணமுடிகிறது.

ஆகவே, பெரும் படைப்பான அத்யந்த காமத்தில் தனிச்சிற்பம் திருமாலுக்கு இல்லை என்பது ஐயப்பாட்டிற்கு உரியதாகிறது.

இந்நிலையில் இத்தளியின் தெற்குச் சுவரில் வலதுகோடியில் இரண்டு கரங்களுடன் செதுக்கப்பட்டுள்ள உருவம் திருமாலுக்கு உரியதே எனக் கருதுகோள் கொண்டு எண்ணிப்பார்ப்பது தேவையாகிறது.

இச்சிற்பத்தைப் பார்த்தவுடன் திருமால் என எண்ண முடியாததற்கு,

- இவ்வுருவம் இரண்டு கரங்களை மட்டும் கொண்டுள்ளமை.
- திருமாலிற்குரிய சங்கும் சக்கரமும் காணப்படாமை.
- திருமாலின் இருகரங்களும் அபய, வரத முத்திரைகளைக் காட்டாமை.

ஆகியன காரணங்களாகும். இக்காரணங்களே இது அரச உருவாக இருக்கலாம் என்றெண்ணுவதற்கு அடிப்படையாகும். ஆகவே, இச்சிற்பத்தை மல்லையிலுள்ள ஏனைய அரச உருவங்களுடன் ஒப்பிட்டுக் காண்பது தேவையாகிறது.

தற்போது காணக்கிடக்கும் மல்லைச் சின்னங்களுள் ஆதிவராகர் குடைவரையிலும் கடற்கரைக் கோயிலிலுமே அரச உருவங்கள் காணப்படுகின்றன. அர்ச்சுனரதத்தில் உள்ளவையும் அரச உருவங்களே என முனைவர் சி.மீனாட்சி, இரா.நாகசாமி போன்ற அறிஞர்கள் கருதுகின்றனர்.[5]


சிம்ம விஷ்ணு, ஆதிவராகர் குடைவரை.

இவற்றுள்ளும் கடற்கரைக் கோயிலின் பிரகாரச் சுவர்களில் இருந்த அரச உருவங்கள், வரலாற்றைக் குறிக்கும் சிற்பங்கள் பெரும் பாலும் தெளிவற்றுக் காணப்படுகின்றன. ஆனால், ஆதிவராகர் குகையில் துணைவி யருடன் காணப்படும் இரு அரசர்களின் உருவங்கள் நல்லநிலையில் காணக்கிடைத்துள்ளன.

இக்குடைவரையின் வலபுறச் சுவரில் அரியணையில் வீற்றிருக்கும் மன்னனும் அவனது இருபுறமும் துணைவியர் இருவரும் நிற்கும் சிற்பத்தொகுதியொன்றும் பெரிய அளவில் எழிலுறச் சித்திரிக்கப்பட்டுள்ளன. அதன்மேலே 'சிம்ம விண்ணுப் போத்ராதிராஜன்' என்ற கல்வெட்டு பல்லவ கிரந்த எழுத்துகளில் பொறிக்கப்பட்டுள்ளது.


மகேந்திரவர்மர், ஆதிவராகர் குடைவரை

தென்புறச்சுவரில் ஓர் அரசனும் அவன் துணைவியர் இருவரும் நிற்கும் நிலையில் காட்டப் பட்டுள்ளனர். தன்னருகில் நிற்கும் துணைவியின் வலக்கரத்தைத் தன் இடது கரத்தால் பற்றி நிற்கும் அரசன் வலக்கரத்தால் கோயில் கருவறைத் தெய்வத்தைச் சுட்டிக் காட்டும் பான்மையில் நிற்கிறார். இச்சிற்பத் தொகுதியின்மேல் 'மஹேந்திரப் போத்ராதி ராஜன்' என்று பல்லவ கிரந்த எழுத்தில் எழுதப்பட்டுள்ளது.

இவ்வரிய சிற்பங்களில் காணப்படும் அரசர்கள் யாவர் என்பது குறித்து அறிஞர் களிடம் மாறுபட்ட கருத்துகள் இருப்பினும், பல்லவ கால அரசர்களின் பல்வேறு தன்மைகளை உணர்ந்து கொள்ள இவை மிகப் பெரும் சான்றாதாரங்களாகத் திகழ்கின்றன என்பதில் ஐயமில்லை. இவ்வரசவுருவங்களைத் தருமராசரத 'அரச' உருவத்துடன் ஒப்பிடுவதன் மூலம் சில தெளிவுகளை எட்டவியலும்.

**அரச உருவங்கள்**

| வ.எ | ஆதிவராகர் குகை | தருமராாசரதம் |
|---|---|---|
| 1. | அரசர் இருவரும் தத்தம் துணைவியர் இருவருடன் காட்டப்பட்டுள்ளனர். | துணைவியின்றித் தனித்துக் காட்டப்பட்டுள்ளார். |
| 2. | அரசர் இருவரின் மகுடங்களும் உயரம் குறைந்து காணப்படுகின்றன. தலைமீதிருந்து சற்றுக் குவிந்து செல்லும் மகுடத்தில், மேற்புறம் குவிந்து அமைவதாக அவை உள்ளன. | ஏறக்குறைய உருளை வடிவமாக உயர்ந்ததாகக் கிரீட மகுடம் அமைந்துள்ளது. |
| 3. | கழுத்திலும் செவிகளிலும் அணிகலன்கள் உள்ளன. | கழுத்தில் பெரிய மணிமாலையும் செவிகளில் அணிகலன்களும் உள்ளன. |
| 4. | மார்புகளில் பூணூல் காணப்படவில்லை. | மார்பில் திரண்ட முப்புரி நூல் காணப்படுகிறது. |
| 5. | இருவர் வயிற்றின் மீதும் உதர பந்தம் காணப்படவில்லை. | வயிற்றினைச் சூழ்ந்து உதரபந்தம் அமைந்துள்ளது. |
| 6. | முழங்கையில் கங்கணங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. | கங்கணங்கள் காணப்படுகின்றன. |
| 7. | சிம்மவிஷ்ணுவிற்கு உடலுடன் ஒட்டியதாக ஆடை காட்டப் பட்டுள்ளது. மகேந்திர வர்மருக்கு இடையிலிருந்து முழந்தாள் வரை தொங்கும் ஆடை காட்டப் பட்டுள்ளது. அதன் மையத்தில் மடிப்பாக நீண்டு தொங்கும் ஆடை இடைக்குச் சற்று மேலிருந்து காட்டப்பட்டுள்ளது. | ஆடை பொதுவாக இடைக்கட்டுக் கொண்டதாக, திரண்டபகுதி முன் தொங்குவதாக, காலின் இருபுறமும் நீண்டு தொங்குவதாகக் காட்டப்பட்டுள்ளது. |
| 8. | இடையைச் சுற்றிக் காட்டப்பட்டுள்ள அவ்வேட்டியின் ஒரு பக்கப்பகுதி அவரது இடது தொடையருகில் முடிவடைந்துள்ளது. ஆடையின் ஒரு முனை சிறு விசிறி மடிப்புப்போல் வயிற்றின் இடப்புறம் தெரிகிறது. | ---- |
| 9. | சிம்மவிஷ்ணு தன் வலக்கரத்தை உயர்த்தி முத்திரை காட்டுகிறார். சுட்டுவிரல் வளைந்து பெருவிரலைத் தொட்டுள்ளது. ஏனைய மூன்றுவிரல்களும் உட்புறமாக மடிந்துள்ளன. | தொங்கும் வலக்கரத்தின் உள்ளங்கை முன் தெரிவதாக வைக்கப்பட்டுள்ளது. சுட்டுவிரல் வளைந்து பெருவிரலைத் தொட்டுள்ளது. ஏனைய விரல்கள் உட்புறமாக மடிந்துள்ளன. |

இத்தகைய வேற்றுமைகளை எண்ணிப் பார்க்கும்போது இயல்புற்று, அழகுற மூன்று அரசர்களின் உடல்கள் காட்டப்பெற்றிருந்த போதிலும் மகுடம், பூணூல், உதரபந்தம், இடையாடை, தனித்தோற்றம் எனும் நிலைகளில் முக்கியமாக வேறுபடுகின்றன.



கருடாந்திகர், தருமராஜ ரதம்.

ஆனால், தர்மராசரதத்திலேயே காணப்படும் கருடாந்திரர், அர்ச்சுனரதக் கருடாந்திரர், ஆதிவராகர் குகைத் திருமால், மகிடாசுரமர்த்தினி குடைவரை, அனந்த சயனர் ஆகிய உருவங்களிலுள்ள பல்வேறு தன்மைகள் இவ்வுருவத்துடன் ஒத்துச் செல்கின்றன.

தர்மராசரத இரண்டாம் தளத்தில் கருடாந்திகராகக் காட்சியளிக்கும் திருமாலின் தலையிலுள்ள மகுடம், இதேபோன்று அடியில் சற்றே பெரிதாகவும் மேலே செல்லச் செல்லச் சற்றுக் குறுகியும் காணப்படுகிறது. நீண்டு தொங்கும் காதுகளில் குண்டலங்களும் கழுத்தில் மணிமாலையும் விளங்க, மார்பில் திரண்ட முப்புரிநூல் திகழ்கிறது. பின்னுள்ள இருகரங்களில் சங்குச் சக்கரங்களும், வலது முன்கையில் பெருவிரலைச் சுட்டுவிரல் தொட ஏனைய மூன்று விரல்கள் மடிந்த நிலையில் முத்திரையும் விளங்குகிறது.

மகிடாசுரமர்த்தினி குடைவரையில் ஆதிசேடன் மீது பள்ளிகொண்டுள்ள திருமாலின் தலையில் நீண்ட கிரீட மகுடம் துளங்குகிறது. செவிகளில் குண்டலங்களும் கழுத்தில் அணிகலனும் மார்பில் திரண்ட முப்புரி நூலும் காட்சியளிக்கின்றன. திருமால் இரண்டு கரங்களுடன் காணப்படுகிறார். கரம் கடக முத்திரை காட்டுவதாகக் கொள்ளப் படுகிறது.[6]



[illegible] மர்த்தினி குடைவரை

இடையைச் சூழ்ந்துள்ள பீதாம் பர ஆடை கணுக்கால் வரை நீண்டு காணப்படுகிறது. வலது தொடையருகில் இடையிலிருந்து தொங்கும் ஆடை காட்டப் பட்டுள்ளது.

அடியவர்களால் வழிபடப்படும் கோலத்தில் ஆதிவராகர் குகையில் காட்சிதரும் திருமால், சமபங்க நிலையில் நிற்கிறார். தலைமீது நீண்ட கிரீடமகுடம் விளங்கிறது. நான்கு கரங்கள் உள்ளன. வலது முன்கை விரலையும் நடுவிரலையும் உயர்த்திக் காட்டுகிறது. இடதுகை இடுப்பில் வைக்கப் பட்டுள்ளது. செவிகளில் குண்டலங்களும் கழுத்தில் அணிகலன்களும் மார்பில் பூணூலும் விளங்குகின்றன. இடையிலுள்ள பீதாம்பர ஆடை கணுக்கால் வரையிலும் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது.

இடையிலுள்ள ஆடை, நடுவில் திரட்சியாகப் பாதம் வரை காட்டப்பட்டுள்ளது. ஆடையின் பகுதி வலது தொடையருகில் தொங்குகின்றது.

அர்ச்சுனன் தபசுச் சிற்பத் தொகுதியில் இடம் பெற்றுள்ள, வதரியாசிரமமாக அறியப்பெறும் கோயிலின் உள்ளே திருமால் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறார்.


திருமால், ஆதிவராகர் குடைவரை

நான்கு கரங்களைக் கொண்ட அவரது வலது முன்கரம் சுட்டுவிரலும் மோதிர விரலும் தொட்டிருக்க, ஏனைய விரல்களை உட்புறம் மடித்து முத்திரை காட்டுகிறது. இடதுகை தொடையிலிருக்க, பின் கரங்களில் சங்கும் சக்கரமும் காணப்படுகின்றன. நீண்ட செவிகளில் குண்டலங்களும் கழுத்தில் மணிமாலையும் மார்பின் குறுக்கே முப்புரிநூலும் காட்டப்பட்டுள்ளன. இடையிலுள்ள பீதாம்பர ஆடை கணுக்கால் வரை காட்டப்பட்டுள்ளது. திரண்ட இடைக்கட்டு காணப்படுகிறது.

இவற்றை ஒப்பிட்டுக் காணும்போது கிரீடமகுடம், கழுத்தணி, செவிக் குண்டலங்கள், முப்புரிநூல், இடையாடையின் தன்மை ஆகியன தர்மராசரத உருவத்துடன் ஒன்றுபட்டுச் செல்வதை உணரமுடிகிறது.

மகிடாசுரமர்த்தினி குடைவரையில் பாம்பணைமேல் பள்ளிகொள்ளும் உருவம் இருகரங்களுடன் சங்கு, சக்கரமின்றிக் காணப்படுகிறது. ஆயினும் சங்கு, சக்கரம், கதை ஆகியன திருமாலின் கீழும் மேலுமாக மனித வடிவில் காட்டப்பட்டுள்ளன.

மேலும், ஆதிசேடன்மீது பள்ளிகொண்டுள்ள திருமால் பெரும்பாலும் இரண்டு கரங்களுடன் காட்டப்படும் மரபுள்ளது.[7] ஆயினும் மனித உருவில் நான்கு கரங்களுடன் காட்டப்படும் வழக்கமே பொதுவானதாகும். திருமால் கரங்களில் சங்கு, சக்கரம், கதாயுதம் ஏந்திய நிலையில் காட்டப்படுவார். தலையில் மகுடமும் காதுகளில் அணிகலன்களும் கழுத்தில் நகையும் காட்டப்படும். நீலவண்ண உடலில் மஞ்சள் வர்ணப்பட்டுப் பீதாம்பரம் துளங்கும்.

நின்றநிலையில் காட்டப்படும் திருமாலின் இடது முன்கரம் பெரிதும் கதாயுதம் ஏந்திய வண்ணம் அல்லது இடுப்பில் கை வைத்த (Katyavalambita hasta) வண்ணமோ காணப்படும்.

ஆனால், நான்குகரங்களுடன் காட்டுவதற்கு மாறாக, திருமாலை இரண்டு கரங்களுடன் காட்டும் மரபு குப்தர் காலத்திலிருந்தே தொடர்ந்து இருந்து வருகிறது.



விஷ்ணு, 4-6ஆம் நூற்., குப்தர் காலம்

"இந்து மதம்" புத்தெழுச்சி பெற்ற குப்தர் காலத்தில் வேத காலத்தில் பெறாத செல்வாக்கினைப் பெற்றவராய்த் திருமால் மும்மூர்த்திகளுள் ஒருவராக உயர்த்தப்பெற்றார். ஏராளமான திருக்கோயில்கள் எடுக்கப்பெற்றன. அவற்றில் திருமால் உருவங்களும் அவர்தம் அவதாரக் கதைகளைக் கூறும் நிகழ்ச்சிச் சிற்பங்களும் இடம்பெற்றுள்ளன.

அவற்றுள் திருமால் சிற்பங்கள் பலவும் இரண்டு கரங்கள் மட்டும் கொண்டவையாய்ப் படைக்கப் பெற்றுள்ளன. ஆயினும் அச்சிற்பங்கள் பலவும் சங்கு, சக்கரங்களை ஏந்திய வண்ணம் படைக்கப்பட்டுள்ளன.[8]

ஆகவே, தர்மராசரதத்தில் சங்கும் சக்கரமுமின்றிக் காணப்படும் உருவத்தைத் திருமாலாகக் கொள்வதில் தயக்கம் ஏற்படுகிறது. அதனைக் களைந்து கொள்ளக் குப்தர், பல்லவர் மற்றும் பல்லவர்தம் செல்வாக்குப் பெற்ற நாடுகளில் நிலவிய தெய்வம் -அரசர் கருத்தாக்கங்களையும் சிற்ப வடிவங்களையும் ஆழ்ந்துணர்வது இன்றியாமையாத தாகிறது.

## மன்னனும் இறைவனும்

ஓர் இனக் குழுவினை வழிநடத்திச் செல்லும் தலைவனைப் பணிதலும் வழிபடலும் மிகத் தொல்பழங்காலம் முதற்கொண்டே இருந்துவரும் மரபாகும்.

இந்தியாவில் வளர்ந்த இம்மரபு குறித்து ஆய்வு செய்த டாக்டர் A.S.அல்டேகர் (A.S.Altekar) கருத்துகளை இவ்விடத்தில் இணைத்தெண்ணிப் பார்ப்பது விளக்கம் தருவதாகும்.

மண்ணின் மன்னன் திருமாலின் வடிவம் (Navishnuh Prithivipathih) அல்லது இந்து அரசுமுறையில் மன்னன் - கடவுள் கொள்கை என்ற தலைப்பில் கி.ஷி.அல்தேக்கர் செய்துள்ள ஆய்வு இவ்வகையில் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும்.

இந்து அரசியலில் 'மன்னன் இறைவடிவமாவான்' என்ற கொள்கை காணப்படுகிறது. இதன் உள்ளுறை, மக்கள் மன்னன் ஆணைக்கு மறுமொழியின்றி உடனடியாகக் கீழ்ப்படிய வேண்டும் என்பதேயாகும்.

ஆனால் மன்னனை இறைவனுடன் இணைந்தெண்ணும் கருத்தோ அல்லது அதுபோன்ற கருத்தோ எவ்வகையிலும் இருக்கு வேதத்தில் இடம்பெறவில்லை. புரூரவசு (Pururavas) போன்ற அரசர்கள் சாதாரணமாகக் கருதப்பட்டனர். திராசதசு (Trasadasyu) என்ற ஒரே ஓர் அரசன்மட்டும் ஓரளவு இறைத்தன்மை (ardhadeva) கொண்டவனாக ரிக்வேதப் பாடலில்

குறிக்கப்பட்டுள்ளான். ஆனால் அதற்கும் கூட, அவன் தந்தை இறந்தபின் அசுவினித் (Asrins) தேவர்கள் அருளால் பிறந்ததே காரணமாகும்.

ஆனால் பிராமண(Brahmana) இலக்கியத்தில் அரசன் இறைவடிவம் என்ற கொள்கைக்கு வழியமைத்துக் கொடுக்கும் குறிப்புகள் பல உள்ளன. அரசன் எதிரிகளை வெல்லுவதற்கு இந்திரனது உதவி கிடைக்கிறது என்ற கருத்தால் இந்திரனது சிறப்பு அருள் பெற்றவனாக அரசன் இருப்பதாலேயே எதிரிகளை வெல்ல முடிகிறது என்று மக்கள் எண்ணத் தலைப்பட்டது தெளிவாகிறது.

அரசன்மீது புனிதநீரைத் தெளிக்கும்போது, தெளிக்கும் புரோகிதர் உடலில் சாவித்ரி (Savitri), அசுவினி தேவர்கள், புஷ்கான் (Pushan) ஆகியோர் புகுந்து அருள்பாலிக்கின்றனர் என்று கருதப்பட்டது. இதன்விளைவாக அரசன் அந்தத் தேவதையின் ஆசியையும் சிறப்பில்புகளையும் அடைகிறான் என்று நம்பப்பட்டது. இதனால் அவன் சாதாரண மனிதனிலும் மேலானவனாகிறான். பல்வகை வேள்விகளால் அரசன் பல்வேறு தேவதைகளோடு ஒரே நிலையில் இருப்பவனாகிறான். இது தெய்வங்களுடனான அவனது உறவை வெளிப்படையாக நிலைப்படுத்துகிறது.

பிராமணர்கள் இந்தக் காலத்தில் மண்ணில் வாழும் தெய்வங்களாகக் கருதப்பட்டனர். சிலரது கருத்துப்படி மன்னன் பிராமணர்களுக்கு இத்தகைய நிலையைக் கொடுப்பது அவர்களுக்கு நன்மை பயப்பதாக இருக்கும். சதபத பிரமாணத்தில் (Satapatha Brahmana) குறிக்கப்படுவது போல் அவன் ஒரு மனிதனாக இருந்தாலும் பலர்மீது ஆட்சி செலுத்த முடிகிறது. இது பிரஸாபதியின் தன்மையை ஒத்தது.

அதர்வ வேதத்தின் இறுதிப்பிரிவில் (Atharava Veda, XX, 127, 7-10) கொடுக்கப்பட்டுள்ள குறிப்பே, முதன்முதலாக மன்னன் இறைத்தன்மை பொருந்தியவன் என்பதை வெளிப்படையாகச் சொல்வதாகத் தோன்றுகிறது. மன்னன் இறைத்தன்மை படைத்தவன் என்று இதிகாசங்கள் அழுத்தம் திருத்தமாகக் கூறுகின்றன. இந்தக் கொள்கை முன்வைக்கப்படுவதற்கு இருவருக்குமிடையே உள்ள செயலொற்றுமையே காரணம்.

மன்னன் தன் வெவ்வேறு பணிகளைச் செய்யும்போது ஐந்து தேவதைகளின் தன்மையைக் கொண்டிருக்கிறான். தவறு செய்தவர்களைத் தண்டிக்கும் போது பாவகன் (Pavaka) ஆகிறான்; தனது ஆளுகைக்குட்பட்ட நாடு முழுமையும் ஒற்றர்களால் கண்டும் கேட்டும் அறிந்திருப்பதால் அவன் சூரியனை ஒத்திருக்கிறான். தீயவர்களை அவன் துன்புறுத்தும்போது அந்தகன் (Antaka) ஆகிறான்; நல்லவர்களுக்கு வெகுமதியளிக்கும் போது தர்மதேவதையாகிய எமன் (Yama) ஆகிறான்; தகுதி உள்ளவர்களுக்குச் செல்வத்தை வழங்கும்போது வைஷ்ரவன் (Vaisravana) ஆகிறான்.

ஸ்மிருதியும் புராணங்களும் அரசனை எட்டுத் திக்குப் பாலகர்களோடு ஒப்பிட்டுப் பேசுகின்றன. மேல் குறிப்பிட்ட தேவதைகள் நீங்கலாக, இந்திரன், வாயு, வருணன், சந்திரன் ஆகியோரையும் மன்னன் ஒத்திருக்கிறான். இந்திரனைப் போலத் தன் மக்கள் மீது முழு ஆதிக்கம் கொண்டவன் மன்னன்; வாயுவைப் போல நல்ல - கெட்ட செயற்பாடுகளைத் தோற்றுவித்துப் பரவச்செய்கிறான். வருணனைப் போலத் தன் மக்களைப் பாதுகாக்கிறான். சந்திரனைப்போல

மக்களை மகிழ்விக்கிறான். அரசனுக்கும் தேவதைகளுக்குமான உறவுகளை எல்லாப் புராணங்களும் ஸ்மிருதிகளும் ஒரே குரலில் பேசுவதில் பல வேற்றுமைகளைக் காட்டுகின்றன.

செயற்பாட்டளவில் அரசன் எட்டுத்திக்குப் பாலகர்களையும் மற்ற தெய்வங்களையும் ஒத்திருக்கிறான் என்று சொல்லும்போது யாராவது ஒருவர், ஒருபடி மேலே சென்று அரசன் அந்தத் தேவதையை ஒத்துமட்டும் இருக்கவில்லை. அந்தத் தேவதையாகவே ஆகிவிடுகிறான் என்று கூறியிருக்கக்கூடும். மகாபாரதத்தில் இதுபற்றிய வெளிப்படையான குறிப்பு உள்ளது. மனுவும் இந்த வாதத்திற்கு ஆதரவளிக்கிறார். அவர் கருத்துப்படி மன்னனின் உடல், எட்டுத் திக்குப் பாலகர்களின் உடல்களிலிருந்து அமிசங்களைக் கொண்டதாக இருக்கும்.

பிரகத்தர்ம புராணம் (Brihaddharma purana) இதையே வேறுவிதமாகக் கூறுகிறது. அதாவது அரசனின் உடலில் இல்லாமல், இத்தெய்வீகத் தன்மைகள் அரசனின் செயற்பாடுகளில் விளங்குகின்றன. வீரம், குரூரம் போன்ற குணங்களை அரசன் இந்திரன், வான்கி (Vanhi), எமன், சந்திரன் போன்ற தெய்வங்களிடமிருந்து பெறுகிறான். இக் குணங்கள் அரசனிடம் உறைவதனால் அவன் இக் குணங்களுக்கு அடிப்படையான அத்தெய்வங்களின் அமிசமாகவே இருத்தல்வேண்டும். பிராமணர்கள் சர்வ வேத மானியர்கள் (அனைத்தையும் அறிந்தவர்கள்). அதைப் போலவே அரசனும் சர்வ தேவமானியனாக இருக்க வேண்டும்.

கி.பி.முதலாம் மற்றும் இரண்டாம் நூற்றாண்டுகளில் வடஇந்தியா குஷாணர்களுடைய ஆதிக்கத்தில் இருந்தது. அவர்கள் பெரிதும் சீனத்தாக்கம் உள்ளவர்கள். சீனப் பண்பாட்டில், அரசன் தெய்வத்தன்மை உடையவன் என்பது அடிப்படையான கருத்து. அரசன் கடவுளின் மகன் என்னும் கருத்து சீனாவில் எல்லோராலும் ஏற்கப்பட்ட ஒன்று. விமா காட்பிஷிஷ் (Wima Kadphises), கனிஷ்கர் (Kanishka), குவிஷ்கர் (Huvishka), வாசுதேவர் ஆகியோர் அதே நிலைக்குத் தாங்களும் உரிமை கொண்டாடத் தொடங்கினர். தங்கள் கல்வெட்டுகளில் தங்களைத் தேவபுத்திரர்கள் அல்லது கடவுளின் மைந்தர்கள் என்று குறிப்பிட்டுக் கொண்டுள்ளனர். சாதாரண மனிதன்மீது இந்தக் கருத்தைத் திணிப்பதற்கு அவர்கள் தாங்கள் வெளியிட்ட நாணயங்களில் ஒரு புதிய உத்தியைக் கையாண்டனர். தங்கள் உருவத்திலிருந்து தீச்சுடர் வெளிப்படுவதுபோல அமைத்ததன் மூலம் தங்கள் தெய்வீகத் தன்மையைக் காட்ட முற்பட்டனர்.

குஷாணர்களால் பெரிதும் வற்புறுத்தப்பட்ட இக்கொள்கையை அவர்களை அடுத்துவந்த குப்தர்களும் ஏற்றுக் கொண்டனர்.

அரிசேனர் என்ற அரசவைக் கவிஞர், சமுத்திர குப்தரின் தன்மைகளைப் பாராட்டி, அவற்றின் தெய்வீகத் தன்மையை வற்புறுத்தி முடிவில் அரசர்

தெய்வமென்றும், அவர் சாதாரண மனிதர்களின் செயல்களை விரும்பி ஏற்றுக் கொண்டிருப்பதால் மட்டுமே அவரை மனிதரென்று கூறிவிட முடியாதென்றும் கூறியுள்ளார். அரசவையில் உள்ளோரும் அரசனைப் புகழ்ந்து பாடுவோரும் இக்கொள்கை பரவுவதற்குத் துணை செய்தனர். பிராமணர்கள் இதனைப் பரப்புவதன் மூலமாக, தாங்கள் நிலத்தேவர்கள் என்ற கருத்து வலுப்படும் என்ற நோக்கம் கொண்டிருக்கலாம்.[9]

**குப்தர் காலத்தில் இக்கருத்தியல் பெற்ற உச்சநிலையை,**

> அரச பதவியின் தெய்வீகத் தன்மை, நாடெங்கும் ஏற்பட்டது. அலகாபாது தூண் கல்வெட்டு சமுத்திர குப்தனை, நான்கு திசைகளுக்கும் அதிபர்களான குபேரன், வருணன், இந்திரன், யமன் முதலியோருக்குச் சமமானவன் என்று குறிப்பிடுவதோடு, படைப்பிற்கும் அழிவிற்கும் காரண பூதனான அறிவிற்கெட்டாத பரம்பொருள் என்றும் புவிமீது வாழும் கடவுளின் அவதாரமென்றும், இவ்வுலக வழக்கையொட்டி மானிடப்பிறவி எடுத்தவனைப்போல நடந்துவருகிறான் என்றும் சித்திரிக்கிறது. அக்காலத்து இலக்கியம், மன்னனை நீதியின் அவதார மென்றும், உலக ரட்சகனான மஹா விஷ்ணுவின் பேராள் என்றும் குறிப்பிடுகிறது. இந்திய நாட்டுப்பகுதிகள் சிலவற்றில் மஹாவிஷ்ணுவை 'ஸ்ரீபிருதிவி வல்லபன்' (Sri Prithvi vallabha) அல்லது அதிருஷ்ட தேவதைக்கும் புவியன்னைக்கும் நேசமானவன் எனக் கூறுவதுண்டு.[10]

என்று அறிஞர்கள் எடுத்துரைக்கின்றனர்.

### தமிழ்ச் சிந்தனையில் அரசனும் இறைவனும்

வடஇந்தியாவில் மட்டுமன்றித் தமிழகத்திலும் இத்தகைய தெய்வ - அரச இணைப்புக் கருத்தோட்டம் இருந்துள்ளதைத் *தொல்காப்பியம்* காட்டுகிறது.

புறத்திணை இயல் வெட்சித்திணையில் கரந்தை முதலிய பிற பகுதிகளைப் பேசுமிடத்தில் தொல்காப்பியர்,

> மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பின்
> தாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும் (தொல்காப்பியம்-60)

என்று 'பூவைநிலை' என்றொரு துறையினைப் பேசுகிறார். இதற்கு

> 'மாயனுடைய காத்தற் புகழையும், ஏனோர்க்கு உரியவாய் மேவிய பெரிய தலைமையிற் கெடாத படைத்தல் அழித்த லென்னும் புகழ்களையும் மன்னன் தொழிலுக்கு உவமையாகக் கூறுவது,

என்று நச்சினார்க்கினியர் உரை விளக்கம் செய்துள்ளார். மேலும் இது,

> ஒன்றனை ஒன்றுபோற் கூறும் துறை. மன் எனப் பொதுப்படக் கூறியவதனான் நெடுநில மன்னர்க்குங் குறுநில மன்னர்

முதலியோர்க்குங் கொள்க. பெருஞ்சிறப்பு என்றதனால் படைத்தலுங் காத்தலும் அழித்தலுமன்றி அவரவர் தாமாகக் கூறலும் கொள்க.

என விவரித்துள்ளார். மேலும்,

ஏற்றுவலன் உயரிய எரிமருள் அவிர்சடை
மாற்றுஅருங் கணிச்சி மணிமிடற் றோனும்;
கடல்வளர் புரிவளை புரையும் மேனி
அடல்வெந் நாஞ்சில் பனைக்கொடி யோனும்
மண்ணுறு திருமணி புரையும் மேனி
விண்உயர் புட்கொடி விறல்வெய் யோனும்
மணிமயில் உயரிய மாறா வென்றிப்
பிணிமுக ஊர்தி ஒண்செய் யோனும்என
ஞாலம் காக்கும் கால முன்பின்
தோலா நல்லிசை நால்வ ருள்ளும்
கூற்றுஒத் தீயே மாற்றுஅரும் சீற்றம்
வலிஒத் தீயே வாலி யோனைப்
புகழ்ஒத் தீயே இகழுநர் அடுநனை
முருகுஒத் தீயே முன்னியது முடித்தலின்
ஆங்குஆங்கு அவர்அவர் ஒத்தலின் யாங்கும்
அரியவும் உளவோ நினக்கே?... (புறம்.56)

என்னும் பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனை மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடிய பாடலையும் எடுத்துக்காட்டியுள்ளார். இப்பாடல், பாண்டியன் சிவனுடனும், பலதேவனுடனும் கண்ணனுடனும் முருகவேளுடனும் சினம், வலிமை, புகழ் ஆகியவற்றால் ஒப்பதாகக் கூறிப் புகழ்ந்துரைக்கிறது.

மேலும் மூவேந்தர்களையும் திருமாலாகவும் சிவனாகவும் பலதேவராகவும் குறிப்பிடும் பிற பாடல்களையும் எடுத்துக்காட்டியுள்ள அவர்,

'தேவர்கோன் பூணாரம் தென்னர்கோன் மார்பினவே'

'மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன்
பொன்னந் திகிரிப் பொருபடையா னென்பரால்'

'மன்னர்கோச் சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்
கன்னவிறோ ளோச்சிக் கடல்கடைந்தா னென்பரால்'.

(சிலம்பு.ஆய்ச்சியர் குரவை, 29-31)

என இளங்கோவடிகள் மூவேந்தரையும் திருமாலாகக் கருதிப்பாடியுள்ளதையும் எடுத்துக்காட்டியுள்ளார்.[11]

அறநூலும் நீதிநூலும் சொல்லும் நெறிப்படி முறைசெய்து காப்பாற்றும் மன்னன், பிறப்பால் மகனேயாயினும் செயலால், மக்களுக்குக் கடவுளென்று வைக்கப்படும் என்று வள்ளுவரின் கருத்தை(குறள் 388)ப் பரிமேலழகர் விளக்கியுள்ளதும் இவ்விடத்தில் எண்ணத்தக்கது.[12]

### பல்லவர் காலத்தில்

அரசனை இவ்வாறு இறையுடன் இணைத்தெண்ணும் போக்கு பல்லவர் காலத்தில் உச்சம் பெற்றதெனத் தெரிகிறது.

> பிரம்மாவிடமிருந்து அங்கிரஸ் தோன்றினார். அவரிடமிருந்து பிரகஸ்பதி, அவரிடமிருந்து பரத்வாஜர், அவரிடமிருந்து துரோணர், துரோணரிடமிருந்து அளவிட முடியாத பராக்கிரமத்தையுடைய அசுவத்தாமன், அவரிடமிருந்து (மக்களுக்கு) கலக்கமோ ஆபத்தோ ஒரு சிறிதும் இல்லாமல் விலக்கியவனான பல்லவன் தோன்றினான்.[13]

என்று முதலாம் பரமேச்சுரவர்மனுடைய கூரம் செப்பேடு குறிப்பிடுகிறது. அத்துடன் அது முதலாம் நரசிம்மவர்மனை 'நரசிம்ம பகவான் தாமே அரசன் உருவத்தில் பூலோகத்திற்கு வந்தவரே போன்றவர்' என்று புகழ்ந்துரைக்கிறது.14

**புல்லூர்ச் செப்பேடு நந்திவர்மனை,**

> அந்தப் பல்லவ வம்சத்தில் ஐசுவரியங்களை யுடையவர்களுக்குத் தலைவனும் (விபூதியை அணிந்திருக்கும் பரமேச்வரன் போலவும்) வலிமை பெற்ற சத்ருக்களைக் கலங்கச் செய்கின்றவனும் (ஸ்ரீவல்லபனும்) அதாவது, செல்வம் படைத்தவனும் (பலி என்ற சத்துருவைக் கலங்கச் செய்தவனும் திருமகள் அன்பனுமான விஷ்ணுபோலவும்) சக்தி படைத்த அரசனும், (சக்தி ஆயுதம் தாங்கிய ஸ்வாமி மஹாஸேனர் போலவும்) மிகவும் குறைந்த வரிகளை விதிக்கும் அரசனும் (மிக மெல்லிய கிரணங்களையுடைய சந்திரன் போலவும்) பிரகாசிப்பவனும், ஜொலிப்பவனும் (வெம்மையான கதிர்களையுடைய சூரியன் போலவும்) உள்ளவன்.[15]

என்று சிவன் திருமால், சுப்பிரமணியர் சந்திரன், சூரியன் ஆகியோருடன் ஒப்பிட்டுப் பேசுகிறது.

ஏறக்குறைய இக்காலப்பகுதியில் வாழ்ந்த நம்மாழ்வார்,

> திருவுடைய மன்னரைக் காணில்
> திருமாலைக் கண்டேன். (நாலா.3047)

என்று குறிப்பிடுவதும் ஈண்டு இணைத்தெண்ணத்தக்கது.

இவ்வகையில் சாளுவன் குப்ப அதிரணசண்டேஸ்வரத்தில் உள்ள கல்வெட்டில்,

> பிரம்மாவினாலும் விஷ்ணுவினாலும் நாரதராலும் மற்றும் கந்தனாலும் அறிய முடியாத சங்கீத ஞானத்தைக் காலகாலன் பெற்றிருந்தான்.[16]

எனக் குறிப்பிடப்பட்டுள்ள பகுதி முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இராசசிம்மனுடையதாக அறியப்பெறும் இக்கல்வெட்டில் 'கடவுளர்களும் அறியமுடியாத இசைப்புலமையுடையவன்' என்று குறித்துக் கொண்டது அரசர் குறித்த அக்கால எண்ணப்போக்கின் வெளிப்பாடேயாகும்.

பல்லவர்களின் இத்தகைய மனப்பான்மையை ஆய்வாளர்கள் எடுத்துரைக்கின்றனர்.

> திருச்சிராப்பள்ளி லலிதாங்குர பல்லவேஸ்வர கிரகத்திலுள்ள கங்காதர சிவன் முதலாம் மகேந்திரவர்மனைக் காட்சிப்படுத்துவதையும் ஆதிவராகர் குடைவரையிலுள்ள சிம்மவிஷ்ணு சிற்பம் தர்மராசரதத்திலுள்ள சோமாஸ்கந்தர் சிற்பத்தொகுதியை ஒத்திருப்பதையும் சோமஸ்கந்தர் வடிவத்தில் சிவனைத் தன் தந்தை முதலாம் பரமேஸ்வரவர்மனாகவும் உமாதேவியை அரசி அரங்கபதாகையாகவும் குழந்தை வடிவிலுள்ள கந்தனைத் தானாகவும் இராஜசிம்மன் பாவித்துக் கொண்டதையும் மைக்கேல் லாக்வுட் விரிவாக எடுத்துக்காட்டியுள்ளார். [17]

சோமஸ்கந்தர் சிற்பத்தொகுதியில் சிவன் தன் மனைவியோடும் மகனோடும் அமர்ந்துள்ள இருக்கை, அரச இருக்கையாகிய சிம்மாசனத்தை ஒத்திருப்பது அரசனுக்கும் கடவுளுக்கும் உள்ள நேரடி உறவைக் காட்சிப்படுத்துகிறது என்று நுட்பமாக எடுத்துக்காட்டியுள்ளார் டாக்டர் செண்பகலட்சுமி. [18]

### தென்கிழக்கு ஆசிய நாடுகளில்

இந்திய அரசியல், சமூகத் தளங்களில் மன்னர்களுக்குக் கொடுக்கப்பட்ட இத்தகு மேலான இடத்தையும் கலையில் அது வெளிப்பட்ட பாங்கினையும் உணர, இந்தியாவின் செல்வாக்கு, தென்னிந்தியாவைப் பொறுத்தமட்டில் பல்லவரின் செல்வாக்கு மிகுதியும் பெற்ற தென்கிழக்கு ஆசிய நாடுகளின் வெளிப்பாடுகளை உணர்தல் இன்றியமையாததாகும்.

தென்கிழக்கு ஆசிய நாடுகளான கடாகத்துவீபம் ( மலேசியா), சாவகம் (ஜாவா), சுமாத்ரா (சுவர்ணத்துவீபம்), போர்னியோ, சம்பா (வியட்நாம்), காம்போஜம் (கம்பூச்சியா), பாலித்தீவு, செலிப்பஸ், சயாம் (சியாம்நாடு, தாய்லாந்து) பர்மா (சுவர்ணபூமி) ஆகிய நாடுகளில் மிகப் பண்டைய காலம் முதல் மக்கள் குடியேற்றம், அரசியல், வணிகம் முதலிய காரணங்களால் இந்தியச் சமயங்கள் பரவியிருந்தன. குறிப்பாக, தென்னிந்தியா அந்நாடுகளுடன் பல்வேறு வகைகளில் தொடர்ந்து உறவு கொண்டிருந்தது. வளர்ச்சியற்றிருந்த அந்நாடுகளை வென்றடக்கித் தங்களது ஆட்சியினை அங்கு நிலை நிறுத்தித் தமிழ் மன்னர்களும் ஆண்டனர். இதனால் சைவ, வைணவக் கோயில்கள் பல ஆங்கு எழுந்தன. அவை திராவிட மரபுப் பண்புகளும் வட்டாரப் பண்புகளும் இணைந்ததொரு புதிய பாணியில் அமைந்துள்ளன.

பர்மாவின் புரோம் நகரில் கிடைத்த சிற்பங்கள்[19] பிஞூணானின் புத்த விகாரைகளின் சிகரங்கள்[20] சம்பாவிலுள்ள மிசோன் என்னும் இடத்திலுள்ள கோயில்கள்[21] காம்பூச்சியாவின் ஆங்கோர் நகரக் கோயில்[22] பண்டேய்ஸ்ரீயில் எழுப்பப்பட்டுள்ள கோயில்கள்23 எனப் பல்வேறு இடங்களிலுள்ள கோயில்களும் அவற்றிலுள்ள சிற்பங்களும் ஓவியங்களும் பல்லவப் பாணியைப் பெரிதும் ஒத்திருப்பதை அறிஞர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

தென்கிழக்கு ஆசியநாடுகள் பலவற்றிலும் மன்னர் குறித்து நிலவிய கருத்தாக்கம் இவ்விடத்தில் எண்ணத்தக்கது.

> சம்பாவின் மன்னர்கள், தங்களைத் திருமாலுடன் ஒப்பிட்டுப் பேசுவதில் மகிழ்ச்சியுற்றனர். சில சமயங்களில் அவர்கள் தங்களைச் சிவபெருமானின் அமிசமாகவே கருதினர். ஜெயருத்திரவர்மன், தன்னைத் திருமாலின் அவதாரம் என்றே கருதினான். அவனுடைய மகன் ஸ்ரீஜெய ஹரிவர்மதேவ சிவானந்தன், அவதார மூர்த்திகளாகிய இராமன், கண்ணன் ஆகியோரைக் காட்டிலும் சிறந்தவர் திருமால் என்றும் அவருடைய புகழ் மண்ணும் விண்ணும் நன்கறியும் என்றும், அப் பரம்பொருளாகிய நாராயணனுடைய திருவவதாரமே தான் என்றும் கூறிக் கொண்டான்.[24]

இன்று வியட்நாம் என அழைக்கப்பெறும் சம்பாவில் மட்டுமின்றி, காம்பூச்சியாவிலிருந்த தேவராச வழிபாடு இவ்வகையில் முதன்மைவாய்ந்தது.

சைலேந்திரம் பேரரசால் கைப்பற்றப்பட்ட காம்போஜந்தனை மீட்ட ஜெயவர்மன் (கி.பி.802-869) தான் ஒரு பேரரசனாக விரும்பி, இரணிய தருமன் என்ற பிராமணனை வரவழைத்தான். அந்தப் பிராமணன் அரச தெய்வத்தை (தேவராசர்) வழிபடுவதற்குரிய விதிமுறைகளை வகுத்துத்தந்தான் என்று ஜெயவர்மனின் கல்வெட்டு தெரிவிக்கிறது.[25] இப்பிராமணன் இந்தியாவிலிருந்து வந்திருக்கலாம் என R.C.மஜூம்தார் குறிப்பிடுகின்றார்.[26]

> காம்போஜத்தின் அரசர்கள் தெய்வீகத் தன்மை வாய்ந்த அரச தெய்வங்களாகக் காட்சியளிக்கத் தொடங்கியமை அக்கல்வெட்டால் அறியப்படும் மற்றொரு செய்தியாகும். அக்காலம் முதல் அரசர்கள் தாங்கள் வழிபடும் கடவுளோடு தங்களை ஒப்புமையுடையவர்களாகக் கருதத் தொடங்கினர். அதனால் அத்தெய்வங்களுக்குரிய பெயர்களையே தங்களுக்குரிய பெயர்களாகச் சூட்டிக் கொண்டனர். கோயில்களில் தெய்வங்களின் சின்னங்களைத் தாங்கிய அரசர்களின் சிலைகள் அமைக்கப்பெற்றன. அவற்றிற்குச் சிறப்பாக வழிபாடு நடத்தப்பட்டது. இவ்வாறு கெமர்களின் கோயில்கள் திருக்கோயில்களாக மட்டும் விளங்காமல் தெய்வீகத் தன்மை வாய்ந்த அரசதெய்வங்களின் சிலைகள் அணிசெய்யும் தொல்பொருள் காட்சிசாலைகளாகவும் காட்சிதரத் தொடங்கின. இத்தகைய அரச தெய்வ வழிபாடு, காம்போஜத்தில் மட்டுமன்றிச் சம்பா, சாவகம், சுமத்திரா போன்ற தென்கிழக்காசிய நாடுகளிலும் சிறப்புற்று விளங்கியது.[27]

என க.த.திருநாவுக்கரசு குறிப்பிடுகிறார்.

கெமர்கள்தாங்கள்வழிபடும் தெய்வத்திற்குச்சிறந்ததோர் அழகிய கோயில் அமைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடும், பேரரசர்களை அரச தெய்வங்களாக்கிப் பொன்றாப் புகழ்பெற்று விளங்குமாறு செய்ய விரும்பியும் மாபெரும் கோயில்களைக் கட்டத்தொடங்கினர். கெமர்கள்தங்கள் அரசனை அவன் வழிபட்டு வந்த தெய்வமாகவே கருதிப்போற்றினர். அரசனின் சிலைக்குத் தெய்வீகத் தன்மையை ஊட்டும் மந்திரச் சடங்குகள் பேரளவில் செய்யப்பட்டன.[28]

ஐந்தாம் ஜெயவர்மனின் ஆட்சிக்காலத்தில் கி.பி.968-இல் பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று 'தக்ஷிணபாதம்' (தக்காணப் பகுதி) சைவ சமயத்தின் நிலைக்களனாய் விளங்கியதைக் குறிப்பிடுகிறது. மேலும் காஞ்சியை ஆண்ட பல்லவ மன்னர்களையும் தன்னாட்டில் தோன்றிய சங்கராச்சாரியாரையும் அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதனால் தென்னிந்தியாவின் செல்வாக்கு அங்கு மிகுதிப்பட்டிருப்பதை நாம் உணரமுடிகிறது.

சயாம் நாட்டின் சிற்பப் பாணி வரலாற்றில் பல்வேறு பாணிகளின் செல்வாக்குக் காணப்படுகிறது. விஷ்ணு, அர்த்தநாரீஸ்வரர், இயக்கர், துவாரபாலர் முதலியோரது உருவங்கள் சயாமின் கிழக்குப் பகுதியிலும் மலாய்த் தீபகற்பத்திலும் காணப்படுகின்றன. 'பௌத்த உருவங்களில் பாலர் கலைப் பாணி உறுதியாகக் காணப்படுகிறது. பிராமணிய உருவங்கள் குறிப்பாக, நிற்கும் விஷ்ணு போன்றவற்றில் பல்லவர் பாணி காணப்படுகிறது. சயாம் மக்கள் இந்தியச் சிற்பங்களில் முக்கியக் கலைப்போக்குகளுடன் உயிரோட்டம் மிக்க தொடர்பு கொண்டிருந்தனர் என்பதை இது காட்டுகிறது' என்று அறிஞர் ரிசினால்ட் லீ மே (Reginald Re May), குறிப்பிடுகிறார். மேலும் அவர், அவற்றுள் சில, உள்ளூரில் உருவானவை; சில இந்தியாவிலிருந்து பெறப்பட்டவை என்றும் குறிப்பிட்டுள்ளார்.[30]


விஷ்ணு, 7-9ம் நூற். தேசிய அருங்காட்சியகம், பாங்காங்

இத்தகைய ஆய்வுக் கருத்துகள் தெற்காசிய நாடுகளின் காணப்படும் சிற்ப மரபுகளில் இந்தியக் கலைப் பாணிகளின் செல்வாக்கினையும் தென்னிந்தியாவின், குறிப்பாக, பல்லவக் கலைப்பாணியின் செல்வாக்கையும் நுட்பமாகச் சுட்டிக்காட்டுகின்றன.

அவற்றுள்ளும் தாய்லாந்து என வழங்கும் சயாமின் விஷ்ணு சிற்பங்கள் ஆழ்ந்து நோக்கத்தக்கவையாகும்.

தற்போது பாங்காங்கிலுள்ள தேசிய அருங்காட்சியகத்திலுள்ள இச்சிற்பம் 'விஷ்ணு' என்று அறியப்படுவதாகும்.

இரண்டு கரங்களுடன் காணப்படும் இச்சிற்பம் தலையில் நேராகச் சென்று ஏறத்தாழத் தட்டையாக முடியும் மகுடத்தைக் கொண்டுள்ளது. கழுத்தில் அணிகலனும் மார்பில் பூணூலும் வயிற்றில் உதரபந்தமும் காணப்படவில்லை. சங்கு, சக்கரம் ஏதும் கரங்களில் இல்லை. இடையாடையினை வலதுகரம் பற்றியுள்ளது. திருமால் நின்ற கோலத்தில் காணப்படும் இவ்வுரு போன்ற பல உருவங்கள் அந்நாட்டின் பிறவிடங்களிலும் காணப்படுகின்றன.

இவ்வுருவங்களை மாமல்லபுரம் தர்மராசரதத்து உருவத்துடன் ஒப்பிட்டுக் காணும்போது கழுத்தில் மணிமாலை, மார்பில் பூணூல், வயிற்றில் உதரபந்தம், வலதுகரம் காட்டும் முத்திரை ஆகியன மட்டும் மாற்றம் பெற்றிருப்பதை உணரமுடிகிறது. நிற்கும் நிலையும் தலை மகுடமும் இரண்டு கரங்களும் ஒன்றுபட்டுக் காணப்படுகின்றன. ஆகவே, மாமல்லைச் சிற்பம்,

- ஆதிவராகர் குடைவரையிலும், கடற்கரைக்கோயில் சுற்றுமதில் - சிற்பத் தொகுதிகளிலும் காணப்படும் அரசர்களின் உருவ அமைதிக்கு மாறுபட்டுள்ளதாலும்
- தர்மராசரதக் கீழ்த்தளத்தில் சிவன், முருகன், பிரம்மா ஆகியோர் இருக்க விஷ்ணு இல்லாதிருப்பதாலும்
- இச்சிற்பம் உள்ள இடத்திற்குப் நேர் பின்னாக மும்மூர்த்திகளுள் ஒருவரான நான்முகன் உள்ளதாலும்
- பல்லவக் கலைப்பாணியின் செல்வாக்கு கட்டடம், சிற்பம், ஓவியம் ஆகியனவற்றில் மிகுதியாகத் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் நிறைவாகத் தென்படுவதாலும்
- அங்கெல்லாம் சங்கு, சக்கரம் இன்றித் தலையில் நீண்ட மகுடம் துளங்குகின்ற உருவங்கள் திருமாலாகத் திகழ்வதாலும்
- அத்தகு தன்மை மல்லையின் பல்லவர் செல்வாக்கால் விளைந்ததே என்பதாலும்
- தர்மராசரதத் தென்மேற்கு மூலையிலுள்ள உருவத்தைத் திருமால் எனக் கொள்வது மிக்க பொருத்தமுடையது என்பதில் ஐயமில்லை.

இவ்வுருவம் பல்லவ அரச உருவத்தை நினைவூட்டுவதுபோல் படைக்கப்பட்டுள்ளமைக்கு அரசனும் தெய்வமும் அதிலும் குறிப்பாக, காக்கும் கடவுளான திருமாலும் அரசனும் ஒன்றே என்று உணர்த்துகின்ற நோக்கே அடிப்படைக் காரணமெனலாம்.

மல்லையில் இச்சிற்பம் தவிர இத்தகு பாணியில் அமைந்த சிற்பம் ஏதும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. ஆகவே, இச்சிற்பமே தென்கிழக்காசிய நாடுகளில் அரச வடிவ ஒப்புமை கொண்ட திருமால் உருவங்கள் அமைக்கப்பட மூலமாகத் திகழ்ந்துள்ளது என்பதிலும் ஐயமில்லை.

## குறிப்புகள்

1. K.R.Srinivasan, *Dharamaraja ratham*, p.24.
2. மு.நளினி, இரா.கலைக்கோவன், *அத்யந்தகாமம்*, ப.74.
3. இரா.நாகசாமி, *மாமல்லை*, ப.86.
4. Lockwood, *Mamallapuram*, p.79.
5. C.Minakshi, *Administration And Social Life under The Pallavas*, Plate.II.Fig.3. & இரா.நாகசாமி, *மாமல்லை*, பக்.91-92.
6. S.Swaminathan, *Mahabalipuram*, p.80.
7. Yogasayanamurti:

   This is vecumbent image of Vishnu with only two hands; about a fourth of the body should be some what raised and the remaining three-fourths should be lying flat upon the serpent bed. The right hand should be placed near the pillow so as to touch the kirita; the other hand bent at the ellow, should to hold in the kataka pose. Or, this left hand may be made to be parallel to the body so as sometimes to touch the thigh.

   - T.A.Gopinatha Rao, *Elements of Hindu Iconography*, Vol.I, Part-I, pp.90-91.
8. J.C.Harle, *Gupta Sculpture*, Fig.49, 61, 62.
9. ...., *Professor K.V. Rangaswami Aiyangar Commemoration Volume*, pp.3-6.
10. R.C.மஜூம்தார் மற்றும் இருவர், தி.வெ.குப்புசாமி (மொ.ஆ), *இந்தியாவின் சிறப்பு வரலாறு*, பக்.254-255.
11. *தொல்காப்பியம்*, பொருளதிகாரம், நச்சினார்க்கினியர் உரை, பக்.146-148.
12. மன்னர்களைத் தெய்வங்களுடன் இணைத்தெண்ணவும் மன்னர்களையே தெய்வங்களாகக் கருதி வழிபடவும் தலைப்பட்ட அதே வேளையில் இக்கருத்தியலுக்கு எதிரான கருத்தோட்டமும் பண்டைய நாளில் இருந்துள்ளது சிறப்பாகக் குறிக்கத்தக்கதாகும்.

    மன்னர்கள் தெய்வத்தை ஒத்தவர்கள் என்னும் கருத்தினை அரசியல் சிந்தனையாளர்கள் முழுமையாக ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. அரசரின் பல்வேறு செயற்பாடுகள் ஒத்துள்ளன என்பதை ஏற்றுக்கொள்கின்றனர். ஆனால் ஆதரவு அரசர்கள் மட்டுமே இத்தெய்வீகத் தன்மைக்கு உரியவர்கள். தீமையைப் பின் பற்றித் தீமைக்கு ஆதரவு தருவோர் அரக்கர் சம்பந்தம் உடையவர்கள். அவர்களிடம் அரக்கத் தன்மை உள்ளதால் அழிக்கப்படத்தக்கவர்கள் என்ற கருத்தை அரசியல் சிந்தனையாளர்கள் முன்வைத்துள்ளனர்.

தவறு செய்யும் அரசனை மக்கள் நீக்கலாம். அதற்கு ஒத்துழையாமை ஒருவழி. வேற்றுநாட்டு அரசனை அவ்வரசனுக்கு எதிராக வந்து வென்று அரசைக் கைப்பற்றவும் கேட்டுக் கொள்ளலாம். இது இயலாது போகுமானால் அரச வம்சத்தைச் சார்ந்த தக்க ஒருவரை அரச பதவியேற்குமாறு செய்யலாம். அவ்வாறு செய்யும்போது முந்தைய அரசன் தொல்லை தந்தால் அவன் அழிக்கவும்படலாம். அப்படி அழிப்பதற்குத் தெய்வீகக் கொள்கை தடையாய் இருக்காது. ஏனெனில் தவறுசெய்யும் மன்னனுக்குத் தெய்வீகத் தன்மை கிடையாது.

....., *Professor K.V. Rangaswami Aiyangar Commemoration, Volume*, p.7.

அவன்

அவ - அவன்

அவரு - அவர்

அவங்க - அவர்கள்

அது

அவை

உ. பால்விகுதி (Personal Termination)

வந்தேன்

வந்தோம்

வந்தோம்

வந்தே - வந்தாய்

வந்தீங்க - வந்தீர்கள்

வந்தாங்க - வந்தார்கள்

வந்தது

வந்தன

அவை - வந்தன

வருகின்றன

வரும்

ஓடுச்சு - ஓடியது

ஊ. காலம் (Tense)

1. இறந்த காலம் (Past)

| | |
|---|---|
| -ந்த்- | நடந்தான் |
| -ட்ட்- | சாப்பிட்டான் |
| -த்- | செய்தான் |
| -ண்ட் - | ஆண்டான் |
| -த்த்- | - பார்த்தேன் |

| | | |
|---|---|---|
| -த்த்- | ற்ற் | - விற்றேன், கற்றேன் |
| -ச்ச்- | த்த் | - படித்தான் |
| -ஞ்ச- | ந்த | - வரைந்தான் |
| -ன்- | இன் | - கிளம்பினான் |

2. நிகழ்காலம் (Present)

(கி) -க்குற்- ? -க்கிற்-

படிக்குறான் - படிக்கிறான்

-ற்- > -கிற்-

எழுதுறான் - எழுதுகிறான்

விக்குறோம் - விற்கிறோம்

நிற்கிறோம்

கற்கிறோம்

கேட்கிறான்

**2.1.** நிகழ்கால இறந்தகால எதிர்மறை (Present and Past Negative)

படிக்கலெ > படிக்கவில்லை

**3.** எதிர்காலம் (Future)

| | |
|---|---|
| -ப்ப்- | படிப்பேன் |
| -வ்- | வருவேன் |
| -ப்- | உண்பேன் |
| அவை | படிக்கும் |
| | வரும் |
| | செய்யும் |

**3.1.** எதிர்மறை (Negative)

படிக்க மாட்டேன்

படிக்காது

**எ.** வினை அடை (Adverb)

வேகமா - வேகமாக

மெதுவா - மெதுவாக

மேனேஜரா - மேனேஜராக

நல்லா - நன்றாக

**ஏ.** பெயர் அடை (Adjective)

அழகான

**ஐ.** வேற்றுமைகள் (Cases)

**1.** செய்யப்படு பொருள் வேற்றுமை (Accusative Case)

| | |
|---|---|
| -எ | -ஐ |
| அவனெ- | அவனை |

**2.** கருவி வேற்றுமை (Instrumental Case)

| | |
|---|---|
| -ஆலெ | -ஆல் |
| கத்தியாலெ | - கத்தியால் |

**3.** நேர்ச்சி வேற்றுமை (Dative Case)

அவனுக்கு

எனக்கு

கல்லூரிக்கு

இந்தியாவுக்கு

4. உடைமை வேற்றுமை (Possessive/Genitive Case)

-ஒடெ - உடைய

என்னோடெ - என்னுடைய

5. இடவேற்றுமை (Locative)

-லே - இல்

கல்லூரியில்

இந்தியாவில்

மைசூரில்

-கிட்டெ - இடம்

அவன்கிட்டெ - அவனிடம்

-லே இருந்து

-உலே இருந்து இலிருந்து

-இலே இருந்து

கல்லூரியிலிருந்து

இந்தியாவிலிருந்து

மைசூரிலிருந்து

-கிட்டெயிருந்து - இடமிருந்து

அவன்கிட்டெயிருந்து - அவனிடமிருந்து

6. உடனிகழ்ச்சி வேற்றுமை (Sociative Case)

-கூட - உடன்

அவன்கூட - அவனுடன்

-ஒடெ - ஓடு

அவனோடெ - அவனோடு

ஒ.1. பெயரெச்சங்கள் (Relative participles)

படித்த, படிக்கிற, படிக்கும், படிக்காத

2. வினையெச்சங்கள் (Verbal particples)

படித்து, எழுதி, எழுதாமல்

எழுதாம - எழுதாமல்

3. உடன்பாட்டு வினை (Conditional)

வந்தா - வந்தால்

வராட்டா - வராவிட்டால்

4. தொடர் வினை (Continuous)

கிட்டிரு - கொண்டிரு

படித்துக்கிட்டிருந்தான் - படித்துக்கொண்டிருந்தான்

5. கட்டளை வினை (Defenivite)

படிச்சுடு - படித்துவிடு

6. ஏவல் வினைகள் (Imperative)

வாங்க - வாருங்கள்

போங்க - போங்கள்

படிங்க - படியுங்கள்

செய்யுங்க- செய்யுங்கள்

(V + உங்கள்)

7. எண்கள் (Numbers)

ஒன்னு - ஒன்று

ரெண்டு - இரண்டு

மூனு - மூன்று

நாலு - நான்கு

அஞ்சு - ஐந்து

8. வார்த்தைகள் (Words)

| | | |
|---|---|---|
| மிஸ்டர் | - | திரு |
| இல்லே | - | இல்லையா |
| இப்ப | - | இப்போது |
| ரொம்ப | - | மிக |
| சின்ன | - | சிறிய |
| வருஷம் | - | ஆண்டு |
| கொஞ்சம் | - | சிறிது |
| சௌக்கியமா | - | நலமா |
| அப்புறம் | - | பிறகு |
| இண்ணெக்கு | - | இன்று |
| அண்ணெக்கு | - | அன்று |
| எண்ணெக்கு | - | என்று |
| நாளெக்கு | - | நாளை |
| நெத்தெக்கு | - | நேற்று |
| அப்படீன்னா | - | அப்படியென்றால் |
| நல்லா | - | நன்றாக |
| மாதிரி | - | போல |
| பூராவும் | - | முழுவதும் |

| | | |
|---|---|---|
| கலியாணம் | - | திருமணம் |
| லகுவா | - | எளிதாக |
| சௌகரியமா | - | வசதியா |
| சிபாரிசுபண்ணு | - | பரிந்துரை செய் |
| பண்ணு | - | செய் |
| அவசியம் | - | தேவை |
| கிட்டத்தட்ட | - | சுமார் |

ஓ. கிழமைகள் (week days)

ஞாயிறு
திங்கள்
செவ்வாய்
புதன்
வியாழன்
வெள்ளி
சனி

ஔ. வாக்கியம் (Sentences)

இது நாலு மேசை - இவை நான்கு மேசைகள்.[5]

எழுத்துவழக்குப் பயிற்சி முடித்தவுடன் தமிழ்க் கவிதைகள், கட்டுரைகள், கடிதங்கள், சிறுகதைகள் கற்பிக்கப்படுகின்றன. இடைநிலையில் இறுதித் தேர்வு முடிந்தவுடன் மாணவர்கள் மொழிச் சுற்றுச்சூழல் சுற்றுலாவிற்கு ஏற்பாடு செய்யப்படுகின்றது. இச்சுற்றுலாவில் தமிழ்நாட்டின் முக்கிய வரலாற்றுத் தலங்கள், திருத்தலங்கள், தமிழ்ப் பல்கலைக்கழகம், புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு நிறுவனம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் ஆகிய முக்கிய இடங்கள் இடம்பெறுகின்றன. இச்சுற்றுலா பதினைந்து நாள்களுக்கு அமையும். இறுதியில் மாணவர்கள் சுற்றுலா குறித்து ஆய்வேடு தயாரித்து ஐம்பது பக்க அளவில் அளிக்கவேண்டும்.

## தமிழ் இலக்கியம் அறிமுகம்

உயர்நிலையில் தமிழ் இலக்கிய வரலாறு, சங்க இலக்கியங்கள், தொல்காப்பியம், சங்ககாலத் தமிழ்ச்சங்கங்கள், வரலாற்றுச்சிறப்புமிக்க தலங்கள், தற்கால இலக்கியங்கள், மொழியியல் ஆகியவை அறிமுகப்படுத்தப்படுகின்றன. உயர்நிலையில் இறுதித் தேர்வுகள் மூன்றாகப் பிரிக்கப்படுகின்றன. அதாவது, எழுத்துத் தேர்வு, கேட்டல் தேர்வு, வாய்மொழித் தேர்வு ஆகிய தேர்வுகளின் அடிப்படையில் மாணவர்களின் திறன் மற்றும் தேர்ச்சி இறுதிசெய்யப்படுகின்றது. பத்து மாதங்களின் இறுதியில் தேர்வின் அடிப்படையில் மாணவர்களுக்குத் தமிழ் ஆசிரியர் பயிற்றுநர் பட்டயம் வழங்கப்படுகின்றது.

மேலும், முன்னாள் மாணவர்களுக்கு ஆண்டுக்கு ஒருமுறை அல்லது இருமுறை பணிப்பட்டறை நடத்தி அவர்களின் தமிழ் மொழிப் புலமை மேலும் மேம்படச் செய்யவேண்டும்.

### இரண்டாம் மொழி கற்பித்தலின் பயன்

சில மாணவர்கள் புகழ் பெற்ற தமிழ் இலக்கியங்களை அவரவர்களின் தாய்மொழியில் மொழிபெயர்த்துச்சாதனை புரிந்துள்ளனர். உதரணமாக மணிப்பூர் மாநிலத்தைச் சார்ந்த மாணவி ஒருவர் தமிழ் பயின்று தமிழின் உலகப் பொதுமறையான *திருக்குறளை* மணிப்பூரி மொழியில் மொழிபெயர்த்துள்ளார். இம்மொழிபெயர்ப்பானது செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தால் பதிப்புச் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இந்நூல் சமீபத்தில் மணிப்பூர் பல்கலைக்கழகத்தில் மணிப்பூர் மாநில ஆளுநர் அவர்களால் வெளியிடப்பட்டது என்பது பெருமைக்குரிய ஒன்றாக உள்ளது. இதுபோலப் பல்வேறு நாடுகளில் தமிழை இரண்டாம்/அயல் மொழியாகப் பயின்றவர்கள் தமிழ் வளர்ச்சிக்கு அதாவது மொழிபெயர்ப்பு, இருமொழி அகராதி தயாரித்தல் எனப் பல்வேறு வகையில் உதவிபுரிந்து வருகின்றனர்.

### முடிவுரை

தமிழ் மொழி கற்பித்தல் என்பது இன்று உலக அளவில் பரந்து விரிந்து ஆலமரமாகக் காட்சியளிக்கின்றது. இரண்டாம்/அயல் மொழி கற்பித்தலை மேலும் வளப்படுத்தவேண்டுமெனில் உலக அளவில் நடைபெறுகின்ற தமிழ் கற்பித்தல் பணியினை ஒருங்கிணைத்து இரண்டாம்/அயல் மொழியாகக் கற்பிக்கப்படும் நாடுகளில் தமிழ் கற்பித்தல் பாடத்திட்டங்களின் தரவுத்தளத்தை உருவாக்கி அனைவருக்கும் கிடைக்கும் வகையில் செய்திட வேண்டும். இரண்டாம் மொழி கற்பித்தல்திறன் வாய்ந்த ஆசிரியர்களை உருவாக்குதல் வேண்டும். தமிழ்மொழியினைப் பயின்றவர்களின் சாதனைகளை உலகறியச்செய்தல் வேண்டும். உலக அளவில் தமிழ் பயின்று வரும் மாணவர்களுக்குத் தமிழ் மொழியின் தாயகத்தை அறியச் செய்யும் விதமாகவும் மேலும் மொழியைத் தெரிந்துகொள்ளும் விதமாகவும் மொழிச் சுற்றுச்சூழல் சுற்றுலாவிற்கு ஏற்பாடு செய்து மாணவர்கள் நேரடியாகத் தமிழ்ப் பண்பாட்டை அறியச் செய்யவேண்டும். இதன் மூலம் தமிழை ஆங்கிலத்திற்கு இணையான தகவல் தொடர்பு மொழியாகவும் மாற்றமுடியும் என்பதில் எவ்வித மாற்றமும் இல்லை.

### பார்வை நூல்கள்


1. Klein, W. (1986) *Second Language Acquisition*, Cambridge University Press:
New York, P.3.

2. ஞானசுந்தரம், வ. மற்றும் பலர் (1973). *நமது மொழி* (தமிழ்) - ஆசிரியர் *கையேடு*, இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூர், இந்தியா, ப. 1-2

3. கலாவல்லி, ச. ( 2014). "இலங்கையில் தமிழ்மொழியை இரண்டாம் மொழியாகக் கற்பித்தல்," உலகத் தமிழியல் ஆய்வுகள் (கோ.விசயராகவன் (ம) பலர் பதிப்பு) உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, இந்தியா, ப.420.

4. Rajaram, S. ( 1979) *An Intensive Course in Tamil*, Central Institute of Indian Languages, Mysore, India, p.1.

5. Nadaraja Pillai, N., Unpublished CIIL teaching material.

## 14. List of Translations of Tamil Works

01. Chellaiah, J.V. *Ten Tamil Idylls*, Madras: The Tirunelveli, South India Saiva Siddhanta Works Publishing Society, 1962, 370p.

02. *Ten Tamil Idylls*, translated in English verse, Colombo General Publishers (1947?, 2nd Ed.). The Tirunelveli, South India Saiva Siddhanta Works Publishing Society,1962. Thanjavur: Tamil University, 1985.

03. *Pattuppāṭṭu*, Madras: Tirunelveli, 1962, 91p.

04. Krishnaswamy, T.B. *Ten Tamil Ethics*, Madras: The Tirunelveli, South India Saiva Siddhanta works Publishing Society, 1957, 1938. 254p. Prose.

05. Raghunathan, N. *Six long poems from Sangam*, Madras: Vingeswara Publishing House, 1978,VI, 118p. Poetry.

06. Somasundaram Pillai, J.M., *Pattuppāṭṭu, Five Tamil Idylls of Pattuppāṭṭu*, Madras: Golden and Co., 1947. Poerty.

07. Ramanujam , A.K., *Poems of Love and War, from Eight Anthologies and the Ten Long Poems of Classical Tamil*, Delhi: OUP. 1985, 329p. Poetry.

08. Meenakshisundaram T.P. *Mullaippāṭṭu,: The Idylls of the Jasminen*, Madras, Orient Longman, 1958, VI 91p. Poetry.

09. Subramaniam, A.V. *Muttoḷḷāyiram, The Bangle and Javelin*, Madras: Sekar pathipaham, 1984, 136p.

10. *Sips from the Sangam Cup*, Tirunelveli/Madras, South India Saiva Siddhanta Works Pub. Society, 1968.

11. *The squirrel in the courtyard: transcompositions from Tamil Sangam lyrics, Madras*: Tamil Nadu Textbook Soc., 1980.

12. Ilavazhaganar. *The Golden Anthology of Ancient Tamil Literature*, Madras: South India Saiva Siddhanta Works. Publishing Society.

13. Mudaliyar, R.B., *The Golden Anthology of Ancient Tamil Literature*, Madras: 1960, Anthologies.

Telugu

01. Mudunuri Jagannatha Raja, *Kapilar Kurincippāṭṭu,, Sailagitamu*. Rajapalayam: Viswa Santi Publications, 1968, 10+68+8p. Verse.

*(to be continued)*

# 15. டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்

*இரா. கலைக்கோவன்*

களஆய்வுகளில் அறியப்படும் உண்மைகளின் அடிப்படையில் வரலாற்றை உருவாக்கும் நோக்குடன் தமிழறிஞரும் வரலாற்றறிஞருமான முனைவர் மா. இராசமாணிக்கனார் பெயரில் அவர் மகன் கண் மருத்துவர் இரா. கலைக்கோவனால் திருச்சிராப்பள்ளியில் நிறுவப்பட்ட ஆய்வு நிறுவனமே டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்.

தோற்றம் : 1982

முகவரி : சி87, பத்தாம் குறுக்கு, தில்லைநகர், திருச்சிராப்பள்ளி - 620018.

இயக்குநர் : முனைவர் இரா. கலைக்கோவன்

மதிப்புறு இணை இயக்குநர்: முனைவர் மு. நளினி

மதிப்புறு உதவி இயக்குநர்: முனைவர் அர. அகிலா

மையத்தின் ஆண்டு ஆய்விதழ்: வரலாறு

நோக்கம்

1. பதிவு செய்யப்படாத கல்வெட்டுகளைக் கண்டறிந்து பதிப்பித்தல்.
2. தமிழ்நாட்டுக் கலை வரலாற்றை முழுமையுற உருவாக்கல்.
3. ஆய்வாளர்களுக்குப் பயன்படும் வகையில் புதிய தரவுகளை வழங்கும் ஆண்டு ஆய்விதழ் வெளியிடல்.
4. களஆய்வில் நம்பிக்கையுடைய இளம் ஆய்வாளர்களை வழிநடத்தல்.
5. உலகளாவிய தமிழர்களுக்கு இலக்கியம், வரலாறு குறித்த ஆர்வத்தையும் ஆய்வு நோக்கையும் விதைத்தல்.
6. கோயில்கள் வரலாற்றுக் களங்கள் என்பதால் அது குறித்த விழிப்புணர்வைச் சமுதாயத்தில் பரவச் செய்தல்.

தொடக்கக் காலப் பணிகள்:

1. 1982-85இல் செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப் பொழில், மெய்கண்டார், மாலைமுரசு, திருக்கோயில், தினமணி முதலிய இதழ்களில் பல்வேறு கோயில்களைப் பற்றிய ஆய்வுக்கட்டுரைகள்.
2. சோழன் கோச்செங்கணான் பற்றியும் அவரால் எழுப்பப்பட்ட மாடக்கோயில்கள் குறித்தும் விரிவான ஆய்வு.
3. நாட்டிய சாத்திரம் பேசும் ஆடல் கரணங்கள் குறித்த களஆய்வுகள்.
4. 1985இல் இருந்து ஆய்வு மாணவர்கள் இணைவு. முள்ளிக்கரும்பூர், அழுந்தூர் முதலிய புதிய வரலாற்றுக் களங்கள் அறிமுகம். பழங்கோயில்கள் விரிவான கல்வெட்டு, கலை ஆய்வுகளுக்கு உட்படல்.
5. முதல் ஆய்வு நூல் 1985இல்கலை வளர்த்த திருக்கோயில்கள் என்ற தலைப்பில் கழக வெளியீடாக மலர்ந்து தமிழ்நாட்டரசின் முதல் பரிசைப் பெற்றது.
6. 1985-87க்கு இடைப்பட்ட காலத்தில் காட்டுக்குள் ஒரு கலைக்கோயில் (தமிழ்ப் பல்கலைக்கழகப் பரிசு), சுவடழிந்த கோயில்கள் (தமிழ்நாட்டரசின் பரிசு), எழில் கொஞ்சும் எறும்பியூர் ஆகிய மூன்று ஆய்வு நூல்கள் வெளியாயின.

---

*முனைவர் இரா. கலைக்கோவன், இயக்குநர், டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம், திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு, இந்தியா.*

7. 1989இல் பழுவேட்டரையர்கள் பற்றிய முழுமையான ஆய்வுநூலாகப் பழுவூர்ப் புதையல்கள் கழக வெளியீடாகப் பதிவானது.
8. 1991இல் கோயிற்கலைகளில் பட்டயக் கல்வி வகுப்புகள் தொடக்கம்.
9. கோயில்களைஎப்படிக்காப்பாற்ற வேண்டும் என்ற விழிப்புணர்வை உண்டாக்கத் திருச்சிராப்பள்ளி வானொலியில் 12 வாரங்கள் கோயில்களை நோக்கி என்ற தலைப்பில் விழிப்புணர்வுத் தொடர். உரைச்சித்திரங்கள், பேருரைகள் வடிவில் கோயிற்கலைகள், கல்வெட்டுச்செய்திகள் தொடர்ந்து ஒலிபரப்பு.
10. தஞ்சாவூர் இராஜராஜீசுவரம் முழுமையான ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு பல புதிய உண்மைகள் வெளிப்படுத்தப்பட்டன. இது தொடர்பான ஆய்வுக் கட்டுரை பாரதியார் பல்கலைக்கழகம் நிகழ்த்திய வரலாற்றாசிரியர்களுக்கான புத்தொளிப் பயிற்சியின் நிறைவுரையாக வழங்கப்பட்டது. மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் கலை வரலாற்றுத் துறை நிகழ்த்திய கருத்தரங்கிலும் இது குறித்த ஆய்வுக் கட்டுரை இடம்பெற்றது.
11. தமிழ்நாட்டு வரலாற்று ஆய்வாளர்களை ஒன்றிணைக்கும் நோக்குடன் பேராசிரியர் எ. சுப்பராயலுவுடன் இணைந்து தமிழகத் தொல்லியல் கழகம் 1991இல் தோற்றுவிக்கப்பட்டது. அதன் சார்பில் வெளியான ஆவணம் முதல் இரண்டு இதழ்கள் டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையத்தால் வெளியிடப்பட்டன.

**1992-2002க்கு இடைப்பட்ட காலப் பணிகள்**

1. பழுவேட்டரையர்கள் பற்றிய ஆய்வு அவர்தம் கலைப் படைப்புகளையும் விரிவான அளவில் பெற்றுப் பழுவூர் அரசர்கள், கோயில்கள், சமுதாயம் என்ற தலைப்பில் நூலாக வெளிப்பட்டது.
2. கல்வெட்டுகள், சிற்பங்கள், இலக்கியங்கள் வழங்கும் தரவுகள் கொண்டு சோழர் கால ஆடற்கலை ஆய்வு நிறைவு. அது குறித்த நூல் தமிழ்நாட்டரசின் பரிசு பெற்றது.
3. 1993இல் டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையத்தின் ஆய்விதழாக வரலாறு அறிமுகம்.
4. களப்பிரர்காலமாகவும் இருண்டகாலமாகவும் அடையாளப்படும் பொதுக்காலம் 300க்கும் 600க்கும் இடைப்பட்ட தமிழ்நாட்டு வரலாற்றைக் கல்வெட்டு, இலக்கியம், தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் உருவாக்கல்.
5. பல்லவர், சோழர் காலக் கட்டடக்கலை, சிற்பக்கலை பற்றிய விரிவான ஆய்வுகள். இலங்கை கலாச்சாரத் திணைக்களப் பன்னாட்டுக் கருத்தரங்கில் அவை குறித்த உரை. அவர்தம் வெளியீடாகக் கட்டுரைகள்.
6. மாமல்லபுரம் தருமராஜரதம் குறித்த முழுமையான ஆய்வுநூலாக அத்யந்தகாமம் வெளியிடல்.
7. திருமுறைகளில் ஆடற்கலை தொடர்பான புதிய ஆய்வுகள். உலக சைவ மாநாட்டில் கட்டுரைகள்.
8. தமிழ்நாட்டுக் கோயில்களில் 1982-2002க்கு இடைப்பட்ட 20 ஆண்டுக் காலத்தில் ஏறத்தாழ 600 புதிய கல்வெட்டுகள் கண்டறியப்பட்டதுடன், ஏற்கனவே பிறரால் பதிவு செய்யப்பட்ட கல்வெட்டுகளின் விட்டுப்போன தொடர்ச்சிகள் அறியப்பட்டுப் பதிவு செய்யப்பட்டன.

9. சுருக்கங்கள் மட்டுமே வெளியாகிப் பாடங்கள் வெளிவராத பல தமிழ்நாட்டுக் கோயில்களின் கல்வெட்டுகள் 'பதிப்பிக்கப்படாத பாடங்கள்' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டன.

**2003-2014க்கு இடைப்பட்ட காலப் பணிகள்**

1. தமிழ்நாட்டிலுள்ள 105 குடைவரைகளிலும் முறையான களஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு மகேந்திரர் குடைவரைகள், தென்தமிழ்நாட்டுக் குடைவரைகள், மதுரை மாவட்டக் குடைவரைகள், தென்மாவட்டக் குடைவரைகள், புதுக்கோட்டை மாவட்டக் குடைவரைகள், மாமல்லபுரம் குடைவரைகள், பல்லவர் பாண்டியர் அதியர் குடைவரைகள் எனும் ஏழு விரிவான ஆய்வுத் தொகுதிகள் வெளியிடல். இதன் வழிப் புதிய சிற்பத்தொகுதிகள், கல்வெட்டுகள், கருத்துருக்கள் வெளிப்படல்.
2. 60க்கும் மேற்பட்ட தமிழ்நாட்டுக் கோயில்கள் முழுமையான அளவில் ஆய்வு செய்யப்பட்டு ஆய்வேடுகள் உருவாக்கம். அவற்றுள் சில நூல்களாகவும் வெளியாகியுள்ளன.
3. தமிழ்நாட்டுக் கோயில்களில் இக்காலகட்டக் களப்பணிகளின்போது மேலும் 400 புதிய கல்வெட்டுகள் கண்டறியப்பட்டதுடன், ஏற்கனவே பிறரால் பதிவு செய்யப்பட்ட கல்வெட்டுகளின் விட்டுப்போன தொடர்ச்சிகள் அறியப்பட்டுப் பதிவு செய்யப்பட்டன.
4. தமிழ்நாட்டுக் கலை வரலாற்றைத் தொகுக்கும் பணியின் ஒருபடியாகக் காவிரிக்கரையோரக் கட்டடக்கலை, சிற்பக்கலை, ஆடற்கலை, வார்ப்புக்கலை, கல்வெட்டுகள் குறித்த விரிவான ஆய்வுகள்.
5. கல்வெட்டுச்சான்றுகள் கொண்டு பொ. கா. 600க்கும் 1300க்கும் இடைப்பட்ட திருச்சிராப்பள்ளி மாவட்ட வரலாறு உருவாக்கம்.
6. வரலாறு ஆய்விதழின் வெள்ளி விழா ஆண்டை முன்னிட்டு ஆய்வு மையம் கண்டறிந்த புதிய கல்வெட்டுப் பாடங்களின் முதற் தொகுதி தயாரிப்பு.
7. வரலாற்று நோக்குடைய கணினி, பொறியியல் இளைஞர்களின் துணையுடன் வரலாறு டாட் காம் திங்கள் மின்னிதழ் உருவாகி நூற்றுக்கும் மேற்பட்ட தொகுதிகள் இணைய தளத்தில் உள்ளமை.
8. தமிழ்நாட்டுக் கலைவரலாற்றின் தோற்றம், வளர்ச்சி, கொடுக்கல், வாங்கல் பற்றிய புரிதல்களுக்காக இந்திய, கீழ்த்திசை நாட்டுக் கலைப் படைப்புகள் பற்றிய களஆய்வு.
9. வரலாற்றுச் சிறப்புடைய சிலரின் ஆளுமை ஆய்வுகள் (மகேந்திரர், அப்பர்).

**எதிர்கால நோக்குகள்**

1. தமிழ்நாட்டுக் கலைவரலாற்றை முழுமை செய்தல்.
2. ஆய்வு மையத்தால் புதிதாகக் கண்டறியப்பட்ட கல்வெட்டுகளின் இரண்டாம் தொகுதி வெளியிடல்.
3. இந்தியப் பார்வையில் தமிழ்நாட்டுக் குடைவரைகள் பற்றிய தெளிவான சிந்தனைகளை நூலாகப் பதிவுசெய்தல்.
4. பதிப்பிக்கப்படாமல் இருக்கும் மையத்தின் ஆய்வுக் கட்டுரைகளைத் தொகுத்து நூல்களாக்கல்.

# 16. Index of The Journal of Tamil Studies

VOL. 33- 42 பி. கவிதா

## TITLE INDEX


1. A Case of Misinterpretation: Ainkurunuru 89.

- Kamil V. Zvelebil.

PP. 1 - 4; Vol. 33 ; June 1988.

2. A Comparative Study of Emerson's Nature and Tiru. Vi. Ka's Murukan Allatu Alaku

- Solayan, M.

PP. 49 - 52 ; Vol. 36 ; December 1989.

3. A Comparative Study of the Dramatic Elements in John Donne's Love Poems and Tamil Akam Poems.

- Solayan, M.

PP. 12 - 16 ; Vol. 35 ; June1989.

4. A Comparative Study of the Treatment of Love in John Donne's Poems and Tamil Akam Poems.

- Solayan, M.

PP. 23 - 37; Vol. 33 ; June 1988.

5. A Grammar of Dravido Harappan Writing.

- Clyde Ahmad Winters.

PP. 53 - 71 ; Vol. 35 ; June1989.

6. A Note on Chandesvara, A Minor Deity in the Shiva Temple –from Epigraphs.

- Swaminathan, S.

PP. 55 -58; Vol. 42; December 1992.

7. A Preliminary Study of the Madrasis in Guyana.

- Visswanathan, E. Sa.

PP. 27 - 44 ; Vol. 34 ; December 1988.

8. A Proto Dravidian Reading of the Fish Signs of the Indus Script.

- Rauff, J. V.

PP. 1 - 2; Vol. 38; December 1990.

9. A Second Indian Language - for whom and why?.

- Shanmugam pillai, M.

PP. 30 - 40; Vol. 38; December 1990.

10. A Typological Schema for the Nikantu Tradition.

- Gregory James.

PP. 28 - 32 ; Vol. 36 ; December 1989 .

11. An Encyclopaedic Range of Bharathidasan

- Perumal, V.

PP. 35 - 42; Vol. 39; June 1991.

12. Ancient Dravidian: An Introductory Grammar of Harapppan with vocabularies

- Clyde Ahmad Winters.

PP. 1-23; Vol. 41; June 1992.

13. Ancient Dravidian: An Introductory Grammar of Harappan with vocabularies - II

- Clyde Ahmad Winters.

PP. 1 -23; Vol. 42; December 1992.

14. Bibliographical activities in Tamil

- Subramanian, S.V.

PP. 64 - 80; Vol. 37; June 1990.

15. Case in Tamil – (Based on 'Government and Binding Theory')

- Vimala Devi, S.

PP. 25 -40; Vol. 42; December 1992.

16. Child Tamil

- Shanmugam Pillai, M.

PP. 73 - 83 ; Vol. 34 ; December 1988.

17. Coherence in Bharathi's Prose

- Shanmugam, C.

PP. 46 - 63; Vol. 37 ; June 1990.

18. Comparative Dravidian Phonology and Tolkappiyam

- Shanmugam, S.V.

PP. 1 - 10 ; Vol. 36 ; December 1989 .

19. Condition of Hindu women in Tamil Society (Pre-British Period)

- Jagadeesan, N.

PP. 63 - 66 ; Vol. 36 ; December 1989.

20. Evolution of Gopura in Temple Architecture

- Velusamy Suthanthiran, A.

PP. 28 - 38; Vol. 35 ; June1989.

21. Evolution of the Concept of God in Bharathidasan.

- Parameswaran, P.

PP. 20 - 26; Vol. 39; June 1991.

22. Folk speech and Literature: the case of Tamil

- Jaya, V.and Karunakaran, K.

PP. 12 -24 ; Vol. 37 ; June 1990.

23. Indigenous Gold in Ancient Tamil Country

- Selvaraj, C..

PP. 29 - 40 ; Vol. 37 ; June 1990.

24. Inscriptions on the Alienation of Land Holdings and Migration of Skilled Professionals.

- Swaminathan, S.

PP. 23 - 26 ; Vol. 34 ; December 1988.

25. Jainism under Paranthaka Cola I (907 -955 AD)

- Swaminathan, S..

PP. 41 - 45 ; Vol. 37 ; June 1990.

26. Karai – An Explanation

- Manickam, V.

PP. 47 - 52 ; Vol. 35 ; June 1989.

27. Lajja Gowri - Korravai

- Samy, P.L.

PP. 41 -54; Vol. 42; December 1992.

28. Legal Priciples as laid down in Tirukkural

- Muthuswami, E.S.

PP. 25 - 28 ; Vol. 37 ; June 1990.

29. My Father

- Ammani Subramanian

PP. 1-3; Vol. 40; December 1991.

30. Pavanantis's Nannul and the Graeco Roman Classics : A Comparative Study.

- Sripathi. M.K.

PP. 1 - 11 ; Vol. 37 ; June 1990.

31. Paventar Bharathidasan on Motherland and mother Tongue

- Venkatachalam, M.S.

PP. 43 - 48; Vol. 39; June 1991.

32. Prof.S.Vaiyapuri Pillai – An Objective Researcher

- Radha Chellappan

PP. 42-49; Vol. 41; June 1992.

33. Prof. S.Vaiyapuri Pillai and the Tamil Lexicon

- Subramanian, P.R.

PP. 24-34; Vol. 41; June 1992.

34. Shakespeare in Tamil Translation, the myth and the reality

- Ravindranathan, S.

PP. 81 - 90; Vol. 37 ; June 1990.

35. Since the Reportive Marker is a Copula Verbal

- Kothandaraman, R.

PP. 67 - 72 ; Vol. 33 ; June 1988.

36. Social Consciousness in Bharathidasan's Kutumpavilakku

- Veerasami, V.

PP. 27 - 34; Vol. 39; June 1991.

37. Social Stratification of Folk Beliefs in Tamil

- Jeya, V.

PP. 41 - 64; Vol. 38; December 1990.

38. Sumerian Si – in and Old Tamil Cin: A Study in the Historical Evolution of the Tamil Verbal System.

- Loganatha Muttarayan, K.

PP. 45 - 72 ; Vol. 34 ; December 1988.

39. Tamil Exile Literature in Germany

- Franz – Helmut Richter.

PP. 3 - 7; Vol. 38; December 1990.

40. The Atiyamans through the Ages

- Manickam, V.

PP. 5 - 10 ; Vol. 33 ; June 1988.

41. The Depiction of Underpreviledged (Pallas and Paraiyas) in Tamil Literature upto 1950 : A

historical view

- Mariappan, A.

PP. 59 -70; Vol. 42; December 1992.

42. The Dravidian and Mongolian Linguistic Comparison

- Jaroslav Vacek.

PP. 22 - 27 ; Vol. 36 ; December 1989 .

43. The Dravidian Language and the Harappan Script

- Clyde Ahmad Winters.

PP. 11 - 21 ; Vol. 36 ; December 1989 .

44. The Existentialistic trends in Indra Parthasarathi's Plays

- Ravindranathan.

PP. 22 - 29; Vol. 38; December 1990.

45. The Fury of Wars in Ancient and Medieval Tamil Country.

- Selvaraj, C.

PP. 15 – 22 ; Vol. 34 ; December 1988.

46. The Insights of Prof.S.Vaiyapuri pillai

- Prema Nandakumar.

PP. 35-41; Vol. 41; June 1992.

*(to be continued)*

*தொகுப்பு: பி. கவிதா, நூலகர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 600 113.*

## 17. உலகத் தமிழாராய்ச்சி நிறுவன முனைவர் பட்ட ஆய்வேடுகள்

*இரா. பெருமாள் சாமி*

### *112. தற்காலக் கவிதைகளில் இலக்கியக் கொள்கைகள்*

*மா. மார்த்தாண்ட பூபதி, 2007, 2012, 21.03.2013 முனைவர் தி. மகாலட்சுமி, சென்னைப் பல்கலைக்கழகம் ப.IV + 243. ''வாழ் நிலைமையே சிந்தனையைத் திர்மானிக்கிறது'' என்ற வகையில் தமிழ்ச்சமூகத்தின் வாழ்க்கைமுறை, சமூக அமைப்பு, உற்பத்தி உறவுகள் ஆகிய நிலைமைகளில் இருந்தே மேற்கண்ட இலக்கியக் கொள்கைகளும் உருவாகின்றன. தற்காலத் தமிழ்க் கவிதைகளின் வழியே, அவற்றின் போக்குகளின் வழியே கவிதைக் கொள்கைகளையும், சமூகப் பின்புலங்களையும் அறிந்து கொள்ளும் நோக்கமாகக் கொண்டு தற்காலத்தில் தோன்றியுள்ள இலக்கியப் போக்குகளை ஆராய வேண்டும் என்பதும், அதன்வழி காலத்துக்கேற்ற இலக்கியக் கொள்கையை அறியலாம் என்னும் முயற்சியைக் கருதுகோளாக அமைந்து, நவீன இலக்கியம் சார்ந்த திறனாய்வு நூல்களை ஆய்வுத் தரவுகளாகவும் கொண்டு தொகுத்தல் முறை, விளக்கமுறை, சமூகவியல் முறை, ஒப்பீட்டுமுறை, உளவியல் முறை போன்ற அணுகுமுறைகளைக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

*1. காலந்தோறும் தமிழ்க் கவிதை 2. நவீன கவிதைகள், 3. மின் நவீனத்துவக் கவிதைகள், 4. தலித் கவிதைகள் 5. பெண்ணியக் கவிதைகள் என ஐந்து இயல்களை உள்ளடக்கியதாக இவ்வாய்வேடு அமைகிறது. தமிழ்க்கவிதையானது நீண்ட தொடர்ச்சியுடையது. சங்க காலக் கவிதை தொடங்கி இன்றைய கவிதை வரை அதன் பாதை தொடர்கிறது எனவும், தற்காலக் கவிதையான இன்றைய கவிதைகள் புதியபோக்கினைக் கொண்டு திகழ்வதாகவும் அவை தமக்கெனத் தனி வரலாற்றைக் கொண்டுள்ளதாகவும், பரிணாமவளர்ச்சியில் பலவிதங்களில் வளர்ந்து இன்றைய நிலையை அடைந்துள்ளதாகவும் தற்கால கவிதைகளின் இலக்கியக் கொள்கை பற்றி இவ்வாய்வு தெளிவாக விளக்குகிறது.*

*★ ஆய்வேட்டின் தலைப்பினைத் தொடர்ந்து, ஆய்வாளர், ஆய்விற்குப் பதிவு செய்த ஆண்டு, ஆய்வினை மதிப்பீட்டிற்கு அளித்த ஆண்டு, பட்டம் பெற்ற ஆண்டு, பல்கலைக் கழகம், ஆய்வேட்டின் பக்கங்கள், நெறியாளர் என்பன தரப்பெற்றுள்ளன.*

### *113. சங்க இலக்கியத்தில் பாண் மரபினர்*

*க. கிரிவாசன், 2009, 2012, 02.05.2013 . முனைவர் கரு. அழ. குணசேகரன், செ.ப.; பக். IV + 219.*

*சங்க இலக்கியத்தில் பதிவு செய்யப்பட்டவை எல்லாம் இன்றும் இருக்கின்றனவா? என்று ஆராய்வது இந்த ஆய்வின் முக்கிய நோக்கமாகும். அதற்குச் சங்க இலக்கியத்தில் கலைகள் மற்றும் கலைஞர்கள் பற்றிய முழுமையான ஆய்வைச் செய்வதே தேவையாகும், பாண் மரபினர் பற்றி*

ஆராய்வதே இவ்வாய்வாளரின் நோக்கமாக அமைந்து, இதற்கு சங்க இலக்கியங்களுக்கு உரை வகுத்த பெருமக்களில் சிலர் பாண்மரபினரைப் பற்றிச் சரிவரப் பதிவு செய்யாமல் போனது தான் ஆய்வுச் சிக்கலாக அமைந்ததாகவும், மேலும் கிடைக்காமல் போன சில பாடல்கள் தாம் காரணம் என்றும் ஆய்வாளர் சுட்டுகிறார்.

இந்த ஆய்வேடு முன்னுரை முடிவுரை நீங்கலாக நான்கு இயல்களைக் கொண்டுள்ளது. அவை : 1. பாண் விளக்கமும் பாண் உருவாக்கமும் 2. பாண் மரபும் புலவர் மரபும் 3. பாண் மரபினரின் கலைக் கூறுகள் 4. பாண் மரபினரின் சமூக உறவு நிலை என்ற தலைப்புகளில் ஆய்வு மேற் கொள்ளப்பட்டிருக்கிறது.

இவ்வாய்வேட்டில் ஒவ்வொரு இயல்களுக்கும் தனித் தனியாக முடிவுரையும் அவற்றை மீண்டும் தொகுத்து இறுதியாக ஒரு முடிவுரையும், முன்னுரையில் இரண்டு முன்னுரைகள் கொடுத்திருப்பதும், துணை நூல் பட்டியலில் பதிப்பு, ஆண்டு போன்றவை இடம்பெறாதது சரியான முறையில் ஆய்வு நெறிப்படுத்தப்படவில்லை எனத் தோற்றமளிக்கிறது. மேலும் ஆய்வாளர் உறுதிமொழி, நெறியாளர் உறுதிமொழியில் நாள், இடம் போன்றவை நிரப்பப்படாமல் உள்ளதும் ஆய்வேடு தயாரிப்பில் முறையான கவனம் கொள்ளப்படவில்லை எனத்தெரிகிறது.

### 114. இலக்கியம் கற்பித்தல்: முந்தைய போக்கும் எதிர்கால அணுகுமுறையும்

கே. ஜெகத்ரட்சகன், 2005, 2010 10.05.2013, முனைவர் தி. மகாலட்சுமி. செ.ப., V + 288.

கற்பித்தல் சமூகத்தின் தொடர்நிகழ்வாயினும் அதிக விவாதத்திற்கும் மாற்றத்திற்கும் உட்பட்ட ஒன்றாகும். விவாதமும் மாற்றமும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டவை, ஆகவே "இலக்கியம் கற்பித்தல்" என்னும் இந்த ஆய்வில் முந்தைய போக்கும், எதிர்கால அணுகுமுறையும் ஆய்வின் முக்கிய நோக்கங்களாகக் கருதியிருக்கிறார் ஆய்வாளர். ஒன்றன் மாற்றம் அதன் வளர்ச்சியைத் தீர்மானிக்கும். ஏற்கனவே இருந்து வருகின்ற கற்பித்தல் நிலைகளை விளக்குவதும், கற்பித்தலில் மாறுதல்களை உண்டாக்குவதும் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாய்வேடு முன்னுரை, முடிவுரை நீங்கலாக 1 . இலக்கியம் 2. கற்பித்தல் 3. சொற்களின் வழி கற்பித்தல் 4.திணை மற்றும் உத்திகளின் வழி கற்பித்தல் 5. புதுக்கவிதை மற்றும் சிறுகதை கற்பித்தல் என ஐந்து இயல்களைக் கொண்டு அமைந்துள்ளது.

இவ்வாய்வின் வழியே கிடைக்கப் பெற்ற முடிவுகளைத் தொகுத்து வழங்கியுள்ளார். அவற்றில் எந்த மொழிக்கும் இலக்கியம் தேவை என்பதும், ஒரு மொழி நிலையானதாக இருப்பினும், அம்மொழியின் வழியாகக் காலந்தோறும் மேற்கொள்ளப் பெறும் இலக்கிய ஆக்கம், சொற்பயன்பாடு,

பாடுபொருள் போன்றவை மாற்றத்திற்குள்ளாகின்றன என்பதையும், ஒரு மொழியின் மேன்மை அதன் இலக்கியத்தின் மூலம் எய்தப்பட்டு எவ்வகை இலக்கியமாயினும் அது நோக்கமின்றிப் படைக்கப்படுவதில்லை அதற்குரிய நோக்கத்தோடு படைக்கப்படுவதாக ஆய்வாளர் தனது கருத்தை முன்வைக்கிறார்.

காலந்தோறும் தொடர்ந்து மாற்றத்திற்குள்ளாகும் ஒன்றாகக் கற்பித்தலைக் கூறியிறுப்பது ஆய்வின் முடிவாக அமைந்துள்ளது.

**115. அகநானூறு காட்டும் வரலாற்றுக் கூறுகளும் பண்பாடும்**

*சு. ஆண்ரூ சுந்தராஜ், 2009 2012, 10.06.2013, முனைவர் தி. மகாலட்சுமி,* செ.ப., பக்கம் V + 244.

பண்டைத் தமிழரின் பண்பாட்டுச் செழுமை, வாழ்வியல் கொள்கைகள், வாழ்வியல் முறைகள், நம்பிக்கைகள், பண்டைய உணவுமுறைகள், அயல்நாட்டார் குறிப்புகள், அரசர்கள், வணிகர்கள், நிருவாகங்கள் ஆகியவற்றை வெளிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது இவ்வாய்வேடு. முன்னுரை, முடிவுரை நீங்கலாக இந்த ஆய்வேடு ஐந்து இயல்களைக் கொண்டுள்ளது. 1. அகநானூறு காட்டும் அமைப்பும் சிறப்பும் என்ற முதலியலில் சொற்பொருள் விளக்கங்கள், தனிநிகழ்வுகள், ஐந்திணை ஒழுக்கம், அகம் பற்றிய சிறப்புச் செய்திகள், மூன்று வகையான பாடல் அமைப்பு முறைகள், சமுதாய அமைப்பு, இயற்கைவளம் முதலான செய்திகள் ஆராயப்பட்டுள்ளன. 2. இரண்டாம் இயல் அகநானூறு காட்டும் வரலாற்றுச் செய்திகள் பற்றி ஆய்கிறது. இதில் வரலாற்று அடிப்படையான ஆதாரங்கள், பண்டைத்தமிழர் வரலாறு, வடக்கத்திய வரலாறு, சங்கால புலவர்கள் வரலாறு, அயல்நாட்டார் குறிப்புகள், சேர, சோழ, பாண்டியர் வரலாற்றுப் பின்புலம், சமூகப் பொருளாதார நிலை, அரசியல் நிலை ஆகியவை விளக்கப்படுகிறது. 3. அகநானூறு காட்டும் தமிழர் வாழ்வும் பண்பாடும் பற்றி மூன்றாம் இயல் ஆய்கிறது, இதில், ஐந்திணைப் பாடுபாடு, பண்டைத் தமிழர் வழிபாடு, வாழ்ந்த நிலை, சமுதாய நிலை, திருமணம், விருந்தோம்பல், பண்பாடு ஆகியவை விளக்கப்படுகின்றன. 4. அகநானூறு காட்டும் பொருளியலும் பண்பாடும் பற்றி நான்காம் இயல் ஆய்கிறது. இதில் , பொருளின் இன்றியமையாமை, உழவுத் தொழில், கால்நடை, நிலப்பாகுபாடு, கால்நடையுடைமை, ஆடைகளும், தொழில்களும், உணவுமுறைகள், வாணிபம், யவன் குடியிருப்புகள் முதலான செய்திகள் ஆயப்படுகின்றன. 5. இறுதி இயல் அகநானூறு காட்டும் உரோமப் பண்பாடு பற்றி ஆய்கின்றது. இதில், யவனர்கள் வாணிகம், உரோமானியக் குடியிருப்புகள், கிரேக்கக் குடியிருப்புகள், பண்பாட்டின் படிநிலைகள் ஆகியவை விளக்கப்பட்டுள்ளன.

முடிவாக இயல்தோறும் கண்டறிந்த உண்மைகள் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

**116. சங்க இலக்கிய உரையாளர்**

*ச. கண்ணதாசன், 2006, 2012, 30.10.2013 , தி. மகாலட்சுமி, செ.ப., IV + 349.*

பாட்டும் தொகையும் சங்க இலக்கியக் கருவூலங்களாகும். இவற்றைப் பொருள் தெளிவுடன் அறிந்து கொள்வதற்கும் புரிந்து கொள்வதற்கும் பேருதவியாக இருப்பவை அவற்றிற்குத் தோன்றிய உரைகளாகும். மூல நூலாசிரியரின் மனக் கருத்துக்களை இன்று உரையாளர் உதவியாலேயே அறிந்து இன்புறுகின்றோம். உரையாசிரியர்கள் உதவி இல்லையாயின் மிகுதியான தமிழ்நூல்கள் விளக்கமில்லாமல் இருந்திருக்கும். பண்டைத் தமிழிலக்கியங்களைத் தமிழுலகம் அறிய வழிவகை செய்தவர்கள் உரையாசிரியர்களே என்ற பொருண்மையில் அவர்களின் உரைத்திறனை வெளிப்படுத்துவதோடு சங்க இலக்கிய ஏனைய உரையாசிரியர்களின் உரைகளை மதிப்பீடு செய்வது ஆய்வின் நோக்கமாகும்.

இவ்வாய்வில் முன்னுரை, நிறைவுரை நீங்கலாக 1. சங்க இலக்கிய உரைகளும் உரையாசிரியர்களும் 2. குறுந்தொகை, உ.வே. சாமிநாதையர் உரைத்திறன். 3. நற்றிணை - பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் உரைத்திறன் 4. பதிற்றுப்பத்து - ஔவை சு. துரைசாமிப்பிள்ளை உரைத்திறன் என ஐந்து இயல்களாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நிறைவாக, தொடக்ககாலத்தில் பழையவுரைகளைப் பதிப்புச் செய்து அவற்றைப் பாதுகாப்பதையே மேலான தெனக் கருதினர் எனவும், சங்க நூல்களுக்கான பழைய உரைகளைப் பாதுகாத்துப் பதிப்பித்தவர்களில் உ.வே.சா. குறிப்பிடத்தக்கவராகவும் அவருக்குப் பின் வந்த உரையாசிரியர்கள் மாணவர்களுக்குப் பாடம் கற்பிக்கும் நிலையில் உரைகளைச் செய்தாகவும் சான்றளிக்கிறார். சங்க இலக்கியத்தில் ஆய்வுகள் விரிவடைந்த போது, ஆய்வுச் செய்வோருக்கு ஏற்ற வகையில் ஆராய்ச்சியுரைகள் தோன்றின என்றும். அண்மைக் காலங்களில் உரையெழுதும் உரையாசிரியர்கள், தங்களுக்கு முன்பிருந்த உரைகளே அடித்தளமாக அமைந்ததாகவும், சங்க நூல்களுக்கு 93 உரையாசியர்கள் உரையெழுதியாதாகவும், 198 உரைப்பதிப்புகள் வெளிவந்துள்ளன எனவும் ஆய்வாளர் சுட்டிக் காட்டுகிறார்.

உரையாளர்களின் உரைத்திறன் மூலமாகப் பண்டைத் தமிழர் மரபு, பண்பாடு, பழமொழி, பழக்கவழக்கம், இயல்பு, கல்வெட்டுச் செய்தி, அறிவியல் சிந்தனைகள் வரலாற்றுக் குறிப்புகள் போன்றவற்றை வெளிப்படுத்துவாக ஆய்வேடு அமைந்துள்ளது. குறிப்பாக, பின்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை ந. சஞ்சீவியின் சங்க இலக்கிய அட்டவணையின் தொடர்ச்சியாக அமைந்துள்ளது பாராட்டுக்குரியது.

- (தொடரும்)

---

*தொகுப்பு: இரா. பெருமாள் சாமி, நூலகர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை - 600 113.*

## 18. நூல் மதிப்புரை

| | | |
|---|---|---|
| நூல் | : | உலகம் பரவிய தமிழின் வேர் கல் (1 - 4) |
| ஆசிரியர் | : | முனைவர் கு. அரசேந்திரன் |
| பதிப்பு | : | 1997 - 2001 |
| விலை | : | 615 |
| பக்கங்கள் | : | 860 |
| பதிப்பகம் | : | இரத்தினம் அறக்கொடை நிலையம் (ம) ஒன்றிய தமிழர் தோழமை, ஆத்திரேலியா. |

முனைவர் கு.அரசேந்திரன் அவர்களின் 'உலகம் பரவிய தமிழின் வேர் கல்' என்னும் நூல் நான்கு தொகுதிகளாக 1997 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை வெளிவந்துள்ளது. முதற் தொகுதியை இரத்தினம் அறக்கொடை நிலையம்(இங்கிலாந்து) வெளியிட்டுள்ளது. முதல் தொகுதி தமிழக அரசின் பரிசு பெற்ற நூலாகும். தமிழ் மொழி வேர்ச்சொல் ஆய்வில் குறிப்பிடத்தக்க நூலாக இந்நூல் விளங்குவதை இத்துறை அறிஞர்கள் பலரும் எடுத்துரைத்துள்ளனர். 2001ஆம் ஆண்டு வெளிவந்த இந்நூலைத் தற்போது அறிமுகப்படுத்துவதன் நோக்கம் வேர்ச்சொல் ஆய்வின் இன்றியமையாமையை உணர்த்துவதே. வேர்ச்சொல் ஆய்வு தமிழில் தனிப்பெரும் துறையாக வளரவில்லை. ஏனெனில் வேர்ச்சொல்லாய்விற்குத் தமிழ்ப் புலமையோடு பன்மொழிஅறிவும் மொழிநூற் பயிற்சியும் அறிந்திருக்க வேண்டியுள்ளது. மேலும் பெரும் உழைப்புக் கண்டவர்களே இத்துறையில் நிலைபெற்றிருக்கின்றனர். இத்துறை ஆய்வாளர்கள் மிக அருகிக் காணப்படுவதாலும் வேர்ச்சொல்லாய்வின் சிறப்பைத் தமிழ் கூறு நல்லுலகம் இன்னும் முழுமையாகப் பயன்கொள்ளவில்லை.

இன்று தமிழில் பல்கிப் பெருகிக் காணப்படுகின்ற சொற்களஞ்சியங்கள் மிகச் சிலவாகிய வேர்ச்சொற்களிலிருந்து வளர்ந்தவை. காலத்தால் முன்னுக்குச் செல்ல செல்ல அவ் வேர்ச் சொற்களின் உண்மை நிலையை நாம் தெளிவாகக் காண இயலும். அவ்வாறான மூல வேர்ச்சொற்களுள் குறிப்பிடத்தக்கதாக விளங்குவது கல் என்னும் வேர்ச்சொல். கல்என்ற வேர்ச்சொல் பல நூறு தமிழ்ச்சொற்களுக்கும் சிலநூறு பிறமொழிச்சொற்களுக்கும் மூலமாய் விளங்குவதை இந்நூல் விளக்குகிறது. 'கல்' என்னும் வேர்ச்சொல் 1. கருமை, 2. கூட்டம், 3. செலவு, 4. கூர்மை, 5. வெப்பம், 6. துளை என்னும் ஆறு அடிப்படைப் பொருள்களைக் கொண்டு பல நூறு தமிழ்ச்சொற்களைத் தோற்றுவித்துள்ளதாக இந்நூலாசிரியர்வரையறுக்கிறார்.

முதற்றொகுதியில் 'கல்' என்னும் சொல் கருமைப் பொருளை அடிப்படையாகக் கொண்டு தோற்றுவித்த சொற்கள் மட்டும் விளக்கப்படுகின்றன. கருமைப்பொருள் கல்லை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்த சொற்கள்,

கலை (குரங்கு, சுறாமீன், மர வைரம்), கல்(கறை), கறி (மிளகு), கருப்பை (எலி), கருவை, கரவு, கரப்பு, கரத்தல், கரந்தை (செம்மை கலந்த நீலநிறப் பூ), கரா (முதலை), கரி (யானை, குற்றம்), கவ்வை (எள், குற்றம்), கங்குல் (இரவு), கயம் (கரிக்குருவி), கசடு (குற்றம்), கச்சை (தழும்பு), கஞ்சகம் (கறிவேப்பிலை), கபிலை (புகர்நிறம்), களம் (மேகம், நஞ்சு), கள்வன் (நண்டு), கள்வர், கள்ளம், களவு, களங்கம், கார்-களரி, களிமண், கண், கடு(நஞ்சு), கடுகு, கடல், கழனி, கழுது, கழுதை, கழுகு, கால்(கருமை), காலம், காலன்(கூற்றுவன்), காலன் (வார்க்கோள்), காலன் (நஞ்சு), கானம் (மணம்), காயா, காசு (மணி), காக்கை, கார் (முகில், மழைக்காலம், கருமை), கார்கோள் (கடல்), காரி (நஞ்சு), காளகம், காளத்தி, காளி, காளை, காழ், காழகம் (கருமணல்), காழியர் (வண்ணார்,

பிட்டுவணிகர்), காழ் (பாசறைக்கால், அரண்மனைக்கால், ) முதலிய சொற்கள் கல்என்ற சொல்லை வேர்ச்சொல்லாகக் கொண்டு கருமை நிறம் பற்றிப் பெயர்பெற்றுள்ளன. இந்நூலாசிரியர் கல்லுடன் உறவுடைய தமிழ்ச்சொல்லை நூலின் முதற்பகுதியில் விளக்கிப் பிற்பகுதியில் இச்சொற்களுக்கு உலகமொழிகளுடன் உள்ள தொடர்பை விளக்கியிருப்பது தனிச்சிறப்பாகும். மேற்குறித்த சொற்களுள் 'கலை' என்ற சொல்லுக்குக்கருமைப் பொருளுடன் உறவுபடுத்தி இவ்வறிமுகத்தில் வேர்ப்பொருள் காட்டப்படுகிறது.

**நூலின் முற்பகுதி**

'கலை' என்னும் சொல்லுக்குப் புல்வாய், உழை, குரங்கு, சுறாமீன் முதலிய பொருள்களைக் கழக இலக்கியங்கள் குறிக்கின்றன. 'கலை' (புல்வாய், உழை) என்ற கலைச்சொல் புள்ளிமானைக் குறிக்கும். 'புள்ளிவரிக்கலை' (266:2) என *நற்றிணை* குறிப்பிடுகிறது. மானானது 'கலை' என அழைக்கப்படுதவற்கான காரணம் :- மானின் உடலில் கருநிறப் புள்ளிகள் காணப்படுவதாலேயே கருமைக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு அழைக்கப்பட்டுள்ளது.

'கலை' என்னும் சொல்லுக்குக் குரங்கு என்ற பொருளுமுண்டு. அதுவும் கரிய மையினைப் பூசியலொத்த முகத்தினையுடைய குரங்கையே கலை என்னும் சொல் குறிக்கும். *குறுந்தொகையும்* "மைபட் டன்ன மாமுக முசுக்கலை" (121; 2) எனக் குறிப்பிடுகிறது. அதைப் போன்று சுறாமீனும் கரிய நிறத் தோலுடன் காணப்படுவதால் அதுவும் கலை என்றே அழைக்கப்படுகிறது. குரங்கும், சுறாமீனும் கரியநிறத் தோலைக் கொண்டே கலை என அழைக்கப்பட்டுள்ளதாக இந்நூல் விளக்குகிறது.

**நூலின் பிற்பகுதி**

'*கல்*' என்ற வேர்ச்சொல் உலகமொழிகளில் cal, hul, kal, gal என நான்கு நிலைகளில் திரிந்து வழங்குகின்றது. தமிழில் உள்ள '*கல்*' என்ற சொல் எவ்வாறு கருமை அடிப்படையாகக் கொண்டு பல சொற்களைத் தோற்றுவித்ததோ அதைப்போன்று cal, hul, kal, gal என்ற நான்கு சொற்களும் கருமைப் பொருளை அடிப்படையாகக் கொண்டு தமிழில் வழங்கும் அதே பொருளில் உலக மொழிகளிலும் புழங்குகின்றன.

*ஆரிய மொழிகளில் பரவிய தமிழின் வேர்*

தமிழில் தோன்றிய கசம் என்ற சொல் kaca, kaza, kasa, kaja,gaja,kashas எனக் குறில் நிலையிலும், தமிழின் காசம் என்ற சொல் kaca,kaza, kasa, kasha எனவும் ஆரிய மொழிகளில் திரிந்து கருமைப் பொருளையே உணர்த்துகின்றன.

**ஆத்திரேலிய மொழியில் பரவிய தமிழின் வேர்**

தமிழில் வழங்கும் கலை என்ற சொல் கரிய மையைப் பூசியலொத்த குரங்கினைக் குறித்தது என மேலே விளக்கினோம். இச்சொல் ஆத்திரேலிய மொழியில் gule எனக் கரிய குறுங்கரடியையும் கொலுகோ (colugo) என லெமூர் குரங்கைக் குறித்தது. இச்சொல் லெமூர் குரங்கை எவ்வாறு குறித்ததென தெரியவில்லை என்று ஆக்சு போர்டு அகராதி அறிஞர்கள் சுட்டுகின்றனர். இந்நூலாசிரியர் கல் வழித் தோன்றிய கலை என்ற சொல்லே gule எனவும் colugo எனவும் ஆத்திரேலிய மொழிகளில் வழங்குவதாகத் தமிழ் வேர்ச்சொல் மூலம் காட்டியுள்ளார்.

நண்டு என்னும் நீர்வாழ் உயிரி அதன் ஓட்டின் மேலுள்ள கரிய நிறத்தாலும் கரிய புள்ளிகளாலும் (கல்-கருமை நிறம்) கள்வன் எனவும் கடகம் எனவும் அலவன் எனவும் தமிழில் பெயர்பெற்றது. ஆத்திரேலியப் பழங்குடி மொழியில் karr, karraly என்னும் ஆட்சிகள் நண்டினைக் குறிக்கின்றன. இம்மொழியில் வழங்கும் இச்சொற்களின் வேர் தமிழில் வழங்கும் *கல்* (kal) என்பதை இந்நூலாசிரியர் விளக்கியுள்ளார்.

*பிற உலக மொழிகளில் பரவிய தமிழின் வேர்*

*கால்*என்னும் தமிழ்ச்சொல் *கோல்* எனமேலை ஆரியமொழியில் திரியும். coal என்னும் சொல்லுக்கு நிலக்கரி என்பது பொருள். ஆங்கில அகராதிப் பெருமனார் கீற்றும், ஆனியனும் coal என்ற சொல் எவ்வாறு வெவ்வேறு மொழிகளில் புழங்குகின்றன என்பதைக் குறித்துள்ளனர். ஆனால் அச்சொல்லுக்கான வேர் மூலத்தைக் காட்டவில்லை. coal என்னும் சொல் எவ்வாறு கருமைப் பொருளை உணர்த்தியது என்பதை விளக்க இயலவில்லை. இச்சொல்லுக்குத் தமிழே மூலம் என இந்நூலாசிரியர் விளக்குகிறார். கரியது என்று பொருள் தரும் கால, கோல் என்னும் சொற்கள் ஆங்கிலத்தில் coal எனவும் செருமன், பிரென்ஞ்சு, தச்சு மொழிகளில் kohl எனவும் அரபு மொழியில் kohl எனவும் வழங்குவதாகவும் *கல்* என்ற கருமைப்பொருளைத் தரும் தமிழின் வேரே பிற மொழிகளில் பரவி வழங்குவதாகக் குறித்துள்ளார். ஆங்கில வேர்ச்சொல் ஆய்வாளர்கள் coal என்னும் சொல் எவ்வாறு கருமைப் பொருளை உரைத்ததென்று கூற இயலாத நிலையில் இந்நூலாசிரியர்தமிழின் வேர்கல்லைக்காட்டியிருப்பது நோக்கத்தக்கது.

**coca-colaவில் உள்ள தமிழ்**

coca-cola என்னும் சொல்லில் உள்ள cola என்ற சொல் தமிழின் கல்-காள்வழி தோன்றியதாக இந்நூலாசிரியர் விளக்குகிறார். cola என்னும் சொல் மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள மரத்தைக் குறிக்கும். இம்மரத்துக் கரிய விதையின் சாரத்தை இக்குடிப்பில்(drinks) சேர்ப்பதால் coca-cola என அழைக்கப்படுகின்றது. ஆக்சுபோர்டு அகராதி cola என்ற சொல்லுக்குக் கரிய விதையினையுடைய மரம் எனப் பொருளுரைக்கின்றது. காள் என்னும் சொல் கருமையைக் குறிப்பதாலேயே காள் வழி தோன்றிய cola என்னும் சொல்லும் கரியவிதையைக் குறித்துள்ளதாக இந்நூலாசிரியர் விளக்குகிறார்.

**ஆய்வு முடிபு**

ஆத்திரேலியப் பழங்குடி மொழிகள் உள்ளிட்ட உலகமொழிகள் பலவற்றில் தமிழின் வீச்சு மிகுதியாக இருப்பதை இந்நூலாசிரியர் இவ்வாய்வின் வழி கண்டுள்ளார். உலகவாரியின்(Lahovary) நூற்சான்றுகளுடனும் ஆங்கில ஆக்சுபோர்டு அகர முதலி, அறிஞர் பெருமக்கள் சொற்கோவை, ஆய்வுக் குறிப்புகள் முதலியவற்றைக் கொண்டும் தம் ஆய்வைக் கொண்டுசென்றுள்ள திறத்தை இந்நூல் தெளிவாகக் காட்டுகிறது. இந்நூலாசிரியர் தமிழ் மூலத்தைச் சீனம் உள்வாங்கிக் கொண்டு தன் போக்கில் ஆற்றொழுக்காகத் தமிழின் பொருள்மரபில் நடையிடுவதாகவும், பாலி, சமற்கிருத, சிங்கள, இந்தி ஆகிய மொழிகளில் தமிழின் சிதைந்த வடிவங்களை எடுத்துக்கொண்டு விருப்பம் போல் இயங்கி வருவதாகவும் விளக்கியுள்ளார். ஒரு வழிநூலானது முன்னோர் நூலின் முடிபு ஒருங்கு ஒத்துப் பின்னோன் வேண்டும் வேறுபாடு(விகற்பம்) கூறி அழியாத மரபினதாய் விளங்க வேண்டும். இவருடைய ஆய்வும் கால்டுவெல், ஞானப்பிரகாசர், தேவநேயப் பாவாணர் போன்றோர் தம் வேர்ச்சொல் ஆய்வில் கண்ட மெய்ம்மைகளை அடியொற்றி வழிநூலாக அமைந்துள்ளது.

தமிழில் தோன்றிய சொற்கள் தமிழ் மொழியில் மட்டும் வழங்காது உலக மொழிகள் பலவற்றிலும் வழங்குவதை விளக்குவதினாலேயே இந்நூலுக்கு *உலகம் பரவிய தமிழின் வேர் கல்* எனப் பெயரிடப்பட்டுள்ளது. இந்நூலாசிரியர் முதல் தொகுதியில் கருமைப் பொருளையும், மீதமுள்ள மூன்று தொகுதியில் கூட்டம், செலவு, கூர்மை, வெப்பம், துளை முதலிய ஐந்து பொருள்களையும் விளக்குகிறார். *கல்* என்ற ஒற்றைச் சொல் பல நூறு தமிழ்ச் சொற்களைத் தோற்றுவித்த முறைமையினை இந் நான்கு தொகுதிகளையும் கற்பதின் வாயிலாக அறியலாம்.

---

*மதிப்புரை: த.தென்னவன், முனைவர்பட்ட ஆய்வாளர், சென்னைக் கிறித்தவக் கல்லூரி, தாம்பரம், சென்னை - 600059.*

# 19. REGULATIONS FOR SUBMISSION OF RESEARCH PAPERS

Scholars from all relevant academic fields of Tamil language, literature, fine arts, culture, architecture and society are insisted to submit high quality of Research papers that meet the following requirements :

- Original research findings, reports, review articles and like will be considered for publication.
- As it is an International journal, the authors are expected to keep the research papers to an International standard.
- All submitted manuscripts are subjected to a peer review process.
- Papers should be typed utilizing a standard, Unicode font only.
- In transcribing Tamil words or texts, contributors are requested to make use of the transliteration system adopted by the Madras University's *Tamil Lexicon* (Vol. I-VII 1924-1939).
- The glossary of words given in Tamil (either in conventional orthography or in transliteration system) may be given immediately following the quotation: e.g. Kuṭampai (குடம்பை) āṭūu aṟicol (ஆடூஉ அறிசொல்).
- Submission should not exceed 10 pages in length (typed double-spaced, with one inch margin).
- The author's biography in brief including qualifications, special field of research and e-mail address should be given.
- The author should submit the paper via e-mail (iits@tn.nic.in) to the chief editor at International Institute of Tamil Studies.
- Authors of papers selected for submission will be notified by e-mail.

**Prof. Dr. B. Raja**
Associate Editor
e-mail: kalaikhoraja@gmail.com

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை - 600 113.

## அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| சிதம்பர சபாநாத புராணம் | 80.00 |
| ஓங்கார விளக்கம் | 150.00 |
| திருப்பெருந்துறைப் புராணம் | 130.00 |
| திருவருட்பா இங்கித மாலை | 70.00 |
| சிவப்பிரகாச சுவாமிகள் | 100.00 |
| ஸ்ரீரங்கர் மகத்துவம் | 50.00 |
| திருவரங்கக் கலம்பகம் | 30.00 |
| திருவாட்போக்கிப் புராணம் | 150.00 |
| அகம்புற ஆராய்ச்சி விளக்கம் | 250.00 |
| கைவல்லிய நவநீதம் | 200.00 |
| வசனாலங்கார தீபம் | 200.00 |
| தைலவருக்கச் சுருக்கம் | 150.00 |
| சைவ பூஷண சந்திரிகை | 140.00 |
| வேதாந்த சூளாமணி | 150.00 |
| திராவிடப் பிரகாசிகை | 150.00 |
| வாசுதேவனமனனம் என்று வழங்கும் விவேகசாரம் | 220.00 |
| ஸ்ரீ பாலபோதம் | 220.00 |
| தேவாந்தப் பிரதீபம் | 250.00 |
| விசுவபிரம் புராணம் | 180.00 |
| பிரபந்தத் திரட்டு திருக்குதிரிசிய விவேகம் | 250.00 |
| மூலமும் உரையும் | 200.00 |
| நன்னெறி பதவுரை | 40.00 |
| நந்தனாரேலப் பாட்டு | 30.00 |
| ஸ்ரீ முருகானந்த சுவாமிகள் | 20.00 |
| Tamil Culture Part I | 250.00 |
| Tamil Culture Part II | 250.00 |
| Tamil Culture Part III | 250.00 |
| Tamil Culture Part IV | 250.00 |
| Tamil Culture Part V | 250.00 |
| Tamil Culture Part VI | 250.00 |
| Tamil Culture Part VII | 300.00 |
| Tamil Culture Part VIII | 250.00 |
| Tamil Culture Part IX | 300.00 |
| Tamil Culture Part X | 300.00 |
| Tamil Culture Part XI | 250.00 |




Edited & Published by the Director of International Institute of Tamil Studies, Chennai - 600 113 and Printed by Sri Saravana Printers, Chennai - 600 005. Cell : 94442 65471 E-mail : srisaravanaprinters2014@gmail.com